MR. SIVA. JOTHILINGAM
B.A. (Hons.) ..., Dip-IN-IA (BCIS),
Teacher,
Goodshepherd Convent,
COLOMBO-13.

# உலக முதலாளித்துவ நெருக்கடியும்

# நான்காம் அகிலத்தின் பணிகளும்

நான்காம் அகிலத்தின்
அனைத்துலகக்குழுவின்
முன்னோக்குகளின்
தீர்மானம்

ஆகஸ்டு 1988

MR. SIVA. JOTHILINGAM
B A (Hons) Po-Sc., Dip-IN-IA (BCIS),
Teacher,
Goodshepherd Convent,
COLOMBO-13.

# நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் முன்நோக்குகளின தீர்மானம்!

## ஆகஸ்ட் - 1988

1. *1938*–செப்டம்பரில் நான்காம் அகிலம் நிறுவப்பட்டு ஒரு அரை நூற்றுண்டின் பின்னர் உலகப் பாட்டாளிகளினுள்ளே புரட்சிகர தலைமை நெருக்கடியைத் தீர்த்துவைக்க அதனுல் நடத்தப்பட்ட ஈவிரக்கமற்ற போராட்டத்தினை வரலாறு ஊர்ஜிதப்படுத்திக் கொண்டிருக்கிறது. அனைத்துலகக் குழுவினுல் தலைமை தாங்கப்படும் நான்காம் அகிலத்துக்கு வெளியே, தொழிலாள வர்க்கத்தினை உலக ஏகாதிபத்தியத்திற்கு எதிராக புரட்சிகரப் போராட்டத்திற்கு அணிதிரட்டி, கல்வி புகட்டும் அரசியல் கட்சி எதுவுமே கிடையாது. அனைத்துலக ரீதியில் தொழிலாளர் இயக்கம் உக்கிரமான நெருக்கடிக் காலப்பகுதியினூடாக சென்று கொண்டிருக்கிறது. இது சர்ச்சைக்கு அப்பாற்பட்ட உண்மையாகும். இன்றிருக்கும் பரந்த தொழிலாளர் கட்சிகளாலும், தொழிற்சங்க இயக்கங்களின் தலைமைகளாலும் தொழிலாள வர்க்கத்திற்கு காட்டிக் கொடுப்புகள், தோல்விகள், மன முறிவுகளைத் தவிர வேறெதனையும் வழங்க முடியாதிருக்கிறது, ஸ்டாலினிஸ்டுகள், மூக ஜனநாயகவாதிகள், அமெரிக்க ஏ. எப். எல். — சி. ஐ. ஓ. (AFL — CIO) க்களின் பழைய அதிகாரத்துவ இயந்திரங்கள் இதுகாறும் தொழிலாளர் இயக்கத்தினுள் முதலாளித்துவ வர்க்கத்தின் பொலீஸ் படையாக விசுவாசமான முறையில் சேவை செய்து வந்திருக்கின்றன. இவை கோடிக்கணக்கான தொழிலாளாகளின் கண்ணெதிரே முழுமையாக மதிப்பிழந்து கொண்டிருக்கின்றன. ஸ்தாபனமயப்படுத்தப்பட்ட தொழிலாளர் இயக்கம் உள்ள ஒவ்வொரு நாட்டிலும்

இதே கதைதான்: வெட்கமற்ற விதத்தில் அதிகாரத்துவங்கள் முதலாளித்துவ வர்க்கத்தின் சகாக்களாக செயல்படுகின்றன, தொழிலாள வர்க்கத்தின் போராட்டங்களை சீர்குலைக்கவும், முதலாளித்துவ நெருக்கடியின் முழுச் சுமையையும் அதன் முதுகின் மீது சுமத்தவும் தம்மால் ஆனதை எல்லாம் செய்து வருகின்றன.

2. அனைத்துலகத் தொழிலாள வர்க்கம் அதனது பாரம்பரிய தலைமைகளால் காட்டிக் கொடுக்கப்பட்டு வருகின்றது. முதலாளித்துவ வர்க்கத்தின் பிற்போக்குத் தாக்குதலுக் கெதிராக மிகவும் அத்தியாவசியமான நலன்களைத் தன்னும் பேண இவர்கள் மறுக்கின்றார்கள். மாறாக இந்த வங்குரோத்து தலைமைகள், பாட்டாளி வர்க்கம் சமுதாயத்தின் ஒரு தனித்துவமான வர்க்கமாக இருக்கின்றதெ பதையு அது முதலாளித்துவ சுர டலுக்கு எதிராக அதனது சுயாதீனமான நலன்களைப் பேணியாக வேண்டும் என்ற அடிப்படையான கருத்துருக்களையும் கூட கால திற்கு ஒவ்வாதது என நிராகரிக்கின்றார்கள் முதலாளித்துவ வர்க்கத்திற்கு சேவகம் செய்யும் அவர்களின தி சங்கற்பத்தில் அவ கள் கடந்து செல்லத் தயார் இல்லாத கோட்டெதுவும் கிடையாது.

3. இந்த "கைவிடுதல் வாத" தோற்றப்பாடு கிரெம்ளின் அதிகாரத்துவம் மற்றும் சமூக ஜனநாயக அரசாங்கங்கள் முதல் தொழிற் சங்க அதிகாரிகள் வரையில் தொழிலாளர் இயக்கத்தின் ஒவ்வொரு மட்டத்திலும் பிரதிபலிக்கின்றது. கோர்பச்சேவின் தலைமையின் கீழ் ஸ்டாலினிச அதிகாரத்துவம் இன்று அக்டோபர் புரட்சியின் தேட்டங்களின் பேரிலான தமது வாயளவிலான விசுவாசத்தைக்கூட புறக்கணித்துவிட்டு முதலாளித்துவத்தின் மேன்மையை ஒப்புக்கொள்கின்றது. கோர்பசேவின் சைகையை ஏற்றுக்கொண்டு உள்ளூர் கம்யூனிஸ்ட் கட்சிகள், தேசிய முதலாளித்துவ அரசியலினுள் தமது இணைப்பினைப் பூர்த்தி செய்து கொள்ளும் வாய்ப்பினைப் பயன்படுத்துகின்றன. சமூக ஜனநாயக அமைப்புக்களைப் பொறுத்தமட்டில், சீர்திருத்தங்களை வழங்க முடியாத முதலாளித்துவத்தின் இயலாமையை, அவை தமது பழைய 'குறைந்தபட்ச' வேலைத்திட்டங்களை நிராகரிப்பதன் மூலம் பிரதிபலிக்கின்றன. சோசலிசப் புரட்சியை 'யதார்த்தமற்றது' என ஒதுக்கித்தள்ளுவதன் மூலம் முதலாளித்துவத்துக்கு தம அடிபணிதலை சடந்த காலத்தில் நியாயப்படுத்தி வந்த மார்க்சிசத்தின் திருத்தல்வாத எதிர்ப்பாளர்கள் இன்று 'யதார்த்தத்தின்' பேரால் சம்பள வெட்டுக்கள், பரந்த வேலை நீக்கங்கள், அத்தியாவசிய சமூக சேவைகள் ஒழிப்பு ஆகியவற்றை ஏற்கின்றார்கள் அதே பாணியைப் பின் தொடர்ந்து தொழிற்சங்க அதிகாரத்துவங்கள் தொழிற்சாலைகளில் எஜமானர்களின் பொலீஸ்காரர்களாக அப்பட்டமாகவே தொழிற்படுகின்றனர். முதலாளித்துவ சுரண்டலின் உக்கிரத்தைத் தணிக்க முயலும் தொழிலாள வர்க்க பாதுகாப்பு இயக்கங்களாக இருப்பதிலும் பார்க்க, தொழிற்சங்கங்கள் அந்த சுரண்டல் நுட்பங்களை சரியாகச் செய்யும் பொருட்டு

முதலாளித்துவ வர்க்கத்துடன் நேரடியாக இணைந்து மேலும் மேலும் வெளிப்படையாகவே இயங்குகின்றன

4. நான்காம் அகிலம் அதன் வரலா றினதும் வேலைத்திட்டத்தினதும் சீரியபண்பு காரணமாக இந்த அழுகி நாற்றமெடுத்த அதிகாரத்துவ ஒட்டுண்ணிகளின் காட்டிக் கொடுப்புகளுக்கான ஒரே புரட்சிகரப் பதிலீடாக இருக்கிறது. சர்வதேச தொழிலாளர் வர்க்கத்தின் எதிர்காலம் முழுவதும் சோசலிசப் புரட்சிக்கான உலகக் கட்சியாக நான்காம் அகிலத்தைக் கட்டியெழுப்புவதுடன்தான் பிணைக்கப்பட்டிருக்கிறது. உண்மையில் முதலாளித்துவ அமைப்பின் தற்போதைய உலக நெருக்கடியினதும் தொழிலாள வர்க்கத்தின் மீதான அதன் தாக்கத்தினதும் உள்ளடக்கத்தில், புரட்சிகரத் தலைமை நெருக்கடியைத் தீர்ப்பதற்கான ட்ரொட்ஸ்கியின் போராட்டத்தின் ஆழமான வரலாற்றுப் பரிமாணத்தின் மதிப்பை இப்பொழுதுதான் முழுமையாகச் சரியாய் உணர முடிகிறது.

5. ட்ரொட்ஸ்கி நான்காம் அகிலத்தை அமைக்க முதல் அழைப்பைவிட்டிருந்தபொழுது மகத்தான இரு அகிலங்கள் இருபது வருடங்களுக்குள்ளேயே வீழ்ச்சியுற்றிருந்தன — இரண்டாம் அகிலம் 1914லும் மூன்றாம் அகிலம் 1933லும் — இது 1847ல் கம்யூனிஸ்ட் அறிக்கையை எழுதிய காலம் முதல் போல்ஷிவிக்குகள் 1917ல் ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றும் வரை வளர்க்கப்பட்ட அரசியல் கலாச்சாரத்தைத் தகர்க்கும் அளவிற்கு தாக்குதலைத் தொடுத்தது. முதலாவதாக சமூக ஜனநாயகமும் அதற்குப்பின் ஸ்டாலினிசமும் உலக ஏகாதிபத்தியத்தின் சேவையில் சேர்ந்தன. இவற்றின் காட்டிக் கொடுப்புக்கள் தொழிலாள வர்க்கத்திற்கு மிகப் பிரம்மாண்டமான தோல்விகளைக் கொடுப்பதற்குப் பொறுப்பாய் இருந்தன ஏகாதிபத்தியத்தின் இந்த இரு ஏஜென்சிகளினுள்ளும் ஸ்டாலினிசத்தின் பங்கு அளவிட முடியாத அளவு துரோகமானது. சமூக ஜனநாயகம் வெளிப்படையாகவே சோஷலிசப் புரட்சியின் வேலைத் திட்டத்தை நிராகரித்தபொழுது, சோவியத் அரசின் பிரமாண்டமான வளங்களை சட்டரீதியாக அடிப்படையாகக்கொண்ட அதன் சர்வதேச நடவடிக்கைகள் மூலம் ஸ்டாலினிசமானது, 1917ன் பாரம்பரியத்தை சிடுமூஞ்சித்தனமாகச் சுரண்டியவாறு அதிகோர இரத்தம் தோய்ந்த எதிர்ப்புரட்சிக் குற்றங்களைச் செய்தது இது அக்டோபர் புரட்சியின் வரலாற்றை நெறிமுறை ரீதியாகப் பொய்மைப்படுத்தி மாபெரும் போல்ஷிவிக்குகளின் பெயர்களை அவதூறுகளின் மூலம் மூடி மறைத்தது, லெனினின் கட்சியை அழித்தது. எண்ணற்ற ஆயிரக் கணக்கான மார்க்சிஸ்டுகளைப் படுகொலை செய்ய ஏற்பாடு செய்தது.

6 கற்பனை செய்யவே முடியாத கஷ்டங்களின் எதிரிலும் ட்ரொட்ஸ்கி மார்க்சிசத்தின் வரலாற்று மரபுகளை ஊர்ஜிதம் செய்ததோடு 'தனி நாட்டில் சோசலிசம்' என்ற பிற்போக்கு தேசியவாத வேலைத் திட்டத்திற்கு எதிராக உலக சோசலிசப் புரட்சி முன்னோக்கினையும் பேணினார். அவர்

போல்ஷிவிக் கட்சி மீதான ஸ்டாலினிச அதிகாரத்துவத்தின் வெற்றி சோவியத் குடியரசில் முதலாளித்துவ எதிர்ப்புரட்சியின் முதலாவது கட்டத்தை பிரதிநிதித்துவம் செய்வதாக விஞ்ஞான ரீதியில் எடுத்துக் காட்டினார். ஆதலால் முதலாவது தொழிலாளர் அரசினையும் 1917 அக்டோபர் புரட்சியின் தேட்டங்களையும் காக்கும் பொருட்டு ஒரு வரலாற்றுத் தேவையாக, அதிகாரத்துவத்தை ஒரு அரசியல் புரட்சி மூலம் தூக்கி வீசுவது அவசியமானது என்றார். இம் முன்னோக்கினை முன்வைக்கையில், ட்ரொட்ஸ்கிஇயக்கம் ஜி.பி.யு. மாஃபியாவை மட்டும் அல்லாமல், தோல்விகளதும் தனிமைப்படுத்தல்களினதும் காலப்பகுதியில் ஒரு அனைத்துலகக் கட்சியை நிறுவ முடியாது எனக் கூறிக்கொண்ட எண்ணற்ற மத்தியவாத போக்குகளையும் எதிர்த்துப் போராட வேண்டியிருந்தது. ட்ரொட்ஸ்கி தமது பதிலில் மார்க்சிய அரசியல் எது சாத்தியமானது அல்லது எது சாத்தியமற்றது என்பதை அடிப்படையாகக் கொண்டிருக்கவில்லையெனவும் மாறாக அனைத்துலகப் பாட்டாளி வர்க்கத்தின் வரலாற்றுப் பணிகளை விஞ்ஞான ரீதியில் புரிந்து கொள்வதைத்தான் அடிப்படையாகக் கொண்டது எனவும் வலியுறுத்தினார்; மேலும் அவர் நாளைய புரட்சிகளின் நீரோட்டத்திற்கு எதிராக இன்று நீச்சல் அடிப்பவர்களால் மட்டுமே அது தயார் செய்யப்பட முடியும் எனவும் பிரகடனம் செய்தார்.

7. இந்த முன்னாய்வு முழுமையாக ஊர்ஜிதமாகி இருக்கிறது. சோவியத் அதிகாரத்துவம் சர்வதேச சோசலிசம் தொடர்பான அக்கறையை அழுத்தமாக நிராகரிக்கிறது, உலக ஏகாதிபத்தியத்திற்கு எதிரான அனைத்து போராட்டங்களையும் எவ்வளவுதான் அது வரம்புக்குட்படுத்திப்பட்ட போதிலும் அவற்றிலிருந்து தன்னை பகட்டான முறையில் வேறுபடுத்தி, அக்டோபர் புரட்சியின் பெரும் வெற்றிகளை அழிப்பதில் அதிகாரத்துவம் வெளிப்படையாகவே ஆரம்பிக்கிறது. மற்றும் சோவியத் யூனியனுள் முதலாளித்துவ உறவுகளின் வளர்ச்சியை ஊக்கப்படுத்துகிறது. சோவியத் யூனியன் ஒரு தொழிலாளர் அரசாக உயிர் வாழ்வதென்பது நான்காம் அகிலத்தைக் கட்டி அமைப்பதிலேயே தங்கியுள்ளது. அக்டோபர் புரட்சி வேலைத்திட்டத்தையும் மரபுகளையும் ட்ரொட்ஸ்கிசம் மட்டுமே பிரதிநிதித்துவம் செய்கிறது எனும் உண்மை ஒரு முக்கியமான விவாதத்திற்கு அப்பாற்பட்டதாகும். சோவியத் சமூகத்துக்குள் தொழிலாள வர்க்கத்திற்கும் ஒட்டுண்ணி அதிகாரத்துவத்திற்கும் இடையிலான முனைப்படுத்தல் என்றுமில்லாத செறிவான மட்டத்தை அடைந்துள்ளது, ஒரு புரட்சிகர நிலைமையின் அனைத்து அத்தியாவசிய முன் தேவைகளும் — அனைத்து சமூகத் தட்டுக்களையும் பாதிக்கும் ஒரு தேசிய ரீதியான நெருக்கடியை — பழைய முறைகளில் ஆட்சிசெய்ய ஆளும் வட்டங்களால் முடியாதிருத்தல், இருந்து வரும் நிலைமைகளை ஏற்றுக்கொள்ள ஆட்சி செய்யப்படுபவர்கள் சகிக்கமுடியாத நிலையில் இருத்தல் இவை சோவியத் யூனியனுக்குள் மிக வேகமாக வளர்ச்சி அடைகின்றன. இந் நெருக்கடியிலிருந்து மீள்வதற்கான முயற்சியில் அதாவது சோவியத் பொருளாதாரத்தை உலக முதலாளித்துவத்துடன்

ஒன்றிணைப்பதன் மூலமாகவும் சோவியத் யூனியனுக்குள்ளேயே முதலாளித்துவ உறவுகளை நீடிக்கச் செய்வதன் மூலமும் கோர்பச்சேவின் கொள்கைகள் நேரடியாகவே, போல்ஷிவிக் புரட்சியின் பிரதான வெற்றிகளான தேசியமயமாக்கப்பட்ட சொத்துறவுகளை மற்றும் அரச திட்டமிடல் கொள்கைகளை அச்சுறுத்துகின்றன. கோர்பச்சேவின் பெரஸ்துரோய்கா வேலைத்திட்டத்தின் தாக்கம், திட்டமிட்ட பொருளாதாரத்தின் அடித்தளங்களைப் பேணுவதற்காக சோவியத் தொழிலாள வர்க்கத்தின் ஒரு புரட்சிகர இயக்கத்தின் தோற்றத்திற்கு வழி வகுக்கும்.

8. அழிந்து கொண்டிருக்கும் ஆட்சியின் மரண வேதனையின் முதல் வெளிப்பாடு ஆளும் அதிகாரத் தட்டுகளுக்கிடையிலான குரூரமான மோதலின் வெடித்தெழுவதில் வெளிப்படுத்தப்படுவது, சாதாரண வழக்காகும். சோவியத் யூனியனுக்குள் இந்த வரலாற்றுப்போக்கு உணரப்பட்டுள்ளது. எனவே இறுதியில் வரலாறு ஸ்டாலினிசத்தையும் அதன் குற்றங்களையும் எட்டிப்பிடித்துள்ளது. மாஸ்கோ வழக்குகளை காலதாமதமாக நிராகரித்தும், அதன் பலி ஆட்களை புனர் நிர்மாணம் செய்ததும், ஸ்டாலினால் கொலை செய்யப்பட்ட போல்ஷிவிக் தலைவர்கள் சோவியத் யூனியனுக்கு எதிராக எந்தவொரு குற்றத்தையும் செய்யாதவர்கள் என்பதை ஒப்புக்கொள்ளலும், கோர்பச்சேவின் எண்ணங்களும் சூழ்ச்சிகளும் எதுவாக இருப்பினும் அவற்றிலிருந்து ஸ்டாலினிச அதிகாரத்துவத்தின் எந்த ஒரு குழுவும் மீளமுடியாத தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. ட்ரொட்ஸ்கிசத்துக்கு அதாவது உண்மையான மார்க்சிசத்துக்கு எதிரான அதிகாரத்துவத்தின் பாரிய பிரதான ஆயுதமாக அமைந்த குரூரமான பொய்ப்புனைவுகள் அம்பலப்படுத்தப்பட்டு மதிப்பிழந்துள்ளன. சோவியத் யூனியனுக்குள் வெடித்தெழுந்துள்ள அரசியல் நெருக்கடி ஸ்டாலினிச அதிகாரத்துவத்துக்கு சாவுமணியை அடித்ததுடன் மட்டுமல்லாமல், அது நான்காம் அகிலத்தின் சகாப்தத்துக்கான ஓர் அறிகுறியுமாகும். அதாவது, நான்காம் அகிலம் சோவியத் மற்றும் சர்வதேசத் தொழிலாள வர்க்கத்தின் பரந்த கட்சியாக மாறும் சகாப்தம் வந்துள்ளது.

## சர்வதேசியமும் பாட்டாளி வர்க்கமும்

9. நான்காம் அகிலத்தின் சகாப்தம் அர்த்தப்படுத்துவது உலகப் பாட்டாளி வர்க்கத்தின் முன்னணிப்படையின் புரட்சிகர சர்வதேசியத்தின் மறு உயிர்ப்பாகும். உண்மையிலேயே ஸ்டாலினிசத்தின் மற்றும் சீர்திருத்தவாத அதிகாரத்துவத்தின் நெருக்கடி, அரசியல் பொருளாதார தேசியவாதத்தை அடிப்படையாகக் கொண்ட வேலைத்திட்டங்களின் வங்குரோத்து நிலையை எடுத்துக் காட்டுகிறது. அது ஏதோ ஒரு விதத்தில் தொழிலாள வர்க்கத்தை ஒவ்வொரு நாட்டின் முதலாளித்துவ வர்க்கத்தின் நலன்களுக்கும் மற்றும் உலக ஏகாதிபத்தியத்துக்குமாக முழுமையாக முடிச்சுப் போடுகின்றது. 1914-ல் முதலாவது உலகப்போர் வெடித்ததிலிருந்து மார்க்

சிஸ்டுகளின் போராட்டம்—முதலாவதாக சமூக ஜனநாயகவாதிகளுக்கு எதிராகவும் அதன்பின் ஸ்டாலினிஸ்டுகளுக்கெதிராகவும் — சர் தேச பதாகையின் கீழேயே தொடர்ந்தது. திட்டவட்டமாக அறுபது ஆண்டு களுக்கு முன் ஸ்டாலினிச அதிகாரத்துவ ஆளுமைக்குள் அடியோடு விழுந்து விட்ட அகிலத்தின் வரைவு வேலைத்திட்டம் பற்றிய அவரது விமர்சனத்தில் ட்ரொட்ஸ்கி பின்வருமாறு எழுதினார்:

10. ''எமது சகாப்தத்தில்-இந்த ஏகாதிபத்திய சகாப்தத்தில் அதாவது உலகப் பொருளாதாரமும் உலக அரசியலும் நிதி மூலதனத்தின் மேலாதிக் கத்தின் கீழ உள்ள நிலையில், எந்த ஒரு கம்யூனிஸ்ட் கட்சியும் முழுமையா யும் பிரதானமாகவும் தனது சொந்த நாட்டினுள் உள்ள நிலை மைகளின், போக்குகளின் வளர்ச்சிகளில் இருந்து ஆரம்பிப்பதன் மூலம் தனது வேலைத்திட்டத்தை ஸ்தாபிக்க முடியாது.........1914-ஆகஸ்ட் 4ஆம் தேதி அனைத்துக் காலங்களுக்குமாக தேசிய வேலைத்திட்டங்களுக்கு சாவுமணி அடிக்கப்பட்டது. பாட்டாளி வர்க்கத்தின் புரட்சிகர கட்சி தற்போதைய சகாப்தத்திற்கு, முதலாளித்துவத்தின் அதியுயர்ந்த வளர்ச்சி யும் வீழ்ச்சியும் கொண்ட சகாப்தத்தின் தன்மையுடன் தொடர்புடைய தான ஒரு சர்வதேசிய வேலைத்திட்டத்தை அடிப்படையாகக் கொண்ட தாக மட்டுமே இருக்கமுடியும். ஒரு சர்வதேசிய வேலைத்திட்டம் என்பது ஒரு பொழுதும் தேசிய வேலைத்திட்டங்களின் ஒட்டுமொத்தமோ அல்லது அவற்றின் பொதுத் தோற்றங்களின் ஒருங்கிணைப்போ அல்ல. சர்வதேச வேலைத்திட்டம், உலகப் பொருளாதார உலக அரசியல் அமைப்பை முழு மையாகக் கொண்டதாகவும் நிலைமைகளின் போக்குகளின் அவற்றின் அனைத்துத் தொடர்புகளையும் முரண்பாடுகளையும் அதாவது அதன் தனிப் பகுதிகள் பரஸ்பர ரீதியாகப் பகைமையுடன் ஒன்றிலொன்று தங்கியுள்ள நிலைமைகள் பற்றிய ஆய்விலிருந்தே நேரடியாக ஆரம்பிக்க வேண்டும். தற்போதைய சகாப்தத்தில் கடந்த காலத்தைவிட மிக அதிக அளவில் பாட்டாளி வர்க்கத்தின் தேசிய அணுகுமுறை ஒரு உலக அணுகுமுறையி லிருந்தே ஊற்றெடுக்கவும் வேண்டும்; ஊற்றெடுக்க முடியும். எதிர்மாறாக அல்ல. இங்கே தான் கம்யூனிச சர்வதேசியத்திற்கும் தேசிய சோசலிசத் தின் அனைத்து வகையறாக்களுக்கும் இடையிலான அடிப்படையான பிர தானமான வேறுபாடு இருக்கின்றது.''

11. முதலாளித்துவ லாப அமைப்புக்கு ஒரு முடிவு கட்ட நடத்தும் போராட்டத்தின் மூலோபாய அச்சாக இருப்பது, உலக சோசலிசப் புரட் சியின், உலகக் கட்சியாக நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவைக் கட்டுவதாகும் இந்தப் போராட்டத்தின் வேலைத்திட்ட அடித்தளம் ட்ரொட்ஸ்கியின் நிரந்தரப் புரட்சி தத்துவத்தினின்று வந்ததாகும்—அது உலக சோசலிசப் புரட்சி பற்றிய முழுமையான பரந்த விசாலமான தத்து வமாகும். அது வளர்ச்சியடைந்த பின்தங்கிய நாடுகளின் அதேபோல் சோவியத் யூனியனின் மற்றும் உருச்சிதைந்த தொழிலாளர் அரசுகளின்

(சீனா, வியட்நாம், கிழக்கு ஐரோப்பா...) பாட்டாளிகளின் நடவடிக்கையை உள்ளடக்கியதாகும். அனைத்துலகக் குழுவின் முன்னோக்கை அடிப்படையாகக் கொண்ட புரட்சிகர சர்வதேசியம் ஒரு விஞ்ஞான ரீதியாக முதலாளித்துவ உற்பத்தி முறையின் சர்வதேசத்தன்மை பற்றியும், முதலாளித்துவ நெருக்கடியின் உலகப் பரிமாணங்கள் பற்றியும் அனைத்துக்கும் மேலாகப் பாட்டாளி வர்க்கம் ஒரு சர்வதேசவர்க்கம் என்னும் தன்மை பற்றி சரியாக உணர்ந்து கொள்வதிலாகும்.

12. புறநிலை ரீதியாக சர்வதேச தொழிலாள வர்க்கத்தின் ஐக்கியமானது, மிகவும் ஆழ்ந்த முக்கியமான பொருளாதார செயற்பாடுகளினால் பலப்படுத்தப்பட்டு வருகிறது நாடு கடந்த கூட்டுக் கம்பனிகளின் பிரம்மாண்டமான வளர்ச்சியும் அதனால் ஏற்படும் முதலாளித்துவ உற்பத்தியின் பூகோள ரீதியான ஒரு முகப்படுத்தலும் முன்னெருபோதும் இல்லாத அளவில் உலகத் தொழிலாளர்கள் எதிர்கொள்ளும் நிலைமைகளுக்கு ஒரே தன்மையை உண்டு பண்ணியுள்ளது. முதலாளிகளின் தேசிய குழுக்களுக்கிடையில் உலகச் சந்தையின் ஆதிக்கத்திற்காக நடக்கும் குரூரமான போட்டி, ஆளும் வர்க்கங்கள் அவர்களது "சொந்த" நாடுகளில் தொழிலாள வர்க்கத்தின் மீதான சுரண்டலை உக்கிரப்படுத்துவதன் மூலம், மிகக் குரூரமான முறையில் உலகளாவிய செயல் முறைகள் மூலம் வெளிக்காட்டப்படுகிறது. மூலதனம் தொழிலாள வர்க்கத்துக்கு எதிராகத் தொடுக்கும் தாக்குதல் நாட்டுக்குப் பின் நாடாக வேலையின்மையில், சம்பளம் வெட்டுதலில், வேகப்படுத்தலில், தொழிற்சங்கம் உடைத்தலில், சமூக நல சேவைகளை வெட்டுவதில், ஜனநாயக உரிமைகளுக்கெதிரான தாக்குதலை மூர்க்கப்படுத்துவதில் நிலைநாட்டப்படுகிறது.

13. நீண்டகாலமாக மார்க்சிசத்தின் அடிப்படை கூற்று, வர்க்கப் போராட்டமானது, வடிவத்தில் மட்டுமே தேசிய ரீதியானது என்றும் சாராம்சத்தில் அது சர்வதேச ரீதியான போராட்டம் என்றும் இருந்தது. என்றாலும் முதலாளித்துவ வளர்ச்சியின் புதிய தோற்றங்களில், வர்க்கப் போராட்டத்தின் வடிவம்கூட ஒரு சர்வதேசத் தன்மையை எடுக்கவேண்டியுள்ளது. தொழிலாள வர்க்கத்தின் மிக அடிப்படை ரீதியான போராட்டங்கள்கூட அதன் நடவடிக்கைகளை ஒரு சர்வதேச ரீதியில் ஒருங்கிணைக்கவேண்டிய தேவையை முன்வைக்கிறது. பொருளாதார வாழ்க்கையின் அடிப்படை ரீதியான உண்மை என்னவெனில், நாடுகடந்த கூட்டுக்கம்பெனிகள் ஒரு பூர்த்தி செய்யப்பட்ட பண்டத்தை உற்பத்தி செய்வதற்கு பல நாடுகளைச் சேர்ந்த தொழிலாளர்களின் உழைக்கும் சக்தியைச் சுரண்டுகின்றன, அதோடு அவை தமது உற்பத்தியை அதி உயர்ந்த லாபத்தைத் தேடி பல்வேறு நாடுகளில், பல்வேறு கண்டங்களில் உள்ள தமது தொழிற்சாலைகளுக்கிடையில் உற்பத்தியை விநியோகிப்பதோடு இடம் மாற்றுகின்றன. உதாரணமாக ஃபோர்ட் எஸ்காட் (Fort Escort) ஐரோப்பிய மாடலின் பாகங்கள் உற்பத்திக்காக உபயோகிக்கப்படும் உட்பாக வலைப்

பின்னல் — பிரிட்டனில் கார்புரேட்டர், எண்ணெய் பம்ப், சிலிண்டர் போல்ட்டுகள் — பெல்ஜியத்தில் சீட்பேட்கள் ஸ்வீடனில் ஹோஸ் கிளாம்ப்ஸ் (Hose Clamps) — டென்மார்க்கில் ஃபேன் பெல்ட்டுகள் — இத்தாலியில் குளிர்நீக்கி வளைவுகள் — ஜப்பானில் (Alternators) ஆல்ட்டனேட்டர்ஸ் — அமெரிக்காவில் ஈ. ஜி. ஆர். வால்வுகளையும் சக்கர நட்டுக்களையும் உற்பத்தி செய்வதைக் கொண்டிருக்கிறது. இவ்வாறு முன்னெருபோதும் இல்லாத அளவு மூலதனத்தின் சர்வதேச இயக்கம் வெவ்வேறு நாடுகளில் உள்ள தொழிலாள வர்க்க இயக்கத்தின் அனைத்து தேசியவாத வேலைத்திட்டங்களையும் காலவதியாக்கி, முழுமையாக பிற்போக்காக்குகின்றது அப்படியான தேசிய வேலைத்திட்டங்கள், தொழிற்சங்க அதிகாரத்துவங்கள் ''அவர்களுடைய'' ஆளும் வர்க்கங்களுக்கு தன்னிச்சையாகவே கொடுக்கும் ஒத்துழைப்பை அடிப்படையாகக் கொண்டு, உலகச் சந்தையின் ''அவர்களுடைய'' முதலாளித்துவ நிலைப்பாட்டைப் பலப்படுத்தும் தேவையுடன் தொழிலாளர்களின் வாழ்க்கைத்தரங்களை வரிசைக்கிரமமாக குறைக்கின்றன.

14. முதலாளித்துவ உற்பத்தியின் உலகத் தன்மையானது மேலும் பிரதான ஏகாதிபத்திய வல்லரசுகளுக்கிடையிலான பொருளாதார மற்றும் அரசியல் பகைமைகளை பிரம்மாண்டமான ரீதியில் கூர்மைப்படுத்தியுள்ளது. இது மீண்டும் ஒரு முறை புறநிலை ரீதியாக உலகப் பொருளாதாரத்தின் வளர்ச்சிக்கும் வரலாற்று ரீதியாக முதலாளித்துவ உடைமை வேருன்றி இருக்கும் தேசிய அரசு வடிவத்துக்கும் இடையிலான சமரசம் காண முடியாத முரண்பாட்டை முன்னணிக்குக் கொண்டு வந்துள்ளது. திட்டவட்டமாக பாட்டாளி வர்க்கத்தின் சர்வதேசத் தன்மையே அதாவது ஒரு வர்க்கம் எந்தவொரு முதலாளித்துவ ''தாய் நாட்டுக்கோ'' விசுவாசம் கொண்டிராதது. இத் தன்மையே அதனை நாகரிகத்தைக் குரல்வளையில் நெரிக்கும் தேசிய அரசு அமைப்பு சங்கிலிகளிலிருந்து விடுவிக்கக்கூடிய முழுமையான சமூகசக்தியாக ஆக்குகின்றது.

15. இந்த அடிப்படைக் காரணங்களினுல் எந்தவொரு நாட்டைச் சேர்ந்த ஆளும் வர்க்கத்திற்கு எதிரான போராட்டமும், உலக ரீதியில் பாட்டாளி வர்க்கத்தை முதலாளித்துவ அமைப்புக்கு எதிராக அணி திரட்டும் இலக்கைக் கொண்ட சர்வதேச மூலோபாயமாக இருந்தால் மட்டுமே, தொழிலாள வர்க்கத்திற்கு நிலையான முன்னேற்றத்தை மட்டுமல்லாது, அதனுடைய இறுதியான விடுதலையைத் தானும் தயாரிக்கமுடியும். பாட்டாளி வர்க்கத்தின் இந்த அவசியமான ஐக்கியப்படுத்தல் ஒரு உண்மையான சர்வதேச பாட்டாளி வர்க்க, அதாவது ஒரு புரட்சிகரக் கட்சியைக் கட்டுவதன்மூலமே அடையமுடியும். தசாப்தங்களாக களையாத சித்தாந்த மற்றும் அரசியல் போராட்டங்களின் விளைபயனுய் இப்படியான ஒரே ஒரு கட்சி மட்டுமே இருந்து வருகிறது. அதுதான் லியான் ட்ரொட்ஸ்கியால் 1938-ல் அமைக்கப்பட்ட நான்காம் அகிலமாகும், அது இன்று அனைத்துலகக் குழுவினுல் வழி நடாத்தப்படுகிறது.

# முதலாளித்துவ நெருக்கடியும் பாட்டாளி வர்க்கத்தின் தலைமையும்

16. முதலாளித்துவத்தின் நீடித்த வரலாற்று ரீதியான நெருக்கடியானது. இன்று பண்பியல் ரீதியான வளர்ச்சிக்குள்ளாகிக் கொண்டிருக்கிறது. இது சர்வதேச ரீதியாக வர்க்கப் போராட்டத்தில் ஒரு வெடிப்பை உண்டுபண்ணுவதுடன், அமெரிக்க ஐக்கிய அரசுகள் உட்பட அனைத்து பெரும் ஏகாதிபத்திய நாடுகளிலும் புரட்சிகர நிலைமையை உருவாக்கும். தொழிலாள வர்க்கத்திற்கும், இதன் புரட்சிகர முன்னணிக்குமான இந்த நெருக்கடியின் முழுமையான தாத்பரியத்தை, ஒரு வரலாற்று ரீதியான முன்னோக்கின் கட்டமைப்புக்குள் ஆராய்ந்தால் தான் புரிந்துகொள்ள முடியும்.

17. நான்காம் அகிலத்தின் ஸ்தாபன ஆவணத்தில் ட்ரொட்ஸ்கி இரண்டு உட்தொடர்புள்ள பிரேரணைகளை முன்வைத்தார். அவர் இந்த சகாப்தத்தை ஏகாதிபத்தியத்தின் மரணஓல சகாப்தம் என விளக்கினார். அதே சமயம் மனித இனத்தின் நெருக்கடி சாராம்சத்தில் தொழிலாள வர்க்கத்தின் புரட்சிகரத் தலைமை நெருக்கடி என வலியுறுத்தினார். முதலாவது பிரேரணையின் உள்ளடக்கம் உலக முதலாளித்துவத்தின் ஆற்றொணு மற்றும் தீர்க்கமுடியாத தன்மை பற்றிய புறநிலை ரீதியானதும் வரலாற்று ரீதியானதுமான கணிப்பாகும். இரண்டாவது பிரேரணையில் உள்ளடங்கியிருப்பது, ஒரு சமூக முற்போக்கை அடிப்படையாகக் கொண்ட இந்த வரலாற்று நெருக்கடியின் தீர்வானது, இறுதி ஆய்வில் பார்க்கையில் நான்காம் அகிலத்தைக் கட்டுவதிலேயே தங்கியிருக்கிறது என எச்சரிக்கப்பட்டது.

18. இப்படியான இரண்டு பிரேரணைகள் சம்பந்தமாக என்றும் ரிசயான தன்மையை அனைத்துலகக் குழு மட்டுமே வலியுறுத்துகிறது. உண்மையான புரட்சிகர மார்க்சிசத்தின் அனைத்து குட்டி முதலாளித்துவ தீவிரவாத எதிர்ப்பாளர்கள், தொழிலாள வர்க்கத்தின் தலைமையில் இருக்கும் கொள்கைகள், வேலைத்திட்டம் பற்றிய ட்ரொட்ஸ்கிசத்தின் கூடுதலான கவனத்தை ஏற்றுக்கொள்ள முடியாதென நிராகரிக்கின்றனர். அதற்குப் பதிலாக அவர்கள் ட்ரொட்ஸ்கி வரலாற்று ரீதியாக நிலைத்திருக்கக் கூடிய முதலாளித்துவ அமைப்பைக் குறைத்து மதிப்பிட்டு, பாட்டாளி வர்க்கத்தின் புரட்சிகரத் திறனை முற்று முழுதாக மிகை மதிப்பீடு செய்துள்ளார் என்பதையே நிரூபிக்கின்றது என வலியுறுத்தினார்கள் இப்படியான ட்ரொட்ஸ்கிசத்தின் 'நிராகரிப்பு' தவிர்க்க முடியாதபடி மார்க்சிசத்தின் அடிப்படை ரீதியான கருத்துருக்களை ஏறக்குறைய வெளிப்படையாகவே நிராகரிப்பதில் முடிவடைகிறது. இப்படியான ஏகாதிபத்தியச் சித்தாந்த அடிவருடிகள் கூறியதின்படி நான்காம் அகிலத்தின் 'தோல்வி' எனக்கரு

தப்படுவது. பாட்டாளி வர்க்கம் ஒரு வர்க்கமாக தோல்வி கண்டதன் பிரதிபலிப்பும் அத்துடன் சோசலிசம் பற்றிய அனைத்து வரலாற்று முன்னோக்கின் தோல்வியாகும்.

19. அரசியல் பிற்போக்கான கடந்த தசாப்தத்தின் குட்டி முதலாளித்துவ புத்தி ஜீவிகள் மத்தியில், குறிப்பாக புரட்சிகர அரசியலில் ஒரு சமயம் ஈடுபட்டவர்கள் மத்தியில் இப்படியான பின்னோக்கான தத்துவங்கள் மிகப்பரந்த ஆதரவாளர்களைப் பெற்றது ஆச்சரியமானதல்ல. இந்த சமூகத் தட்டின் கண்ணோட்டத்தை 'தொழிலாள வர்க்கத்துக்கு பிரியாவிடை (Farewell to the WorKing Class) எனும் புத்தகத்தின் தலைப்பானது தெளிவாக சுருக்கிக் கூறுகிறது. இப் புத்தகத்தில் இதன் ஆசிரியர் ''முதலாளித்துவ வளர்ச்சி தொழிலாள வர்க்கத்தை உண்டு பண்ணியுள்ளது. இது முழுமையாக உற்பத்திச் சாதனங்களை தனது ஆதிக்கத்தின் கீழ் கொண்டுவர முடியாதிருக்கின்றதோடு, அதன் உடனடித் தேவைகள் சோசலிச நியாயத்துடன் ஒத்ததாக இல்லை'', என்று ஆணித்தரமாய் கூறுகிறார்.

20. தொழிலாள வர்க்கம் அடைந்த தோல்விகள், பின்னடைவுகள் என்பவற்றிற்கான காரணங்களைப் பாட்டாளி வர்க்கத்தின் சமூகத் தன்மையில் கண்டுபிடிக்க எடுத்த எண்ணற்ற முயற்சிகளின் வடிவங்கள் எவ்வளவு தான் வேறுபட்டனவாக இருந்தபோதிலும், அவை தொழிலாள வர்க்கத்தைக் காட்டிக்கொடுத்த போலித் தலைமைகளுக்கு அரசியல் வக்காலத்து வாங்குபவையாக அமைகின்றன, ட்ரொட்ஸ்கி படுகொலை செய்யப்பட்டபொழுது, அவரது மேசையின்மேல் இருந்த அவரது கடைசிக்கட்டுரையில் ஸ்பானியப் புரட்சியின் தோல்விக்கு பாட்டாளி வர்க்கத்தைக் குறைகாண முயன்றவர்களுக்கு மிகவும் பொருத்தமான முறையில் பதிலளித்துள்ளார்.

21 ட்ரொட்ஸ்கி எழுதுகையில், ''வரலாற்று ரீதியான பொய்மைப்படுத்தல் இதில்தான் அடங்கியுள்ளது. அதாவது ஸ்பானிய பரந்த மக்களின் தோல்விக்கான பொறுப்பு உழைக்கும் பரந்த மக்களின் மேல் சுமத்தப்படுகின்றது. அது பரந்த மக்களின் புரட்சிகர இயக்கத்தை செயல் இழக்கச் செய்த, அல்லது அப்பட்டமாக நசுக்கிய கட்சிகளின்மேல் சுமத்தப்படவில்லை. பூம்கட்சியின் (Poum) (ஸ்பானிய மத்திய வாதிகள்) வக்கீல்கள் வெறுமனே தலைவர்களின் பொறுப்பை நிராகரிக்கின்றனர். இதன் மூலம் அவர்கள் சொந்தப் பொறுப்பைத் தாம் ஏற்பதிலிருந்து தப்பித்துக் கொள்ள முயல்கிறார்கள். இந்த கையாலாகாத மெய்யியலானது, பிரபஞ்ச வளர்ச்சியின் சங்கிலித் தொடரில் தோல்விகளை இன்றியமையாத ஒரு இணைப்பாக நியாயப்படுத்த முயற்சிக்கின்றது. இது தோல்வியை ஒருங்கமைந்த வேலைத்திட்டங்கள், கட்சிகள், நபர்கள் என்ற ஸ்தூலமான அம்சங்களின் அடிப்படையில் பிரச்சனையை முன்வைக்க முழுமையாகத் திறனற்றது மட்டுமல்லாது. அது முன்வைக்கவும் மறுக்கிறது. இந்த விதிப்பயனவாத மெய்யியலும் சாஸ்டாங்கமாக விழுதலும் புரட்சிகர செயலின் தத்துவமான மார்க்சிசத்தை நேரெதிராக எதிர்ப்பவையாகும்'' என்றார்.

22. கடந்த அரை நூற்றாண்டின் வரலாற்று அனுபவம் ட்ரொட்ஸ்கியின் ஆய்வை அடிப்படையில் ருசுப்படுத்தியுள்ளது மனித இனத்தை எதிர்கொள்ளும் வரலாற்று ரீதியான பிரச்சினைகளின் தீர்வு தொழிலாள வர்க்கத்தின் பற்றாக் குறைகளைப் பற்றிய புத்திமயங்கிய மற்றும் சிடுமூஞ்சித் தனமான ஊகங்களில் அல்ல இருக்கின்றது. அது தொழிலாள வர்க்க இயக்கத்தை புரட்சிகர ரீதியாக அணி திரட்டலைத் தடைசெய்கின்ற, அல்லது ஊறுவிளைவிக்கின்ற தொழிலாள வர்க்கத்தினுள்ளும், அதன் விளிம்புகளினுள்ளும் உள்ள அரசியல் போக்குகளுக்கு எதிரான தயவு தாட்சண்யமற்ற போராட்டத்தில் தான் இருக்கின்றது. இந்த போராட்டத்தைத் தொடுப்பதற்கு தொழிலாள வர்க்கத்தின் அடிப்படை ரீதியான மூலோபாய அனுபவங்களைப் பற்றி கசடறப் புரிந்து கொண்ட விளக்கம்தேவை.

23 உலகப் போருக்குப் பிந்திய காலப்பகுதி பற்றிய மார்க்சிச ஆய்வானது, உண்மையில் தவிர்க்க முடியாத ஒரு முடிவுக்கு வருகிறது; அதாவது, ஸ்டாலினிஸ்டுகளும் சமூக ஜனநாயக வாதிகளும் வரிசைக் கிரமமாக நடாத்திய காட்டிக் கொடுப்புக்களே, சர்வதேச முதலாளித்துவ வர்க்கத்தை 1930-ஆம் ஆண்டுகளின் மாபெரும் பொருளாதாரத் தாழ்விலிருந்து உயிர் பிழைக்கவும் வழி வகுத்து, இரண்டாம் உலக யுத்தத்தைத் தொடர்ந்து பாட்டாளி வர்க்கமும் காலனித்துவ வெகு ஜனங்களும் தொடுத்த உலகளாவிய எதிர்த் தாக்குதலிருந்தும் உயிர் பிழைக்க முடிந்தது 1930-ஆம் ஆண்டுகளில் ஐரோப்பாவில் தொழிலாள வர்க்கம் கண்ட தோல்விகள்—குறிப்பாக ஜெர்மனி, பிரான்ஸ் மற்றும் ஸ்பெயினிலும்—ஸ்டாலினிச மற்றும் சமூக ஜனநாயகத் தலைவர்களின் துரோகக் கொள்கைகளினால் ஏற்பட்டனவாகும். இவை நேரடியாக இரண்டாம் உலகப் போருக்கு வழிவகுத்தன. 1930-ஆம் ஆண்டுகளின் பூகோள ரீதியான பொருளாதாரத் தாழ்விலிருந்து மீள்வதற்கு, ஏறக்குறைய 10 கோடி மக்களின் உயிர்கள் உட்பட, பிரம்மாண்டமான உற்பத்தி சக்திகளின் குதிகளை அழிப்பதில் முடிந்த குரூரமான யுத்தம் ஒன்று தேவைப்பட்டது என்பதை ஒருபோதும் மறந்துவிடக் கூடாது. இவ்வாறு உலக யுத்தத்துக்குப் பிந்திய பொருளாதாரச் செழுமையானது, மனிதப் பிணங்களாலான மலையொன்றின் மேல் கட்டப்பட்டது. இந்தப் பயங்கர அழிவானது, அமெரிக்க ஏகாதிபத்தியத்துக்கு புதிய செல்வங்களுக்கான ஒரு வருவாயாக அமைந்தது. மூலதனப்பசி கொண்ட பிரம்மாண்டமான சந்தை ஒன்று அதன்முன் இப்போது உருவானது ஆனால் ஐரோப்பாவிற்கு அமெரிக்க மூலதனம் செல்வது, யால்டா, போர்ஸ்டாம், உடன்பாட்டுக்களை ஐரோப்பியத் தொழிலாள வர்க்கத்தின் மேல் திணித்து, அது ஏகாதிபத்தியத்துடன் ஒரு புரட்சிகரமான கணக்குத் தீர்த்தலைத் தடுத்த சமூக ஜனநாயக வாதிகளதும் குறிப்பாக ஸ்டாலினிஸ்டுகளதும் ஒத்துழைப்பிலேயே தங்கியிருந்தது.

24. இரண்டாம் உலக யுத்தத்திற்குப் பிற்பாடு புனர் நிர்மாணம் செய்யப்பட்ட முதலாளித்துவ சமநிலையானது, முதலாளித்துவத்தின் ஆழமான முரண்பாடுகளைத் தீர்க்கத் தவறியது. உலக முதலாளித்துவம் அதன் பிரம்மாண்டமான பொருளாதார விரிவாக்கத்தைக் கொண்டாடிக் கொண்டிருக்கும் பொழுதே, இந்த ஆழமான முரண்பாடுகள் நெருக்கடியின் புதிய வெடித்தெழுதல்களைத் தயாரித்துக் கொண்டிருந்தன. உலகின் பிரதான ஏகாதிபத்திய வல்லரசு என்ற நிலையிலிருந்த பிரிட்டனின் இடத்தை அபகரித்துக் கொண்ட அமெரிக்க முதலாளித்துவத்தின் விசாலமான நிதி மற்றும் தொழில் துறைப் பலம், உலக யுத்தத்திற்குப் பிந்திய பொருளாதாரச் செழுமையின் அடித்தளமாக அமைந்திருந்தது. போருக்குப் பிந்திய உலக முதலாளித்துவத்தின் புனர் நிர்மாணம் எல்லாவற்றுக்கும் மேலாக மேற்கு ஐரோப்பாவிலும் ஜப்பானிலும் அமெரிக்க முதலாளித்துவத்தின் சிறகின் கீழ் தொடரப்பட்டது.

25. 1944-ஆம் ஆண்டு பிரட்டன் வூட்ஸ் ஒப்பந்தத்தின்படி 1 அவுன்ஸ் தங்கம் 35 டாலருக்கு சமம் என்ற விகிதத்தின்படி அமெரிக்க டாலர் உலக நாணயமாகியது. 1930-ஆம் ஆண்டுகளில் உலகச் சந்தையைச் சிதறடித்த பாதுகாப்புவாதக் கொள்கைகளுக்கு மீண்டும் செல்லாது தடுக்கவும், முதலாளித்துவ அரசுகளுக்கு இடையிலான பொருளாதார உறவுகளை நெறிப்படுத்தவும், அமெரிக்காவினால் உருவாக்கப்பட்ட நிறுவனங்களான சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி, மற்றும் வர்த்தக சுங்க வரிகள் பற்றிய பொது உடன்பாடுகள் போன்றவை நிறுவப்பட்டன. ஏகாதிபத்திய மையங்களில் வர்த்தக மோதல்களைத் தணியச் செய்வதற்காக, மேற்கு ஐரோப்பிய மற்றும் அமெரிக்க முதலாளித்துவ வர்க்கங்கள், நலன்புரி அரசுகளின் கொள்கைகளையும் சமூக சீர்திருத்தக் கொள்கைகளையும் தமது கொள்கைகளாக்கிக் கொண்டன.

2. உலகப் போருக்குப் பின்பான ஸ்திர நிலையின் அடிப்படை முரண்பாடுகள் பின்வருமாறு: சார்பு ரீதியான சமநிலை, ஐக்கிய அமெரிக்க அரசுகளின் ஆதிக்க நிலைப்பாட்டை அடிப்படையாகக் கொண்டிருந்தது. ஆனால் அமெரிக்க முதலாளித்துவம் அதன் வெளிநாட்டுப் பகையாளிகளை மீண்டும் புனருத்தாரணம் செய்வதற்கான காரணம், உலக சந்தையை புத்துயிரூட்டவும் ஐரோப்பாவிலும், ஜப்பானிலும் புரட்சிகர அலையைத் தடுத்து நிறுத்தவுமாகும். இந்தக் கொள்கையில் அடங்கியிருந்தது, அதன் சொந்த அழிவிற்கான வித்துக்களாகும். வெளிநாடுகளுக்கு இடைவிடாத அமெரிக்க மூலதனத்தின் ஏற்றுமதி 1960-களில் ஒரு டாலர் நெருக்கடியை உண்டுபண்ணியது. அது அமெரிக்க ஆதிக்கத்தின் அடிப்படையில் இரண்டாம் உலகப் போரின் பின் உருவாக்கப்பட்ட சமநிலையின், உடைவுக்கான சமிக்ஞையைச் செய்தது. அமெரிக்காவின் நீடித்த சென்மதி நிலுவை பற்றுக்குறை அமெரிக்க முதலாளித்துவத்தின் உலக நிலைப்பாட்டின் சீரழிவின் நிதி

பிரதிபலிப்பாகும்: இந் நெருக்கடியைக் கட்டுப்படுத்த எடுக்கப்பட்ட தொடர்ச்சியான முயற்சிகள் பயனற்றவை என நிரூபிப்பதுடன், ஆகஸ்ட் 15, 1971-ல் பிரெட்டன்—வூட்ஸ் அமைப்பின் அடித்தளத்தை, டாலர் தங்கமாற்றை முடிவுக்குக் கொண்டு வருவதன் மூலம் அமெரிக்க ஐக்கிய அரசுகள் அழித்தது.

27. முதலாளித்துவ அமைப்பின் வளர்ச்சி காணும் சமனற்ற நிலை சர்வதேசப் பாட்டாளி வர்க்கத்தினுல் துண்டாடப்பட்டதுடன், அதன் புத்துயிர் பெற்ற போராட்டங்களினுல் உக்கிரப்படுத்தப்பட்டது. 1920-பதுகளிலிருந்து சர்வதேச தொழிலாள வர்க்கத்தின் மிகப்பெரும் புரட்சிகர இயக்கத்துக்கான காலகட்டம் 1968க்கும் 75க்கும் இடைப்பலான பகுதியாக குறிப்பிடப்பட்டது. வியட்னும் தொழிலாளர் விவசாயிகளின் இராணுவ எதிர்ப்பினுல் அமெரிக்க ஏகாதிபத்தியம் உடைத்து நொறுக்கப்பட்டுக் கொண்டிருந்த வேளையில், ஐரோப்பிய அமெரிக்கத் தொழிலாள வர்க்கம் அதன் வாழ்க்கைத் தரங்களை உயர்த்த ஒரு சக்திவாய்ந்த எதிர்தாக்குதலை நடாத்தியது. வரலாற்றிலேயே மிகப்பெரிய — பிரம்மாண்டமான பிரான்சின் மே, ஜூன், 1968 பொது வேலை நிறுத்தம்— தொழிலாள வர்க்கத்தின் மிகப்பெரும் சர்வதேச எதிர்த்தாக்குதலுக்கான அறிகுறியை வெளிப்படுத்தியது. அடுத்த ஏழு வருடங்களில் நாட்டுக்குப் பின் நாடாக முன்னெருபோதும் இல்லாத அளவு அரசியல் கொந்தளிப்புக்குள் இடம்பெற்றன.

28. 1960-களின் நடுப்பகுதியிலிருந்து அமெரிக்க ஐக்கிய அரசுகள், மிகப் பரந்த மாணவர் எதிர்ப்புகளினுலும் தொழிலாள வர்க்கத்தின் மிகவும் ஒடுக்கப்படும் பகுதியினரின் நகர்ப்புற எழுச்சிகரப் போராட்டங்களாலும் லட்சக்கணக்கான தொழிலாளர்களைக் கொண்ட, தொழில்துறை வேலை நிறுத்தப் போராட்டங்களினுலும் நடுங்க ஆரம்பித்தது. வியட்னுமில் எதிர்பாராத இராணுவத் தோல்வியின் பின்னணியில் அரசியல் நெருக்கடி, 1974-ல் நிக்சன் அரசாங்கம் உடைந்ததுடன் முடிவடைந்தது: ஜெர்மனியில் கூட்டாட்சிக் குடியரசு ஸ்தாபிக்கப்பட்டதிலிருந்து முதல் முறையாக 1969-ல் தொழிலாள வர்க்கத்தின் எதிர்த்தாக்குதல் சமூக ஜனநாயகவாதிகளை ஆட்சிக்குக் கொண்டு வந்தது. முதலாளித்துவ இத்தாலி "சூடான இலையுதிர் காலம்" எனப் பேர் பெற்ற 1969 வேலை நிறுத்த அலையினுல் ஆட்டங் கண்டது. பிரிட்டனில் தொழிற்சங்க நடவடிக்கைகளை சட்ட ரீதியாகக் கட்டுப்படுத்த டோரி அரசாங்கம் எடுத்தமுயற்சி, 1926க்குப் பின் மிகப்பெரும் வேலை நிறுத்த இயக்கமாக வந்த சுரங்கத் தொழிலாளர்களின் வேலை நிறுத்தத்தை எதிர்கொண்டது அது 1974 ஆரம்பத்தில் ஹீத் அரசாங்கத்தை ராஜினுமாச் செய்ய நிர்ப்பந்தித்தது. அதே ஆண்டில் போர்த்துக்கல்லிலும், கிரீசிலும் இராணுவ, பாசிச சர்வாதிகாரங்கள் வீழ்ச்சி கண்டன. லத்தின் அமெரிக்கா முழுவதும்—பொலிவியா, சில்லி ஆர்ஜண்டினுவில் தொழிலாள வர்க்கம் ஆட்சியைக் கைப்பற்றுவது என்பது அந்த நாள் நடப்பாக இருந்தது. ஆஸ்திரேலியாவில் 23 வருட

கால லிபரல் ஆட்சியை முடிவுக்குக் கொண்டுவந்து சமூக ஜனநாயக விட்லம் அரசாங்கத்தை 1972 தேர்தலில் கொண்டு வந்தது. தொழிலாள வர்க்கத்தின் எழுச்சியுறும் போர்க்குணத்தைப் பிரதிபலித்தது. மூன்று வருட கால ஆழமான வர்க்க துருவ—முனைப்படுத்தலும் அரசியல் நெருக்கடியும், நவம்பர் 1975-ல் கவர்னர் ஜெனரலால் விட்லம் வெளியேற்றப்பட்டதுடன் ஒரு உச்சத்துக்கு கொண்டுவரப்பட்டது.

29. பாட்டாளி வர்க்கத்தின் சர்வதேச புரட்சிகர இயக்கம் ஸ்டாலினிச அதிகாரத்துவத்தின் அதிகாரத்தின் கீழுள்ள கிழக்கு ஐரோப்பிய நாடுகளைக் கடந்து செல்லாமல் இருக்கவில்லை. 1968-ல் பிராகின் வசந்த காலம்—செக்கோசலவக்கியா மீதான சோவியத் யூனியனின் இராணுவ ஆக்கிரமிப்புடன் முடிவடைந்தது. ஆனால் சற்றே இரண்டு வருடங்களின் பின்பு போலந்து தொழிலாள வர்க்கத்தின் மிகப் பிரம்மாண்டமான புரட்சிகர இயக்கம் 'கோமூல்கா' அரசாங்கத்தைக் கவிழ்த்தது.

30. பிரெட்டன் வூட்ஸ் அமைப்பின் டாலர் தங்க மாற்றுரிமை மற்றும் நிலையான நாணயமாற்று வீதங்கள் ஆகஸ்டு 71-ல் வீழ்ச்சி கண்டதிலான ஸ்திரமற்ற பிரதி விளைவுகள் முதலாளித்துவ அமைப்பைப் புரட்சிகரமாகத் தாக்கி வீசுவதற்கான சாத்தியத்தை அதிகரித்தது. உடனடியாக உற்பத்தியில் ஒரு கூர்மையான உயர்ச்சி நிலைமை தொடர்ந்து இருந்தபோதிலும், அந்த செழுமை குறுகிய காலமானதென நிரூபிக்கப்பட்டது: ஆகஸ்டு 15ன் பணவீக்கத்தாக்கம் 1973 இறுதியில் எண்ணெய் அதிர்ச்சிக்கு வழிவகுத்தது. அப்போது அரபு—இஸ்ரேல் யுத்தத்தின் இறுதியில் எண்ணெய்வள ஏற்றுமதி நாடுகள் (OPEC) எண்ணெய் விலைகளில் நான்கு மடங்கு அதிகரிப்பை அறிவித்தன. இது 1930-களில் இருந்து முதலாளித்துவத்தால் அனுபவிக்கப் பெற்றதில் மிக மோசமான பின்வாங்கலைத் தூண்டி விட்டது.

31. ஒழுங்கீனமான கொடிய இப்படியான காலங்களின்போது முதலாளித்துவம் உயிர் பிழைத்ததானது, 1950 களிலும் பார்க்கக் குறைவில்லாமல், இரண்டாம் உலகப் போரின் முடிவைத் தொடர்ந்த இக்கட்டான முதல் வருடங்களில் ஸ்டாலினிச, மாவோவாத சமூக ஜனநாயக அதிகாரத்துவங்களிலும் உண்மையில் எப்பொழுதும் போலவே அமெரிக்க ஐக்கிய குடியரசுகளில் உள்ள முழுமையாகச் சீரழிந்த தொழிற்சங்க அதிகாரத்துவத்தின் மீதும் தங்கியிருந்தது நாட்டுக்குப்பின் நாடாக, பிரதான தொழிலாள வர்க்கக் கட்சிகள், சோசலிசப் புரட்சிக்கான பாதையிலிருந்து பாட்டாளி வர்க்கத்தைத் திசைதிருப்ப நனவாக வேலை செய்தது. 1968-ல் பிரான்சிலும் 1969-ல் இத்தாலியிலும் 1971-ல் போர்த்துக்கல், கிரீசிலும் மீண்டும் ஸ்பெயினில் 1975-76லும் ஸ்டாலினிஸ்ட் தலைமையிலான கம்யூனிஸ்ட் கட்சிகள் முதலாளித்துவ ஆட்சியை ஸ்திரப்படுத்தவும், ஆட்டம் கண்ட ஆளும் வர்க்கத்தின் நம்பிக்கையை மீண்டும் நிலை நாட்டவும், தமது

சக்தியிலிருந்து அனைத்தையும் செய்தன. எல்லாவற்றிலும் பெரிய காட்டிக் கொடுப்பு சில்லியில் செய்யப்பட்டது. அங்கே செப்டம்பர் 1973-ல் இராணுவ பாசிச சதிக்கு வழிவகுத்த சால்வடோர் அலண்டேயின் முதலாளித்துவ மக்கள் முன்னணி அரசாங்கத்துடன் தொழிலாள வர்க்கத்தை ஸ்டாலினிஸ்டுகள் முடிச்சுப் போட்டனர்.

32. சிலி தொழிலாள வர்க்கத்தின் தோல்விக்கு சமூக ஜனநாயக வாதிகளின் பங்களிப்பானது, உலகத்தின் ஏனைய அனைத்துப் பகுதிகளிலும் அவர்களின் பங்குடன் இசைந்ததாக இருந்தது. தனியாகவோ அல்லது ஸ்டாலினிஸ்டுகளின் ஒத்துழைப்புடனோ இப்படியான ஆழமான அரசியல் பொருளாதார நெருக்கடி வருட காலங்களில் சமூக ஜனநாயக வாதிகள், ஏகாதிபத்தியத்தின் மிக அடிப்படையான நலன்களுக்கு சேவை செய்தனர். இந்த எதிர்ப்புரட்சிகர பாத்திரம் அதன் மிக சரியான வெளிப்பாட்டை ஜெர்மனியில்—பிரான்டின், போர்ச்சுகலில்—சோரஸ்ஸின், ஸ்பெயினில்—கோன்சாலேயின், ஆஸ்திரேலியாவில் — விட்லெமின் (அவரின் ஆபீசிலிருந்து அவரின் சொந்த நீக்கத்தை ஏற்றுக்கொண்டு-கவர்னர் ஜெனரலின் சதிக்கெதிரான தொழிலாள வர்க்க இயக்கத்தைக் தடம்புரளச் செய்தார்) சிலியில்—அலெண்டேயின் கொள்கைகளிலும் எடுத்துக் காட்டியது.

## நான்காம் அகிலமும் சந்தர்ப்பவாதமும்

33. ஸ்டாலினிஸ்டுகளும் சமூக ஜனநாயகவாதிகளும் தொழிலாள வர்க்கத்தைக் காட்டிக் கொடுத்ததை குற்றம் சாட்டுவது எவ்வாறாயினும் போதுமானதல்ல. கேள்வி எழுப்பப்பட வேண்டும்: இந்தக் காலத்தில் நான்காம் அகிலத்தின் பங்கு என்ன? ஏன் அது தொழிலாள வர்க்கத்தின் தலைமையை ஸ்டாலினிஸ்டுகளிடமிருந்தும் சமூக ஜனநாயக வாதிகளிடம் இருந்தும் பிடுங்கி எடுத்து அதனை வெற்றிக்கு இட்டுச் செல்ல முடியவில்லை?

34. இந்தக் கேள்விக்கான பதில் 1953-ல் இருந்து நான்காம் அகிலத்தின் வரலாற்றின் ஆய்வில் தங்கியிருக்கிறது. அப்படியான ஒரு ஆய்வு காட்டுவது என்னவென்றால், மே-ஜுன் 1968-ல் பிரஞ்சு பொதுவேலை நிறுத்தம் வெடித்தெழுவதற்கு முந்தைய 15 வருட காலங்களில் நான்காம் அகிலம் பப்லோவாத சந்தர்ப்பவாத வளர்ச்சியினால், மிக மோசமாக பல வீனப் படுத்தப்பட்டிருந்தது.

35. 1951-ன் ஆரம்பத்திலேயே மூன்றாவது உலக மாநாட்டில், அப்பொழுது நான்காம் அகிலதின் செயலாளராக இருந்த பப்லோ ஒரு முன்னோக்கை முன் வைத்தார். அது ஸ்டாலினிசத்தின் மாற்ற முடியாத எதிர்ப்புரட்சித்தன்மை பற்றிய டிராட்ஸ்கியின் அடிப்படை மதிப்பீட்டுக்கு

சவால் விட்டது மட்டுமல்லாமல், அதன் இடத்தில் அதிகாரத்துவத்தின் சுயசீர்திருத்தம் எனும் பல இடங்களில் இருந்து பொறுக்கி எடுக்கப்பட்ட தத்துவத்தை முன் வைத்தது: அவரின் நெருங்கிய கூட்டாளியான ஏர்னஸ்ட் மண்டெலின் ஆதரவுடன் அவர் பாட்டாளி வர்க்கத்தின் சுதந்திரமான தலைமைப் பங்கை அடிப்படையாகக் கொண்ட ஒரு மத்திய, உலக புரட்சிகர மூலோபாயத்தை நிராகரிக்கும்படி பிரேரித்தார், பதிலாக, அவர் நிலவுகின்ற தேசிய நிலைமைகளினால் நிர்ணயிக்கப்பட்ட, சந்தர்ப்பவாதத் தந்திரங்களினால் வழிகாட்டப்பட்ட, தேசியக் கட்சிகளின் ஒரு கூட்டாக நான்காம் அகிலத்தை உடைக்க செயல்பட்டார். நடைமுறையில் பப்லோவின் முன்னேக்கு ஒரு குறிப்பிட்ட நாட்டில் தொழிலாளர் இயக்கத்தில் ஆதிக்கம் செலுத்திய எந்தவொரு அரசியல் சக்திகளுக்கும்—ஸ்டாலினிச, சமூக ஜனநாயக முதலாளித்துவ தேசியவாத அல்லது குட்டி முதலாளித்துவ தீவிரவாத சக்திகளுக்கு—நான்காம் அகிலத்தின் பகுதிகளை அரசியல் ரீதியாக கீழ்ப்படியச் செய்வதையே அர்த்தப்படுத்தியது. ''அனைத்து ஸ்தாபன வழிப்பட்ட சிந்தித்தல்களை, அது சம்பிரதாய சுதந்திரமாகவோ அல்லது வேறுவிதமாகவோ இருப்பினும் பரந்த இயக்கத்தினுள் அது ஒவ்வொரு நாட்டினுள்ளும் அதனை வெளிப்படுத்துகிறவாறு உண்மையான ஒருங்கிணைப்புக்கு அல்லது இந்த இயக்கத்தினுள் செல்வாக்கு செலுத்தப் படக்கூடிய ஒரு முக்கியமான நீரோட்டத்தினுள் ஒருங்கிணைக்கப்படவேண்டியது அவசியம்'' என பப்லோ வலியுறுத்தினர்.

36. நான்காம் அகிலத்தை அரசியல் ரீதியாகவும் இயக்க ரீதியாகவும் கலைத்துவிட அச்சுறுத்திய இந்த சந்தர்ப்பவாத தோற்றத்தை தோற்கடிப்பதற்காக சோசலிசத் தொழிலாளர் கட்சியின் (SWP) அமைப்பாளரான ஜேம்ஸ் பி. கனனின் முன் முயற்சியால் அனைத்துலகக் குழு ஆரம்பிக்கப்பட்டது. 1953 நவம்பரில் பிரிட்டனிலும் மற்றும் பிரான்சிலுமுள்ள ட்ரொட்ஸ்கிஸ்டுகளின் ஆதரவுடன் கனனல் வெளியிடப்பட்ட பகிரங்க கடிதம் பப்லோவாதிகளை வெளியேற்றும்படி அறை கூவியது.

37. பப்லோவாதத்திற்கெதிரான போராட்டத்தின் புறநிலை ரீதியான விளைபயன்கள் வர்க்கப் போராட்டத்தின் வளர்ச்சியில் வெளிக் கொண்டுவரப்பட்டன. சிறப்பாக கொலைபாதக சர்வாதிகாரியின் 1953-ஆம் ஆண்டு மரணத்திற்கும், பெப்ரவரி 1956-ல் குருஷ்சேவ், ஸ்டாலினின் சில குற்றங்களை அம்பலப்படுத்துவதற்குமிடையில் ஏற்பட்ட ஸ்டாலினிசத்தின் பெரும் நெருக்கடி உச்ச கட்டத்தை அடைந்தது; இதையடுத்து நவம்பர் 1956-ல் ஹங்கேரியப் புரட்சி நசுக்கப்படுவதோடு பப்லோவின் அதிகாரத்துவ சுய சீர்திருத்த தத்துவமானது, முழுமையாக அம்பலப்படுத்தப்பட்டது. பப்லோவாதத்துக்கு எதிரான போராட்டமானது ஊர்ஜிதப்படுத்தப்பட்டிருந்தபோதிலும், கனனும் சோசலிசத் தொழிலாளர் கட்சியும் 1957-ல் இருந்து பப்லோவாதிகளுடன் கோட்பாடற்ற முறையில் மீண்டும் இணைவதற்குத் திரும்ப ஆரம்பித்த

(12) இந்த பொதுப் பண்பான போக்கினை முற்றாக ஒத்ததாகவே கொபச்சேவினால் பிரேரிக்கப்பட்ட மாற்றங்கள் விளங்கியதுடன், உலக ஏகாதிபத்தியத்தின் எதிர்ப் புரட்சிகர ஏஜன்சி ஒன்றான ஸ்டாலினிசத்தின் பண்பினையும் காட்டியது. தேசியமயமாக்கப்பட்ட சொத்துடமை உறவுகள், வெளிநாட்டு வர்த்தகத்தில் அரச ஏகபோகம், தொழிலாளர் அரசு ஒன்றின் உவாக்கம் என்ற அக்டோபர் புரட்சியின் பெறுபேறுகளை மேலும் கீழ்ப்படுத்துவதையே இந்த 'சீர்திருத்தங்கள்' மையமாக கொண்டன.

வலிமையற்றுவரும் அதிகாரத்துவ சாதியை எதிராக தொழிலாள வர்க்கத்திடமிருந்து வளர்ந்துவரும் எதிர்ப்புக்கு முகங்கொடுக்க, கொர்பச்சேவ் அதிகாரத்துவத்தை முழுமையாக காக்கும் நிலைப்பாட்டிலிருந்து சோவியத் தொழிலாள வர்க்கத்துக்கு எதிராக மோசமான பலாபலன்களுக்கரக நடவடிக்கை எடுத்தார்.

எல்லாவகையான ஸ்டாலினிஸ்டுகளும், மத்தியதர வர்க்க தீவிரவாதிகள், அகிம்சாவாதிகள், திரிபுவாதிகள், சீர்திருத்தவாதிகள் போன்ற சகலரும் தமது முன்னோர் ஸ்டாலினை புகழ்ந்து துதிபாடியதுபோல் இன்று "ஜனநாயக" கொர்பச்சேவ் என புகழ்ந்து பாடுகின்றவேளையில், இதற்கு எதிராக நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழு அதிகாரத்துவத்தின் அசைக்க முடியாத எதிரியொன்றாக விளங்கி வருகின்றது.

அதிகாரத்துவத்தின் நெருக்கடியினால் ஏற்படுத்தப்பட்ட சகல சந்தர்ப்பங்களையும் தொழிலாளர்களுக்கு வழங்க நிர்பந்திக்கப்பட்ட சலுகைகள் உட்பட பிரயோகித்தவாறு அரசியல் புரட்சிக்கான சமரசமற்ற போராட்டத்தை நடத்துமாறு சோவியத், சர்வதேச தொழிலாள வர்க்கத்திற்கு அழைப்பு விடுகின்றோம். அதிகாரத்துவ ஆட்சியை தூக்கி வீசி சோவியத் ஜனநாயகத்தை அடிப்படையாகக் கொண்ட தொழிலாளவர்க்க ஆட்சி அதிகாரத்தை மீண்டும் நிலைநாட்டுவதற்காக.

(13) சோவியத் யூனியனில் உள்ள தொழிலாள வர்க்கம், அனைத்துலக தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்கள் என்ற இரு பகுதியினருக்கும் கொர்பச்சேவின் சீர்திருத்த கொள்கை எனப்படுபவை ஒரு கேவலம் அச்சுறுத்தலாக விளங்குகின்றது. இது அக்டோபர் புரட்சியின் வரலாற்றுத் தேட்டங்களை ஆபத்துக்குள்ளாக்குவதோடு உலகளாவிய ரீதியில் ஏகாதிபத்

திமத்துடனான அதிகாரத்துவத்தின் எதிர்ப்புரட்சிக் கூட்டுக் களால் பிணைக்கப்பட்டும் உள்ளது.

சோவியத் யூனியனின் உள்ளே புரட்சியில் இருந்து 70 ஆண்டுகளாக ஒட்டுண்ணி அதிகாரத்துவத்துக்கிடையேயும் உற்பத்திச் சாதனங்களின் தேசியமயமாக்கம், பொருளாதார திட்டமிடல் மூலம் உற்பத்திச் சக்திகளின் பெருக்கம் சாத்திய மான போதிலும் அது சமத்துவமின்மை, சலுகைகள், அதி காரத்துவம் ஆகியவற்றை குறைத்துவிடவில்லை.

'தனி ஒரு நாட்டில் சோசலிசத்தை' நிர்மாணிப்பது சாத் தியம் என்ற அதிகாரத்துவத்தின் வாதங்களுக்கு இடையேயும் ஊழியத்தின் பயன்பாட்டுத்திறன் இன்னமும் நன்கு முன்னே றிய முதலாளித்துவ நாடுகளின் மட்டத்துக்கு கீழேயே நிற் கின்றது. இந்த மட்டத்தினை தாண்டுவதன் மூலம் மட்டுமே சோசலிசம் உத்தரவாதம் செய்யப்பட முடியும். இந்த உயர் நிலை இல்லாமல் சோவியத் தொழிலாளர் அரசினை தூக்கி வீசும் ஆபத்து ஏகாதிபத்திய இராணுவங்களின் தலையீட்டால் மட்டுமன்றி மலிவான முதலாளித்துவ பண்டங்களின் ஆக்கிர மிப்பினாலும் அச்சுறுத்தப்பட்டு வருகின்றது.

ஊழியத்தின் இந்த உயர் பயன்பாட்டுத் திறன் ட்ரொட் ஸ்கி சுட்டிக்காட்டியது போன்று, ''முதலாளித்துவத்தின் முன்னைய முழு அபிவிருத்தியினாலும் உருவாக்கப்பட்ட உலக ளாவிய உழைப்பு பகிர்வு மண்ணில்'' மட்டுமே அடையப்பட முடியும். அதாவது, முன்னேறிய முதலாளித்துவ நாடுகளில் தொழிலாள வர்க்கம் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றுவ தன் ஊடாகவே அடைய முடியும்.

(14) இவ்வாண்டு ஜனவரி மாத மத்திய குழு தொடர் கூட் டத்தில் கொர்பச்சேவ் நிகழ்த்திய பேச்சு, 1970பதுகளின் நடுப்பகுதியில் இருந்து உக்கிரமடைந்த கடும் பொருளாதார நெருக்கடியினுள் சோவியத் பொருளாதாரம் அகப்பட்டுக் கொண்டுள்ளதை தெளிவு படுத்தியது.

''கடந்த மூன்று ஐந்தாண்டு திட்டக் காலப்பகுதியில் தேசிய வருமான வளர்ச்சி விகிதங்கள் அரைவாசிக்கும் மேலாக வீழ்ச்சி கண்டன. 1970பதுகளில் ஆரம்ப காலங்க ளில் இருந்து அநேக திட்ட எல்லைகள் அடையப்படவில்லை. பொருளாதாரம் முழுமையாக கட்டுக்கடங்காததாகவும், கண்டுபிடிப்புக்களை பிரதிபலிக்காதனவாகவும் மாறியது. வெளியீட்டின் கணிசமான பகுதியின் தரம் நடைமுறைத்

தேவைகளைப் பூர்த்தி செய்யாததோடு உற்பத்தியில் ஏற்றத் தாழ்வுகள் அதி ரித்தது.''

உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சியானது பொருளாதாரத் தை உலகச் சந்தையில் தங்கியிருக்கச் செய்தது. சோவியத்தில் 1970ல் 11.5 மில்லியன் ரூபிள்களாக இருந்த ஏற்றுமதிகள் 1984ல் 74 பில்லியன் ரூபிள்களாக அதிகரித்தது. இதேசமயம் இறக்குமதி 10.5 பில்லியன் ரூபிள்களில் இருந்து 65 பில்லியன் ரூபிள்களாக அதிகரித்தது

சோவியத் வெளிநாட்டு வர்த்தகத்தின் அதிகரிப்பு உலக முதலாளித்துவ நெருக்கடியின் தாக்கத்துக்கு அதிகரித்த விதத்தில் அம்பலமாகியதை குறித்தது. 1983ல் மேற்கத்தைய நாணயங்களில் கிடைத்த வருமானத்தில் 80% எரிபொருள் ஏற்றுமதி (எண்ணெயும் வாயுவும்) மூலம் கிடைத்தது எண்ணெய் விலைகளின் வீழ்ச்சி பாரதூரமான தாக்கங்களை ஏற்படுத்தியது. ஒரு பீப்பா எண்ணெயின் விலை ஒரு டால ரால் வீழ்ச்சி கண்ட ஒவ்வொரு தடவையும் இது சோவியத் யூனியனின் வெளிநாட்டு வருமானத்தில் 50 இலட்சம் டாலர்களை வீழ்ச்சி காணச் செய்தது. 1984ல் 4 பில்லியன் டாலர்கள க இருந்த வர்த்தக உபரி, 1985ல் 6 மில்லியன் பற்றுக் குறையாக மாற்றப்பட்டது.

நீடித்துவரும் சோவியத் பொருளாதாரத்தின் பின் தங்கிய நிலைமையானது பெரிதும் அவசியமான உயர் தொழில் நுட்ப இறக்குமதிகளைக் கொள்வனவு செய்வதற்கு வேண்டப்படும் வெளிநாட்டுச் செலாவணியைப் பெற்றுக் கொள்ள எண் ெ . ய் போன்ற மூலப் பொருட்களின் ஏற்றுமதியில் தங்கி யிருக்கும் வண்ணம் நெருக்கப்பட்டுள்ள உண்மையின் மூலம் வெளிப்பாடாகி உள்ளது.

சோவியத் யூனியனில் சோசலிசத்தின் அபிவிருத்தியும் அதன் வளர்ச்சிப் போக்கில் தோன்றும் பொருளாதாரப் பிரச்சினைகளுக்கான தீர்வும் பாட்டாளி வர்க்கப் புரட்சியை உலக அரங்குக்கு விஸ்தரிப்பதுடன் பிரிக்கமுடியாக விதத்தில் இணைந்துள்ளது. உலகச் சந்தையுடனான தொடர்புகள்மூலம் மட்டுமே தொழில் நுட்பத்தின் பற்றுக் குறையும் கைத் தொழிலுக்கும் விவசாயத்துக்கும் இடையேயான முரண்பாடு களும் தீர்க்கப்பட முடியும். அந்தச் சந்தையினுள் சோவியத் யூனியனை இணைப்பதற்கு இரண்டு வழிகள் மட்டுமே உள்ளன: கொர்பச்சேவின் முதலாளித்துவ புனருத்தாரணத்தின

நோக்கிய பாதையும், உலக சோசலிசப் புரட்சிப் பாதையுமே அவை.

(15) மேற்கத்தைய முதலாளித்துவத்தின் நெருக்கடியால் சோவியத் பொருளாதாரம் தொடர்ந்து பாதிக்கப்பட்டு வரும் நிலைமையில் கொர்பச்சேவின் சீர்திருத்தங்கள் திட்டமிடப்பட்ட பொருளாதாரத்தின் அத்திவாரங்களை பாதிக்கின்றது. 20 அமைச்சுக்களும் 70 அரச நிறுவனங்களும் முதலாளித்துவ நாடுகளுடனும் கம்பனிகளுடனும் தமது சொந்த வர்த்தக உறவுகளை ஏற்படுத்திக் கொள்ளவும் 40% வெளிநாட்டு நாணயத்தை அவை வைத்துக்கொள்ளவும் அனுமதிப்பதன் மூலமும் கொர்பச்சேவ், நெப்மென்களுக்கும் உலகச் சந்தைக்கும் இடையே ஒரு தொடர்பை ஏற்படுத்தும் ஸ்டாலினின் முயற்சியை லெனினும் ட்ரொட்ஸ்கியும் தோற்கடித்ததன் பின்னர் முதற் தடவையாக வெளிநாட்டு வர்த்தகத்தில் அரச ஏகபோகத்திற்குக் குழி பறிக்கின்றார். அதே சமயத்தில் அவர் மூலதனத் திரட்சிப் போக்கினையும் ஆரம்பிக்கின்றார். இது தேசியமயமாக்கப்பட்ட சொத்து உறவுகளைப் பாரதூரமாகப் பாதிக்கும்.

கொர்பச்சேவ், நிதி, கைத்தொழில் மூலதனத்தின் பிரதிநிதிகளிடம் இருந்தும் உலகம் பூராவும் உள்ள ஏகாதிபத்திய அரசாங்கங்களிடம் இருந்தும் வெற்றிகரமான பாராட்டுதல்களைப் பெற்றுக் கொண்டதற்குக் காரணம் இதுவே. (லெனினால் அவரது ஏகாதிபத்தியம் பற்றிய அடிப்படை ஆய்வுகளில் சுட்டிக்காட்டப்பட்ட ஓர் அமைப்பான) 'டியூச் பாங்கின் அதிபர் சமீபத்திய மாஸ்கோ 'சமாதான ஆய்வுகளில்' பங்கு கொண்டதன் மூலம் இது உணர்த்தப்பட்டது.

மாஸ்கோவில் இருந்து திரும்பிய 'டியூச் பாங்கின்' அதிபர் கிறிஸ்ரியன்ஸ் ஒரு பேட்டியில் ''சீனாவும் சோவியத் யூனியனும் எதிர்காலத்தின் சந்தைகள்'' எனக் குறிப்பிட்டார்: ''மற்றவற்றைக் காட்டிலும் சோவியத் யூனியனைப் பொறுத்த மட்டில் இது பெரிதும் உண்மை, ஏனெனில் ஒரு நீண்ட ஒத்துழைப்புக் காரணமாக உறவுகள் பெரிதும் ஆழமாகியுள்ளன'' என்றார்.

ஜேர்மன் முதலாளி வர்க்கம் இரண்டாம் உலக யுத்தத்தில் இராணுவ ரீதியில் சோவியத் யூனியனை ஆக்கிரமிப்பதில் தோல்வி கண்டதன் பின்னர் அது 'சமாதான' வழிகள் மூலம் அதன் சந்தையை ஆக்கிரமித்துக் கொள்ள ஆர்வம் கொண்டுள்ளது; ஆனால் லெனின் குறிப்பிட்டவாறு: 'யுத்தம்

வேறு கருவிகளால் அரசியலை தொடர்வதாகும்'': வெளி நாட்டு வர்த்தகத்தில் அரச ஏகபோகத்தினை கொர்பச்சேவ் பலவீனமடையச் செய்வது, ஏகாதிபத்தியத்தின் பசியை மட்டுமே தூண்டும். அவர்களின் இறுதி இலக்கு சோவியத் யூனியனை மீளவும் கைப்பற்றுவதே.

கொர்பச்சேவின் கொள்கைகள் வெளிநாட்டு மூலதனத்தின் ஊடுருவலுக்கு சோவியத் யூனியனை திறந்து விட்டுள்ளது; ஏறக்குறைய 100 கூட்டுக் கம்பனிகள் சம்பந்தமாக வெளிநாட்டு நிறுவனங்களுடன் பேரம் பேசல்கள் ஏற்கனவே ஆரம்பித்து விட்டன. அத்தகைய 10 திட்டங்கள் தொடர்பாக ஏற்கனவே உடன்பாடுகள் காணப்பட்டுள்ளன. மேலும் இரண்டு பற்றி விவரிக்கப்பட்டுள்ளதோடு அவை அரசாங்க அங்கீகாரத்துக்காக மட்டுமே காத்திருக்கின்றன.

வெளிநாட்டு முதலாளிகளுடன் நேரடி ஒத்துழைப்புக்கான இத் திருப்பத்துக்காக சோவியத் அதிகாரத்துவத்தின் உயர் தட்டினர் கொண்டுள்ள பேரார்வம், கொர்பச்சேவின் மனைவி ரெயிஜா, ஜேர்மன் நவநாகரிக சஞ்சிகையான பேர்டா மொடெனி'ன் ஒரு ரஷ்ய மொழி பெயர்ப்பு பதிப்பினை ஆரம்பிக்கும் திட்டத்தின் மூலம் வெளிப்பட்டுள்ளது.

(16) இந்த அபிவிருத்திகளையும் அவை உருவாக்கும் ஆபத்துக்களையும் சோவியத் பொருளாதாரத்தின் அடிப்படை முரண்பாடுகளின் நிலைப்பாட்டில் இருந்து மட்டுமே புரிந்து கொள்ள முடியும். இவற்றினிடையே முக்கியமானது தேசியமயமாக்கப்பட்ட சொத்து உறவுகளுக்கும் கூலி உழைப்பின் அடிப்படையில் முதலாளித்துவ வடிவிலான பங்கீடுகளுக்கும் முதலாளித்துவ உற்பத்தி வடிவின் கீழ் அபிவிருத்தி செய்யப்பட்ட பங்கீட்டு வடிவங்கள் இடையேயன மோதுதலாகும்:

50 ஆண்டுகளின் முன்னர் ட்ரொட்ஸ்கி 'புரட்சி காட்டிக் கொடுக்கப்பட்டது' என்ற நூலில் இம் முரண்பாட்டின் மூலோபாய தாக்கங்களை சுட்டிக் காட்டினார், ''சோவியத் ஆட்சியின் ஆழத்தில் இருநது இரண்டு எதிரான போக்குக்கள் வளர்ச்சி காண்கின்றன. சீரழிந்து போகும் ஒரு முதலாளித்துவத்துக்கு முரண்பட்டவிதத்தில் எவ்வளவு தூரத்துக்கு அது உற்பத்திச் சக்திகளை அபிவிருத்தி செய்கின்றதோ அவ்வளவுக்கு அது சோசலிசத்துக்கான பொருளாதார அடிப்படையைத் தயார் செய்கின்றது. ஒருமேல் தட்டினரின் நலனுக்காக அது எவ்வளவுக்கு முதலாளித்துவ தரங்களிலான பங்கீ

ட்டினை மேலும் மேலும் தீவிரமாக வெளிப்படுத்திக் கொண் டிருப்பின் அது ஒரு முதலாளித்துவ புனருத்தாரணத்துக்கு தயார் செய்கின்றது. சொத்து வடிவங்களுக்கும் பங்கீட்டு தரங்களுக்கும் இடையேயான இந்த முரண்பாடு திட்டவட்ட மின்றி வளர்ச்சி பெற முடியாது. முதலாளித்துவதரம் ஏதோ ஒரு வடிவில் ஒன்றில் உற்பத்திச் சாதனங்களுக்கும் பரவ வேண்டும் அல்லது பங்கீட்டுத் தரங்கள் சோசலிச சொத்து முறையுடன் தொடர்புபட்ட விதத்தில் கொணரப்பட்டாக வேண்டும்'' (ட்ரொட்ஸ்கி புரட்சி காட்டிகொடுக்கப்பட்டது. - நியூபாக் ப்பளிகேஷன்ஸ் பக்கம் 244)

முக்கிய உற்பத்திச் சாதனங்கள் அரசின் கரங்களில் உள் ளன. ஆனால் இது தொழிலாள வர்க்கத்திடமிருந்து அரசி யல் அதிகாரத்தை பிடுங்கிக் கொண்டதன் காரணமாக அரச கருவிகள் அதிகாரத்துவத்தின் கரங்களில் உள்ளன. அது தொழிலாள வர்க்கத்துக்கு எதிராக தனது சலுகைகளை பேணிக் கொள்ளவும், பராமரிக்கவும் முதலாளித்துவ பங் கீட்டு தரங்களை நிலைநிறுத்தவும், பலப்படுத்தவும் இதனைப் பயன்படுத்துகின்றது. அதிகாரத்துவம் அதனது கண்ணோட் டம், சமூக வாழ்க்கையைப் பொறுத்தமட்டில் அது வெறுக் கின்றதும், அஞ்சுகின்றதுமான சோவியத் தொழிலாள வர்க் கத்தைக்காட்டிலும் மேற்கத்தைய முதலாளி வர்க்கத்துக்கு எண்ணற்றவிதத்தில் நெருக்கமானது.

(17) இது கொர்பச்சேவ் மத்திய குழுவுக்கு ஆற்றிய பேச்சி னல் ஊர்ஜிதம் செய்யப்பட்டது. அதில் அவர் 'சோசலிசத் தின் மிக முக்கியமான அடிப்படைக் கொள்கை' ''வேலைக்கு ஏற்ப பங்கிடுதலாகும்.' இங்கு மார்க்சிசம் தலை கீழாக்கப் பட்டுள்ளது கொர்பச்சேவ், முதலாளித்துவப் பங்கீட்டு தரத்தினை சோசலிசத்தின் அடிப்படை ஆக்குகின்றார்!

சோவியத் பொருளாதாரத்தின் பிரச்சினைகளுக்கு கொர் பச்சேவ் வழங்கிய பதிலை ஒரு முதலாளித்துவ முகாமையாள ரின் கையேட்டில் இருந்து எடுக்க முடியும். 'க்ளாஸ்நொஸ்டி னதும், 'ஜனநாயகத்தினதும்' அறிமுகம் இந்த நிலைப்பாட் டில் இருந்தே முற்றிலும் புரிந்து கொள்ளப்பட்டுள்ளது. அவ ரின் பேச்சில் இருந்து பெற்ற கீழ்வரும் பந்தி இதை சந்தேகத் துக்கிடமின்றி தெளிவுபடுத்துகின்றது:

''சில தோழர்கள் ஜனநாயகத்தை உயர்த்துவது என்பது ஒரு பெரும் சுலோகமன்றி மறுசீரமைப்பின் சாராம்சம் அது

வே என்பதை புரிந்து கொள்ளச் சிரமப்படுவதாகத் தெரிகி றது. நிறுவனங்கள், பக்டரிகள், தொழிற் கூடங்கள், திணைக் களங்கள், துறைகள், பண்ணைகள், கோஷ்டிகள், கோஷ்டி தலைவர்கள், முகாரிகள் ஆகியவற்றுக்கு தலைவர்களை தேர்தல் மூலம் தெரிவு செய்ய கவனம் செலுத்துவது அவசியம். மறு சீரமைப்பு இடைமாற்றத்தின் இன்றைய கட்டத்தில் இருந்து பொருளாதார முகாமையயரின் புதிய விதிமுறைகள், இலாப நட்ட பொறுப்பு, சுயநிதியீட்டம், சுயதிருப்பிக் கொடுப்ப னவு அப் பணியை ஒரு நடைமுறையான தாக்கியுள்ளது...

''இது நிறுவனங்களின் இலாபங்கள், கூட்டு வேலைத் தளத்தில் அங்கத்தினர்களுக்கு வழங்கும் சகல வடிவிலான ஊக்குவிப்புக்கள், சமூக தேவைகளை வழங்கும் அளவு என்பன அவர்களின் வேலையின் இறுதி பெறுபேறுகளிலேயே செய்யப் பட்ட பொருட்களின் தரம், தொகையிலும் வழங்கிய சேவை யிலுமே-முற்றிலும் தங்கியிருக்கும்.

''இந் நிலைமையின் கீழ் தொழிலாளர்களும், கூட்டு பண்ணை விவசாயிகளும் நிறுவனங்கள், வேலைத்தலம், துறை அல்லது கோஷ்டிக்கு யார் தலைமை தாங்குகிறார்கள் என்பதை யிட்டு அக்கறை செலுத்த வேண்டும். கூட்டின் நலன் முகா மையாளர்களின் திறமையில் தங்கியுள்ளதால் உழைக்கும் மக்கள் அவர்களின் நியமனம், அவர்களின் நடவடிக்கைகளை கட்டுப்படுத்தல் ஆகியவற்றில் ஒரு நிச சக்தியை கொண்டி ருக்க வேண்டும்.''

மறு வார்த்தையில் கொர்பச்சேவின் 'ஜனநாயகம்' என் பது தொழிலாளி தனது சொந்த அடிமை ஓட்டியை தெரிவு செய்யும் உரிமையாகும். அதிகாரத்துவம் சோவியத் பொரு ளாதாரத்தின் வரலாற்று நெருக்கடியை சகல முதலாளிகளுக் கும் வழக்கமான வேலை துரிதப்ப த்தல், சம்பளவெட்டு வேலையின்மை மிரட்டலோடு அதிகரித்த உற்பத்திக்கு தொழி லாளர்களுக்கு அங்குசம் மாட்டுதல் போன்ற விதிமுறைகள் மூலம் தனது சொந்த சலுகைகளைப் பேணுகின்றது.

(18) அதிகாரத்துவத்தின் கீழ் தட்டினரான 'முகாமையா ளர்கள்' தொழிலாளர்களுக்கு எதிராக சாட்டையை பயன் படுத்த ஊக்குவிக்கப்படுவதோடு அவர்கள் பொருளாதார செயல்பாடுகளை தேசியமயமாக்கப்பட்ட பொருளாதாரத்தின் நிலைப்பாட்டில் இருந்தன்றி அவர்களின் தனிப்பட்ட கூட் டின்' நோக்கிலேயே அணுகுவர்

இது புனருத்தாரண பாதையில் ஒரு அடியை குறித்து நிற்கிறது. இது ட்ரொட்ஸ்கி சுட்டிக் காட்டியது போன்று கைத்தொழில் அரங்கில் தேசியமய ஒழிப்பு வடிவத்தினை எடுக்கும். அதில் 'இடைமருவு காலப்பகுதிக்கான திட்டமிடும் அடிப்படைக் கொள்கைகள் அரச அதிகாரத்துக்கும் தனித் தனி வேலைத் தலங்களுக்கும் இடையேயான ஒரு தொகை சமரசங்களாக மாற்றப்படும். இங்கு 'வேலைத்தலங்கள்' என்பது கைத்தொழிலின் சோவியத் 'கப்டன்களுக்கும்' இடையேயான சாத்தியமான சொத்துடமையாளர்களே. சோவியத் அதிகாரத்துவம் ஒரு முதலாளித்துவப் புனருத்தாரணத்தை தயாரிக்கும் திசை ல் சென்றுள்ள போதிலும் புதிய ஆட்சியாளர்கள் சொத்து வடிவங்கள், கைத்தொழில் விதிமுறைகள் என அறிமுகம் செய்து வைக்கப் போவது ஒரு சீர்திருத்தம் அன்றி ஒரு சமூகப் புரட்சியாகும்.'' (அதே நூல் பக்கம் 253)

மேலும் கொர்பச்சேவின் சீர்திருத்தங்கள் தனிப்பட்ட உற்பத்தியையும் வர்த்தகத்தையும் அதாவது மிகவும் அடிப்படை மட்டத்தில் மூலதனத் திரட்சியை வேகமாக ஊக்குவிக்கின்றது.

கடந்த வருடம் சோவியத் உயர்சபை (சுப்ரீம் சோவியத்) தனிப்பட்ட ஊழியம் மீதான சட்டத்தை' இயற்றியது. நுகர்வுப் பொருட்கள், சேவைகள் அரங்கில் 'தனிப்பட்ட அடிப்படையில் தனியார் ஊழியத்தை' அனுமதிக்கும் கறுப்பு சந்தையை சட்ட ரீதியானதாக்கியது.

இந்த வழியில் சிறிய வர்த்தகர்களினைக் கொண்ட ஒரு பலமான தட்டினர் அல்லது சிறிய இலாபமீட்டுவோர் – நாட்டுப் புறங்களில் மட்டுமன்றி, நகரங்களிலும் கூட உருவாக்கப்பட்டு வருகின் னர். அதிகாரத்துவம் அதன் பொருட்களையும், சேவைகளையும் கொள்வனவு செய்யும் முக்கிய கொள்வனவுக்காரரர் என்ற விதத்தில் இந்தத் தட்டினர் ஆதாரம் பொருளாதாரத் தொடர்புகளால் அதனுடன் பிணைக்கப்பட்டுள்ளனர்.

இந்தத் தனிப்பட்ட இலாபமீட்டலின் அறிமுகமானது கொர்பச்சேவுக்கு உலகம் பூராவும் உள்ள மத்தியதர வர்க்க ஆதரவை கொணர்ந்துள்ளது. அவரின் மனைவி றெயிசா, தமது முதல் உத்தியோக பூர்வமான லண்டன் விஜயத்தின் போது விலை உயர்ந்த ஆபரணத்துக்கு அமெரிக்கன் எக்ஸ்

மும் பாதுகாப்பும் என்பதை ஆரம்பித்தது. இக் கொலைக் குற்றத்தைத் தொடர்ந்து உடனடியாக சோசலிச தொழிலாளர் கட்சி (SWP)யின் வழக்கறிஞர் ஆல்பர்ட் கோல்ட்மேனுல் முதல் முறையாக இப்படியான புலன்விசாரணை நடத்தப்பட்டது. அமெரிக்க அரசாங்கத்தின் உத்தியோகப் பூர்வமான மற்றும் முன்னர் வகைப்படுத்தப்பட்ட நூற்றுக்கணக்கான தஸ்தாவேஜுகளில்—அவற்றுள் பல தகவல் சுதந்திரச் சட்டத்தின் மூலம் வெளிப்படுத்தப்பட்டன. அந்த தஸ்தாவேஜுகள், இந்தப் படுகொலைக்காக பெரிய அளவு ஜி பி. யு (G.P,U.) வலைப் பின்னல் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தமையை பனிச்சுசனக் காட்டியது. ஆரம்பத்திலிருந்தே இந்தப் புலன் விசாரணை பப்லோவாதிகளால் கண்டிக்கப்பட்டது. ட்ரொட்ஸ்கிச இயக்கத்துக்கு எதிரான ஜீ.பி.யு, (G.P.U) குற்றங்கள் பற்றி, நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவினுல் புதிதாக வெளிக் கொணரப்பட்ட ரகசியங்கள், என்றுமில்லாத அளவு வெளிப்படையான தங்களின் ஸ்டாலினிசக் கட்சிகளுடனுன கூட்டினைத் துண்டித்துவிடும் என பப்லோவாதிகள் அஞ்சினர்.

56. ஒரு சமயம் கோயோகானில் (Coyoacan) லியோன் ட்ரொட்ஸ்கியின் செயலாளராக பணிபுரிந்த, அமெரிக்க சோசலிசத் தொழிலாளர் கட்சியின் (SWP] பப்லோவாதத் தலைவர் ஜோசப் ஹன்சன், 1940 படுகொலைக்கு முன்னரே ரகசியமாக ஜி.பி.யு. (G.P.U,)வை சந்தித்ததையும், ''தண்டனை பயமின்றி தகவல்களை தெரிவிப்பதற்கா, ஒருவரிடம்' ரகசியத் தொடர்பை ஏற்படுத்தித் தரும்படி அமெரிக்க அரசாங்கத்துடன் பின்னர் கலந்துரையாடலில் ஈடுபட்டதையும் நான்காம் அகிலத்தின் அனைத்துகக் குழுவின் புலன் விசரணை வெளிப்படுத்திய தகவல்கள் அடையாளம் காட்டிய பொழுது, பப்லோவாதிகளின் எதிர்ப்பானது வெறித்தனமாக மாறத் தொடங்கியது. 1940ல் சோசலிசத் தொழிலாளர் கட்சியின் (SWP) உயிர்வாழ்ந்து கொண்டிருந்த தலைமை உறுப்பினர்களால்—கொடுக்கப்பட்ட சத்தியபிரமாண சான்றுகளின் அடிப்படையில்—கட்சி, அமெரிக்க அரசாங்கத்துடனுன ஹன்சனின் தொடர்புகள் பற்றி ஒன்றும் அறிந்திருக்கவில்லை என்பதை அறிந்து கொண்டது.

57. நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவினுல், நான்காம் அகிலமும் பாதுகாப்பும் என்பதனுள் திரட்டப்பட்டிருந்த ஆதாரங்களை ஆய்வு செய்யவும் தீர்ப்பு அளிக்கவும் விசாரணைக் குழுவினை நிறுவுவதற்காக நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவினுல் அழைப்புக்கள் விடுக்கப்பட்டபொழுது, பப்லோவாதிகள் அவற்றைத் திரும்பத் திரும்ப நிராகரித்தனர்; பதிலாக, ''வெட்கமற்ற ஜேப்படிப்பு'' என்று புலனுய்வைக் கண்டிப்பதற்காக, சர்வதேச பிரச்சாரத்திற்கு அவர்கள் ஏற்பாடு செய்தனர். இந்த வகையில் ''ஜோடிப்புகள்'' என அழைக்கப்படுபவற்றின் அப்பாவிப் பலியாட்களாக அவர்கள் வக்காலத்து வாங்குபவர்களுள் ஹன்சன் மட்டுமல்ல, கடந்த 1939களில் மற்றும் 1940களில் ஜேம்ஸ் பி. கனனின் தனிச் செயலாளராக இருந்த சில்வியா பிராங்கிளினுமாவார். இப் பெண்மணி ஸ்டாலினிஸ்டுக

ளால் திட்டமிடப்பட்டு இருத்தப்பட்டவர் என்று ஜீ. பி. யு. (G. P. U.) வில் இருந்து வெளியேறிய லூயிஸ் புடன்ஸினால் 1947ல் அம்பலப்படுத்தப்பட்டிருந்தார். புடன்ஸின் வெளிப்படுத்தல்களுக்குப் பிறகு பிராங்க்ளின் திடீர் தலைமறைவு ஆகியிருந்த போதிலும், மற்றும் அதனைத் தொடர்ந்து அமெரிக்க அரசாங்கத்துடன் இணைந்து தனது முன்னாள் ஜீ.பி.யு. கட்டுப்பாட்டு அதிகாரி ராபர்ட் ஸோப்லனுக்கு எதிராக வழக்குத் தொடுப்பது பற்றிய தயாரிப்பில் இருந்தபோதிலும், ஹன்சனும் சோசலிசத் தொழிலாளர் கட்சியும் (SWP) அவரை "சீரிய" தோழர் என்று தொடர்ந்து புகழ்ந்தனர். சோசலிசத் தொழிலாளர் கட்சி (SWP)யின் தலைவர் ஜாக் பான்ஸ், பிராங்க்ளின் தன்னுடைய தனிப்பட்ட நாயகராக இருந்தார் என்று பகிரங்கமாக அறிவித்தார். ஆனால் 1983–ல கட்சித் தலைமையில் உள்ள அரசாங்க ஏஜண்டுகள் மற்றும் அமெரிக்க அரசாங்கத்திற்கும் எதிராக, சோசலிசத் தொழிலாளர் (SWP) கட்சியின் முன்னாள் உறுப்பினர் அலன் கெல்பண்டினால் (Alan Gelfand) வழக்குத் தொடுக்கப்பட்டதன் விளைவாக, 1954 மற்றும் 1958–ல் உயர் மன்ற நடுவர்களின் முன் வைக்கப்பட்ட பிராங்க்ளினின் தஸ்தாவேஜுகள் —இதுவரையில் ரகசியமாக வைக்கப்பட்டிருந்த தஸ்தாவேஜுகள்–கடைசியாக வெளியிடப்பட்டன, தாம் சோசலிசத் தொழிலாளர் கட்சிக்குள் ஸ்டாலினிச உளவாளியாக செயல்பட்டிருந்ததை பிராங்க்ளின் ஏற்றுக் கொண்டார் என்பதை, கையெழுத்துப் பிரதிகளின் நகல்கள் காட்டுகின்றன. ஹன்சனும் சோசலிசத் தொழிலாளர் கட்சியும் பிராங்க்ளினை விடாப்பிடியாக பேணியதை விளக்கும் சான்றினையும் கூட கெல்பண்ட் பெற்றுக்கொண்டார். ஹன்சன் கூட ஜீ. பி. யு. (G. P. U.) ஏஜண்ட் என்று லூயிஸ் புடன்ஸினால் இலங்காட்டப்பட்டதானது, ஹன்சனின் தனிப்பட்ட கடிதத் தொடர்புகளிலிருந்து தோன்றுகிறது. அனைத்துலகக் குழுவின் இந்த மறுக்க முடியாத நிருபணமான குற்றச்சாட்டுகள் இருந்த போதிலும் பப்லோவாதிகள் பிராங்கிளின் மற்றும் ஹன்சனைத் தொடர்ந்தும் பாதுகாத்தனர். இவ்வாறாக ஏஜண்டுகளைப் பாதுகாத்தல், ஸ்டாலினிசம் மற்றும் ஏகர்திபத்தியத்தின் பேரில் நான்காம் அகிலத்திற்கு எதிராக இழைக்கப்பட்ட குற்றங்கள் சம்பந்தமாக அலட்சியமாக இருத்தல், பப்லோவாதிகளின் ட்ரொட்ஸ்கிசக் காட்டிக் கொடுப்பின் மிகவும் கேவலமான வெளிப்பாடு மட்டுமேயாகும்.

58. தசாப்தங்களாக அதிகாரத்துவம் அபகரித்துக் கொண்ட அரசியல் அதிகாரம் அதன் வரப்பிரசாத அணைமேட்டைக் காக்க சேவகம் செய்தது. அதிகாரத்துவ அபகரிப்பாளர்கள் இன்று நிச சோவியத் ஜனநாயகத்தினை யதார்த்தமாக்கும் பொருட்டே அந்த அதிகாரங்களை கைவிட்டுவருகின்றார்கள் என இறுக்கமாக நம்புவதானது மார்க்சிசத்தையே அடியோடு நிராகரித்து விடுவதாகும். அதிகாரத்துவ பெருக்கமும் அதன் ஏதேச்சாதிகாரமும், 1917 அக்டோபரின் பின்னர் நிலைநாட்டப்பட்ட உற்பத்திச் சாதனங்களில் சமூக சொத்துடமைக்கும் அரசின் கட்டுப்பாட்டுக்குட்பட்ட கைத்தொழில்களால் உற்

பத்தி செய்யப்பட்ட பொருட்களின் முதலாளித்துவ முறையான பங்கீடுகளுக்
கும் இடையேயான குரோதத்துடன் பிணைந்து கொண்டுள்ளது. அதிகாரத்
துவ ஏதேச்சாதிகாரத்தினை சமாதான வழியில் இல்லாதொழிப்பது என்பது
இந்த குரோதம் தீர்க்கப்பட்டு விட்டதை குறிக்கும். அதாவது: உற்பத்திச்
சக்திகளின் அபிவிருத்தியானது அத்தகைய ஒரு உச்சக் கட்டத்தை அடை
தன் மூலம் சமத்துவமின்மை தாண்டப்பட்டு, முதலாளித்துவ பங்கீட்டு
முறைகளை அமுல் செய்வதற்கான அரச நிர்ப்பந்தத்தினை பயன்படுத்துவதற்கு
எந்தவிதமான புறநிலை அடிப்படையும் இனி இல்லை என்பதாகும். உண்மை
யில் விடயம் அதுவேயெனில் ஸ்டாலின்-புகாரின் கோட்பாடான ''தனி ஒரு
நாட்டில் சோசலிசம்'' என்பது ருசுவாகி விட்டது என்ற முடிவுக்கு வரவேண்
டியிருக்கும்.

59. ஆனால் முதலாளித்துவ பங்கீட்டு முறைகளில் இருந்து தலையெடுப்ப
தற்குப் பதிலாக கொர்பச்சேவ் தலைமை சோவியத் பொருளாதாரத்தின் சீர்
திருத்தம்' இன்னமும் பேரளவிலான சமூக சமத்துவமின்மையை வேண்டி
நிற்பதைச் சுட்டிக் காட்டுகின்றது. சோவியத் பாட்டாளி வர்க்கம் 1917ம்
ஆண்டின் சோசலிசப் பாரம்பரியங்களுக்கு காட்டும் அளப்பரிய அர்ப்பணம்
சமத்துவப் போக்குக்களை கொர்பச்சேவின் அதிகரித்த வெறிபிடித்த கண்ட
னங்களுக்கு ஆளாக்கியுள்ளது. 1988 பெப்ரவரி 18ல் கொர்பச்சேவ் சோவியத்
யூனியன் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய குழுவின் முன் 'புரட்சிகர பெரோஸ்
ரொயிகா' என்ற தலைப்பில் உரை நிகழ்த்தினார். இதில் ''இன்று எவரும்
அரசின் 'தருமத்தில்' தொடர்ந்து தங்கியிருக்க முடியாது''. என அவர்
எச்சரித்தார். தனியார் செல்வத்தின் பெருக்கம் சம்பந்தமாக தொழிலாளர்
களின் எதிர்ப்பினைக் கண்டு கொதித்துள்ள கொர்பச்சேவ் ''நாம் மட்டம்
தட்டும் போக்குக்களை ஒழித்துக் கட்டும் பிரச்சினையில் நிச ஆர்வத்துடன் ஈடு
பட வேண்டும். இது மிகவும் முக்கியமான ஒரு சமூக, பொருளாதார தத்
துவார்த்த விவகாரமாகும் சகல நோக்கங்களுக்கும் இலக்குகளுக்கும் மட்
டம் தட்டும் போக்கானது பொருளாதாரத்தின் மீது மட்டுமன்றி மக்களின்
நற்குணங்களிலும் அவர்களின் முழுச் சிந்தனை, நடவடிக்கைகளிலும்
ஒரு அழிவுகரமான தாக்கத்தினை ஏற்படுத்துகின்றது'' என பிரகடனம் செய்
துள்ளார். (''சோவியத் பிரஸ்'' மறு பிரசுரம் 1988 மார்ச் 31)

60. கொர்பச்சேவின் 'க்ளாஸ் நொஸ்டின்' நிச முக்கியத்துவத்தை
'ப்ரெஸ்ரொயிகாவின்' சமூக—பொருளாதார உள்ளடக்கத்தை ஆராயாமல்
தீர்க்கமாக மதிப்பிட்டு விட முடியாது. ஹீலி போன்ற ஓடுகாலிகள் இத்
தகைய 'சிறிய' விபரங்கள் பற்றி சட்டை செய்வதாய் இல்லை. ஆனால்
ஹீலி, கொர்பச்சேவ் 'அரசியல் புரட்சியை' முன்னெடுத்துச் செல்வதாக
வாதிடும் அதேவேளையில் கொர்பச்சேவினால் அதிகாரத்துவ ரீதியில் கட்டமாக
நிர்வகிக்கப்படும் 'ஜனநாயகமயமாக்கத்தின்' நடு இலக்கு அதிகாரத்துவத்
தின் பெரும் செல்வாக்குமிக்க பகுதியினர், புத்திஜீவிகள், பெருமளவிலான
குட்டி தொழில் அதிபர்களிடையே தொழிலாள வர்க்கத்தின் முக்கிய சமூக

வெ றிகளுக்கு எதிராக ஒரு தீர்க்கமான தாக்குதலை நடாத்தும் பொருட்டு ஆதரவு திரட்டுவதேயாகும். கொர்பச்சேவின் முக்கிய பொருளியல் ஆலோசகர்களில் ஒருவரான சல்லவாஸ்கியர் திட்டமிடல் அடிப்படைக் கொள்கைகள் தொழிலாள வர்க்கம் சம்பந்தமாக தனது வெறுப்பினை மூடி மறைக்க சிறிதும் முயல்வதாய் இல்லை. அவர் சோவியத் பொருளாதாரத்தினை பரவலாக்கி, தேசியமயத்தினை ஒழிப்பதன் மூலம் பலன் பெறக் கூடிய சமூக குழுக்களைக் கொண்ட விரிவான பட்டியல்களை தயார் செய்துள்ளார். அவர் எழுதியுள்ளதாவது: உற்பத்தி உறவுகளில் முன்னேற்றம் காண்பதில் வெற்றி காண ஒரு நல்ல சிந்தனைமிக்க சமூக மூலோபாயம் இருப்பது அவசியம். ஒருபுறம் பொருளாதாரத்தினை துரிதப்படுத்துவதில் நிச அக்கறை கொண்ட குழுக்களை உள்ளீர்க்கவும் முகாமை முறைகளை தொடர்ந்தும் மறுசீரமைப்புச் செய்யவும் மறுபுறம் சிக்கலான பிரச்சினைகளில் தீர்மானங்கள் எடுப்பதை தடை செய்யும் குழுக்களின் நடவடிக்கைகளை தடுக்கவும் இலாயக்கானதாகவும் விளங்க வேண்டும்.

61: சோவியத் விவாதங்களில் ''பொருளாதார துரிதமயமாக்கம்' என்று பதத்துக்கு ஒரு திட்டவட்டமான அர்த்தம் உண்டு. இது முகாமைத்துவ முறைகள் மூலம்—கண்டிப்பான முகாமைத்துவத்தின் மூலமும் மாபெரும் ஊழிய கட்டுப்பாடுகள்' ஊடாகவும் உற்பத்தி திறனை அதிகரிப்பதையும் வேலையின்மையை நெறிமுறையாக்குவதையும், அதிகரித்த கூலி வேறுபாடுகளை ஊக்குவிப்பதையும் இலக்காகக் கொண்டுள்ளது. கொர்பச்சேவுக்கு நெருக்கமான மற்றொரு புகழ்பெற்ற சோவியத் பொருளியலாளர் வசிலி செலியுனின் எழுதியதாவது: ''(மேற்கில்) அவர்கள் வேலையின்மையைக் கொண்டுள்ளனர், சொல்லின் முழு அர்த்தத்தில் மேலதிகமான மக்கள்—தொழில் செய்ய வேண்டியவர்களிடமிருந்து கடின உழைப்பு பிடுங்கப்பட்டது, வேலையின்மையை பற்றி நாம் மறந்து போய் விட்டோம். ஆனால் நாம் சில வேளைகளில் அரைப்பலத்துடன் தொழிற்படுவது நல்லதா?'' அமெரிக்க முதலாளித்துவ மேதாவி ஒருவ சோவியத் யூனியனில் இடம் பெற்றுவரும் விவாதங்களைக் கவனமாக ஆராய்ந்தார். 'தீவிரவாத சீர்திருத்தவாதிகளில்' ஒருவரான லியனுட் அல்பேக்கின் கருத்துக்கள் சோவியத் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்டு வருவதோடு அவர் சமீபத்தில் 'நிலமானித்துவரும் முதலாளித்துவமும் சுவையானதாய் அல்லது சுவையற்றதாய் இருப்பினும் தொழிலாளியை ஒழுங்குமுறைப் படுத்துவதில் சாதகமான பொறிமுறையாக விளங்குவதாகக் குறிப்பிட்டார். சோசலிசம் இன்னமும் நன்கு மனிதாபிமானம் மிக்க ஒழுங்கு வடிவங்களை கண்டு பிடிக்கும் பிரச்சினையை தீர்த்து வைக்கவில்லை, (ஹேபாட் சோவியத் பொருளாதாரத்தை சீர்திருத்தல்' வாஷிங்டன் 1988).

62: ஹேவட்டின்படி 'வேலையின்மைக்கு புறத்தே' கலந்துரையாடலுக்குள்ளாகி உள்ள முக்கிய பிரச்சினைகள்—வங்குரோத்தும் சமத்துவமற்ற வருமானமும், மிகவும் நெருக்கமான ஒரு பிரச்சினையான சோசலிச நாட்டில் தனிப்பட்ட பொருளியில் நடவடிக்கையின் உரிய பாத்திரமும் பற்றியதாகும்.

உண்மையில் கொர்பச்சேவின் கொள்கைகள், திட்டமிட்ட பொருளாதாரத்தை ஒழித்தல், அரசு பொருளாதாரத்தின் பெரும் பகுதியை நாசமாக்குதல், வெளிநாட்டு வர்த்தகத்தில் ஏகபோகத்தை அழித்தல் என்பன தொடர்பாக முன்னெருபோதும் இல்லாத அளவில் சட்டரீதியான அடிப்படைகளை நிலை நாட்டும் கட்டத்தை எட்டியுள்ளது. அதேசமயம் சோவியத் ருஷ்யாவின் உள்ளே உற்பத்தி சக்திகளின் தனியார் உடமையையும், கூலி உழைப்பை மீள ஸ்தாபிதம் செய்வதும் பரந்தளவில் அதிகாரத்துவத்தினுல் நடத்தப்பட்டு வருகின்றது.

63. 1988 மார்ச்சில் கூட்டுறவு சம்பந்தமாக அறிமுகம் செய்யப்பட்ட வரைவுச் சட்டம், முதலாளித்துவத்தின் புத்துயிர்ப்பின் ஒரு தீர்க்கமான கட்டத்தினை பிரதிநிதித்துவம் செய்கின்றது. 'கூட்டுறவுகள்' என்ற பதம் தனி கூட்டுத்தாபனங்களைக் குறிக்கும் ஒரு நாசுக்கான பதமாகும். அத்தோடு அவற்றின் அமைவு பொருளாதாரத்தின் சகல பகுதிகளாலும் முழுமையாக ஊக்குவிக்கப்படுகின்றது. இதனை 'மீற முடியாததும் அரச பாதுகாப்பினை அநுபவிக்கின்றதும்' என பிரகடனம் செய்வதன் மூலம் வரைவுச் சட்டம் கூட்டுறவு சொந்தக்காரர்களின் 'சொத்து நலன்களை' காக்க இடைவிடாது உத்தரவாதம் அளிக்கிறது. இது அரச சொத்துக்குச் சமமான முறையில் சட்டத்தினுல் பாதுகாக்கப்படுகிறது.'' அந்த வரைவுச் சட்டம் கூட்டுறவு 'கட்டிடங்கள், அமைப்புக்கள், இயந்திரங்கள், கருவிகள், போக்குவரத்து வசதிகள், கால்நடைகள், முடிவுப் பொருட்கள், நாணய வளங்கள், இலக்கினை எட்டும் மற்றும் சொத்துக்களை சொந்தத்தில் கொண்டிருக்கலாம்'' என்கிறது. மேலும் ஒரு கூட்டுறவை நிறுவுவதற்கு அரசாங்க, பொருளியியல், அல்லது மற்றும் அதிகாரிகளிடம் இருந்து விசேட அனுமதி பெற வேண்டிய அவசியம் இல்லை.''

64. தொழிலாளர்களை கூலிக்கமர்த்தும் உரிமையை சட்டம் கூட்டுறவுகளுக்கு வழங்குகின்றது. எந்தவொரு முதலாளித்துவ நாட்டினைப் போன்று கூட்டுறவுகள், தொழிலாளர்களை ஒப்பந்தம் செய்யவும், பரஸ்பர ஒப்பந்தத்தின் பேரில் சம்பளம் வழங்கவும் முடியும். வேலைக்காலத்தின் அளவு, இடைவிட்ட, ஒழுங்கான, மேலதிக விடுமுறைகளும் மற்றும் நிபந்தனைகளும் கூட்டுறவின் உள்ளார்ந்த விதிமுறைகளுக்கு உட்பட்டதாகும்.'' அதிகாரத்துவம் வேலையற்ற தொழிலாளர்களின் ஒரு பெரும் நிரம்பலை (விநியோகத்தை) உண்டுபண்ண திட்டமிட்டு வருகின்றது. அரச கைத்தொழில்களின் பெரும் பகுதியை திட்டமிட்டு வங்குரோத்தடையச் செய்வதன் மூலம் இத் தொழிலாளர்களை இந்த சோவியத் கூட்டுத்தாபனங்களுக்கு தமது ஊழியத்தை விற்பனை செய்யும் வண்ணம் நெருக்கப்படுவர். இந்தச் சட்டம் பிரகடனம் செய்வதாவது: ''அரச ஏஜன்சிகள் நட்டங்கள், வங்குரோத்துக்கள், கேள்வியின்மையால் மூடப்பட்ட சிறிய, நடுத்தர அளவிலான உற்பத்தி, விவசாய, கட்டிட நிர்மாண மற்றும் அமைப்புக்களின் அடிப்படையில் கூட்டுறவுகளை நிர்மாணிக்கலாம். நட்டங் கண்டவற்றின் சொத்துக்களை அவை இயங்கும், அல்லது

திட்டமிடப்படும் கூட்டுறவுகளுக்கு மாற்றலாம்'' அதிகாரத்துவம் அரச கைத்தொழிலின் சாறுநிறைந்த பயகத்தினை கூட்டுறவுகளாக மாற்றுவதன் மூலம் தமது சொந்த அதிஸ்டத்தை அல் து (தமது உறவினரின்) எட்டும் வாய்ப்பினை ஊர்ஜிதம் செய்து கொண்டுள்ளனர் என்பதை காண்பது கடினம் அன்று. இந்த சட்டத்தினை சாதகமாக்கிக் கொள்வதன் மூலம் முன்னர் மீற கூடாத அரச உடமையாக விளங்கியவற்றை தமது கட்டுப்பாட்டுக்குள் கொணர பயன்படுததுவர்.

65. இந்த வரைவு சட்டம் 'பாரிய கூட்டுறவுகளும் அனைத்துலக ரீதியில் போட்டியிடும் அவற்றின் கூட்டுக்களும் ஏற்றுமதி, இறக்குமதி வர்த்தகத்தை தமக்கிடையே செய்துகொள்ள அனுமதிக்கப்படும்... கூட்டுறவுகளும் அவற்றின் கூட்டுக்களும் உற்பத்தி வர்த்தகம், சமூக வசதிகளை வளப்படுத்தும் பொருட்டு பண்டங்களையும் சேவை களையும் இறக்குமதி செய்ய வெளி நாட்டுச் செலாவணியை பயன்படுத்தலாம்' எனப் பிரகடனம் செய்வதன் மூலம் கூட்டுறவுகளை உலக முதலாளித்துடன் இணைந்து கொள்ள அனுமதிக்கின்றது. இது மேலும் கூறுவதாவது; கூட்டுறவுகளும் அவற்றின் கூட்டுக்களும் தமது வெளிநாட்டுப் பங்காளர்களுடன் சேர்ந்து கூட்டு நிறுவனங்களின் (Joint Enterprises) சிறப்பமயமாக்கம், உற்பத்தியின் மாதிரி, அளவு, கேள்வி, விலைகளையும் மற்றும் சந்தைக் காரணிகள் பற்றியும் தீர்மானம் செய்யலாம். கூட்டு நிறுவனங்கள் இந் நாட்டிலோ அல்லது வேறெங்கேயோ அமையலாம் சோவியத் கூட்டுறவுகளும் அவற்றின் கூட்டுகளும் அனைத்துலக கூட்டுறவு அமைப்புக்களின் நடவடிக்கைகளில் பங்கு கொள்ள முடியும்.'' இறுதியில் இச் சட்டம் பிரகடனம் செய்வதாவது; ''கூட்டுறவுகளில் ஐக்கியப்படும் ''பிரஜைகளின்'' அரசியல் சட்ட உரிமைகள் சோவியத் யூனியனின் பொருளாதார முறையினால் உத்தரவாதம் செய்யப்படும் எனவும் உற்பத்தி சாதனங்களதும் மற்றும் சட்ட ரீதியான கூட்டுறவு சொத்துடமை கூட்டுறவு அரச ஊக்குவிப்புக்கள் அங்கீகரிக்கப்படும்' என்கிறது.

66. சோவியத் யூனியனின் உள்ளே இடம்பெற்றுவரும் இந்த அபிவிருத்திகள், ட்ரொட்ஸ்கி முதலாளித்துவம் புனருத்தாரணம் எடுக்கக் கூடிய சாத்தியமான வடிவங்கள் பற்றி கலந்துரையாடுகையில் வலியுறுத்திய அதே காட்சிகளை அடித்து நிரூபித்துள்ளது: எல்லாவற்றுக்கும் முதல் பலவீனமான கூட்டுப் பண்ணைகளில் இருந்து பலம்வாய்ந்த விவசாயிகளை அபிவிருத்தி செய்யவும் பலம்வாய்ந்த கூட்டுப் பண்ணைகளை முதலாளித்துவ வகையிலான கூட்டுறவுகளாக்கவும், விவசாய சரக்குமுதல்கம்பனிகளாக்கவும் வேண்டிய நிலைமைகளை உருவாக்குவது அவசியம். கைத்தொழில் அரங்கில் தேசியமய ஒழிப்பானது மென்ரக கைத்தொழில்களுடனும் உணவ உற்பத்தி செய்பவற்றில் இருந்தும் ஆரம்பிக்கும். திட்டமிடலின் அடிப்படைக் கொள்கைகள் இடைமருவு காலப்பகுதியில் தனிப்பட்ட கூட்டுத்தாபனங்கள்: அதாவது சோவியத் பெரும் கைத்தொழில் துறைகளில் உரிமையாளர்கள் ஆகக்கூடிய தனியார் கூட்டுத்தாபனங்களுக்கும் அரச அதிகாரத்துக்கும் இடையேயான ஒரு

தொகை சமரசங்களாக பரிமாற்றப்படும்'' (காட்டிக் கொடுக்கப்பட்ட புரட்சி).

67. 'க்ளாஸ் நொஸ்ட்' சோவியத் ஜனநாயகத்தின் ஒரு நிச புத்தமைப் பினை பிரதிநிதித்துவம் செய்யவில்லை: இது பாட்டாளி வர்க்கத்தின் அரசியல், சமூக அந்தஸ்தினை மேலும் பலவீனப்படுத்துவதன் மூலம் அதிகாரத்துவத்தின் உள்ளும் முழுமையான சோவியத் சமூகத்தின் உள்ளும் முதலாளித்துவப் போக்குக்களைப் பலப்படுத்தும் திசையில் திட்டவட்டமாக நிருப்பப்பட்டுள்ளது. இந்த விதத்தில் ரு முதலாளித்துவப் பாணியிலான பாராளுமன்றத்தையும், போனபாட்டிச மாதிரியான ஜனாதி தியையும் கொண்ட ஒரு புதிய பாராளுமன்ற அமைப்பினை நிறுவும் தீர்வும் பெரிதும் முக்கியத்துவம் வாய்ந்தது. இந்தச் ''சீர்திருத்தத்தின்'' முக்கிய நோக்கம் 1917 அக்டோபரில் ஸ்தாபிக்கப்பட்ட சோவியத் அரசுக்கும் தொழில ள வர்க்கத்துக்கும் இடையேயான வரலாற்றுத் தொடர்புகளை மேலும் கரைப்பதேயாகும். சொர்பச் சேவ் பிரகடனம் செய்ததுபோல் இந்தச் சீர்திருத்தங்கள் 'ப்ரொஸ்ரொயிகா' வை அமுல் செய்ய அவசியமானவை. சஸ்லாவாஸ்கியா வலியுறுத்தியதுபோல் அதிகாரத்துவத்தின் பெரும் வசதி வாய்ப்புக்கள் நிறைந்த பகுதியினர் எதிர் பார்ப்பவ றின் நடைமுறை இலக்கு, முதலாளித்துவ உறவுகளும் தனியார் சொத்துக்களும் வளர்ச்சி காண்பதை தொழி ாள வர்க்கம் எந்த விதத்திலும் தடுப்பதை தடை செய்வதே என்பதில் சர்ச்சைக்கு இடமில்லை. தனது அதிகார ஏகபோகத்தை காக்கும் பொருட்டு அதிகாரத்து த்தினால் சிருஷ்டிக்கப்பட்ட முழு வன்முறை இயந்திரம் இன்னமும் அப்படியே இ ந்து வருகின்றது. கே.ஜீ பி. யின் அதிகாரங்கள் குறையாமல் தொடர்ந்து இருந்துவருவதோடு எண்ணற்ற பல்லாயிரம் புரட்சியாளர்களின் கொலைகளுக்கு பொறுப்பானவர்கள் இனங் கா ப்பட்டு தண்டிக்கப்படவில்லை. அத்தோடு நொகோர்னு—கர ாக் சம்பவங்கள் ஜனநாயக உரிமைகளை தமது சொந்த நடவடிக்கைகள் மூலம் பெற்றுக்கொள்ளும் சோவியத் மக்களின் எந்தவொரு முயற்சியும் ஈவிரக்கமற்ற முறையில் நசுக்கப்படும் என்பதை வெளிப்படுத்தியுள்ளது.

68. தனியார் சொத்துக்களை புனருத்தாரணம் செய்வதற்கான சட்டவரையறைகளை சிருஷ்டிக்கவும், முதலாளித்துவத்தை நிசமாக மீள அமுல் செய்யவும் சோவியத் பாட்டாளிகளை கூலி அடிமைகளாக மாற்றவும் அதிகாரத்துவத்துக்கு இவை போதுமானதல்ல. அதன் இலக்குகளை காண்பதற்கு நிர்வாக நடவடிக்கைகளுக்கு மேற்பட்டவை அவசியப்படுகி றன. அது இரத்தம் தோய்ந்த எதிர்ப்புரட்சி விதிமுறைகள் ஊடாக சோவியத் தொழிலாளர் வர்க்கத்தின் ஆழமாக வேரூன்றிய எதிர்ப்பினை நசுக்கியாக வேண்டும். கொர்பச்சேவின் பொருளாதாரக் கொள்கைகளுக்கு பரந்தளவிலான எதிர்ப்பு இருப்பது பற்றிய செய்திகள் வெளிவந்துள்ளன. சோவியத் மக்கள் உற்பத்தி சாதனங்களில் தனிச் சொத்துடமையை மீண்டும் அறிமுகம் செய்வதை மகிழ்ச்சி ஆரவாரத்துடன் வரவேற்கிறார்கள் என்பதற்கான கட்புலனாகக் கூடிய அறிகுறி ள் இல்லை என்பதை முதலாளித்துவ பார்வையாளர்கள் கூட அங்கீகரிக்கும்

வண்ணம் நெருக்கப்பட்டுள்ளனர். 'வெளிநாட்டு விவகாரம்' என்ற வெளியீடு (Foreign Affairs) 1987 மே 1ல் தனியார் தொழில்களை (Business) அங்கீகரிக்கும் வண்ணம் இடம்பெற்ற சட்டத்திருத்தம் சம்பந்தமாக சார்புரீதியில் பொதுமக்கள் அக்கறை காட்டாததையிட்டு அச்சம் நிறைந்த அதிர்ச்சியை வெளியிட்டது. மாஸ்கோ, லெனின்கிராட் முழுவதிலும் ஒரு சில 'டசின்' தனியாட்கள் மட்டும் தனியார் 'டாக்சிகளை' ஓட்டுவதற்கான 'லைசென்சுகளை' பெற்றுக் கொண்டனர். 'வெளிநாட்டு விவகாரம்' (Foreign Affairs) இதனை கவலையுடன் அறிவிக்கையில் 'சோவியத் யூனியனில் இன்று தனியார் நிறுவனங்களிற்கு அனுமதி கிடைத்துள்ட நிலையில், தனியார் நிறுவனங்களின் பால் சொற்பமான தன்னியல்பான இயக்கமே காணப்பட்டது'' என்றது. (தொகுதி 67 இல. 3)

69. கொர்பச்சேவ் தனது பிற்போக்கு 'ப்ரெஸ்ரொயிகா'வை அமுல் செய்ய முயல்கையில் ஸ்டாலினிசம் அடிப்படையாகக் கொண்டிருந்த சகல பொருளாதார எடுகோள்களும்—அதாவது தனி நாட்டில் சோசலிசத்தை நிர்மாணிக்க முடியும்—அடியோடு தகர்ந்து போய்விட்டதை ஒப்புக்கொள்வதை நோக்கி நிற்கின்றது. உண்மையில் சோவியத் பொருளாதாரத்தின் நிச நெருக்கடி, உலகச் சந்தையின் வளங்களில் இருந்தும் அனைத்துலக உழைப் பகுப்பில் இருந்தும் அது வலுக் கட்டாயமாக அந்நியமாக்கப்பட்டதில் வேரூன்றி உள்ளது. இந்த நெருக்கடியைக் கையாள இரண்டு வழிகள் மட்டுமே உள்ளன. கொர்பச்சேவ் பிரேரித்துள்ள வழி, அரச கைத்தொழில்களை நிர்மூலமாக்குதல், திட்டமிடல் கொள்கைகளை நிராகரித்தல், வெளிநாட்டு வர்த்தகத்தில் அரசின் ஏகபோகத்தை கைவிடுதல் முதலானவற்றை உள்ளடக்கியுள்ளது. அதாவது: சோவியத் யூனியனை உலக ஏகாதிபத்திய அமைப்பினுள் மீள இணைப்பதாகும். இந்த பிற்போக்குத் தீர்வுக்கான மாற்றீடானது திட்டமிட்ட பொருளாதாரத்தினை ஐரோப்பிய, வட அமெரிக்க, ஆசிய முதலாளித்துவக் கோட்டைகளுக்கு விஸ்தரிப்பதை நோக்கமாகக் கொண்டு சோவியத் அனைத்துலக தொழிலாள வர்க்கத்தினை ஒரு புரட்சிகர எதிர்த்தாக்குதலூடாக இணைப்பதன் மூலம் உலகப் பொருளாதாரத்தின் மீதான ஏகாதிபத்திய ஆளுமையைச் சிதறடிப்பதை வேண்டி நிற்கின்றது.

70. இவ்விரண்டு பதிலீடுகளதும் இணக்கம் காணமுடியாத குரோதம் நிறைந்த பண்பானது சோவியத் பாட்டாளி வர்க்கத்தின் வரலாற்று உந்துதல்களுக்கும் ஸ்டாலினிச அதிகாரத்துவத்தின் முன்நோக்குகளுக்கும் இடையேயான ஆழமான சமூக முரண்பாடுகளைப் பிரதிபலிக்கின்றது. அக்டோபர் புரட்சியின் அடிப்படையான தேட்டங்கள் மீது அதிகரித்துவரும் தாக்குதல்கள், அதிகாரத்துவத்துக்கு எதிரான தொழிலாள வர்க்கத்தின் ஒரு புரட்சிகரப் போராட்டத்துக்கான தளத்தினை தயார் செய்கின்றது. சமீபத்தில் போலந்திலும் யூகோசலவாக்கியாவிலும் இடம்பெற்ற வேலை நிறுத்தங்கள் சோவியத் ருஷ்யாவில் வந்து கொண்டுள்ளதாக எதிர்பார்க்கப்படுவதன் ஒரு மங்கல் வெளிச்சம் மட்டுமே; சோவியத் யூனியனில் போல்ஷிவிசத்தை

அதன் இன்றைய வடிவான ட்ரொட்ஸ்கிசத்தில் புதுப்பிப்பதற்கான புற நிலை நிலைமைகள் இன்று ஏற்பட்டுள்ளது.

71. அனைத்துலகக் குழு, அதிகாரத்துவத்தின் உள்ளேயான நெருக்கடியினால் உருவான வாய்ப்புக்களை — அவை எவ்வளவு தான் தற்காலிகமானவையாய் இருந்த போதிலும் க்ளாஸ்நொஸ்டினால் வழங்கப்பட்டவை உட்பட — சோவியத் பாட்டாளி வர்க்கத்தினிடையே புரட்சிகர வேலையின் அபிவிருத்தியின் பொருட்டுப் பயன்படுத்திக் கொள்வது இயற்கையே. ஆனால் அந்த வேலை, எப்போதும் ஸ்டாலினிசத்துக்கு எதிரான நீண்ட போராட்டத்தின் வரலாற்றுப் படிப்பினைகளின் அடிப்படையிலான மார்க்சிச நனவினை அபிவிருத்தி செய்யும் விதத்தில் வழிநடாத்தப்பட வேண்டும். பழம் போல்ஷிவிக்குகளின் புனருத்தாரணமும் மாஸ்கோ வழக்குகளின் நிராகரிப்பும் சோவியத் அதிகாரத்துவத்துக்கு எதிரான போராட்டம் தொடர்பான நான்காம் அகிலத்தின் கொள்கை ரீதியான மனப்பாங்கினையோ அல்லது கொர்பச்சேவ் கன்னை பற்றிய எமது மதிப்பீட்டையோ மாற்றிவிடவில்லை. எந்த வகையிலும் இந்தப் புனர்வாழ்வுக்கான 'வரவு' (கிரெடிட்) அக்டோபர் புரட்சியின் 70 ஆவது ஆண்டு நிறைவு உரையில் சோசலிசத்துக்கு ஸ்டாலினின் 'பங்களிப்பை' இன்னமும் புகழ்ந்து கொண்டுள்ள கொர்பச்சேவுக்கு அன்றி திட்டமிட்ட பொருளாதாரத்தை ஓயாமல் காக்கின்றதும் கம்யூனிச இலக்கினை அடைய சளைக்காமல் அர்ப்பணம் செய்கின்றதுமான சோவியத் தொழிலாள வர்க்கத்துக்கே போய்ச் சேர்கின்றது. அதிகாரத்துவத்தின் உள்ளேயான நெருக்கடியின் பின்னணியில் உள்ளவை இவை தான். அனைத்துலக குழுவின் முதல் பொறுப்பு அதிகாரத்துவத்தின் கன்னைகளில் இருந்தும் சோவியத் தொழிலாள வர்க்கத்தின் அரசியல் சுதந்திரத்தைக் காக்கவும், அரசியல் புரட்சியின் பதாகையை அதற்கு வழங்கவும் போராடுவதே.

# சீனாவில் ஸ்டாலினிசம்

72. இப்போராட்டத்தின் பெறுபேற்றின் மீது தான் ஸ்டாலினிச அதிகாரத்துவங்களினால் ஆளப்படும் சகல நாடுகளதும் தொழிலாள வர்க்கத் தேட்டங்களின் மிச்ச சொச்சங்களின் உயிர்வாழ்வு தங்கியுள்ளது. கிழக்கு ஐரோப்பா பூராவும் சீனாவிலும், வியட்நாமிலும், லாவோசிலும் அதிகாரத்துவங்கள் சோவியத் ருஷ்யாவைக் காட்டிலும் மிகவும் வேகமாக உலக முதலாளித்துவ அமைப்பினுள் தமது தேசியப் பொருளாதாரங்களை இணைத்துவிட நகர்ந்து கொண்டுள்ளன. இப்போக்கு சீனாவில் பெரிதும் முன்னேறியுள்ளது. மாஓவின் சடலம் பொதுஜனப் பார்வைக்காக இன்னமும் கெடாமல் பேணிக் காக்கப்

பட்டு இருக்கலாம். ஆனால் அவரின் பரம்பரைச் சொத்தின் நாற்றம் எடுப்பு ஏற்கனவே உச்சக்கட்டத்தை எட்டியுள்ளது. அவரின் வாரிசுகள் திட்டமிட்ட பொருளாதாரத்தின் எஞ்சிய அனைத்தையும் சிதறடிக்கத் தொடங்கி விட்டனர். 1949 இன் பின்னர் கூட்டுப்பண்ணை முறையின் கீழ் கொணரப்பட்ட சகல நிலங்களும் தனியார் உடமையிடம் திருப்பி ஒப்படைக்கப்பட்டுள்ளன, 'செல்வந்தராவது மகத்துவமானது' என்ற அரசாங்க ஊக்குவிப்பு சுலோகத்தினைக் கொண்ட உத்தியோகபூர்வமான பதாகையின் கீழ் நாட்டுப் புறங்களில் முதலாளித்துவ உறவுகள் செழித்து வருகின்றன. நகர்ப்புற மத்திய நிலையங்களில் முதலாளித்துவ நிறுவனங்களின் மீதான சகல கட்டுப்பாடுகளும் அடியோடு அகற்றப்பட்டுள்ளதோடு ஒரு காலத்தில் அரசுடமை கைத்தொழிலாக இருந்தவற்றின் பெரும்பாகம் வெளிநாட்டு, தேசிய முதலாளிகளுக்கு ஏலத்தில் விற்பனை செய்யப்படுகின்றன. 1000 க்கும் அதிகமான தொழிலாளர்களை வேலைக்கமர்த்தும் பல தனியார் பக்டரிகள் உண்டு. 1988 ஜூனில் வெளியான புதிய விதிமுறைகள் முதலாளித்துவ நிறுவனங்களில் வேலைக்கு அமர்த்தக் கூடிய தொழிலாளர்களின் எண்ணிக்கை தொடர்பான சகல வரையறைகளையும் அகற்றியுள்ளது.

73. உலக ஏகாதிபத்தியத்தின் இந்த சீன ஸ்டாலினிச ஏஜன்டுகள், சிறப்புப் பொருளாதார வலயங்களை (எஸ். ஈ. சற்.) ஸ்தாபித்துள்ளனர்; இவற்றை தொழிலாள வர்க்கத்தின் சுரண்டலுக்காக வரவழைக்கின்றனர். 'மெயின்லான்ட்' பொருளாதாரத்தில் துரிதமாக விரிவடையும் தாய்வான் மூலதனத்தின் பாத்திரம் சிறப்பு முக்கியத்துவம் வாய்ந்தது. 1987 இல் ஹொங்கொங்கை ஒரு இடமாற்றப் புள்ளியாக கொண்டு தாய்வானுக்கும் சீனவுக்கும் இடையே இடம்பெற்ற மறைமுக வர்த்தகம் 58% ஆல் — 1.5 பில்லியன் டாலர்களாக வளர்ச்சி கண்டது. 'மெயின்லான்டின்' உற்பத்தியில் ஏற்கனவே 80 க்கும் அதிகமான தாய்வான் கம்பனிகள் முதலீடு செய்துள்ளதோடு 200 க்கும் அதிகமானவை இந்நடவடிக்கையில் ஈடுபடத் தொடங்கி உள்ளன.

74. முதலாளித்துவத்துக்கு நல்வரவு கூறும் பாய் விரிப்புடன் மார்க்சிசத்தின் மீதான முழு அளவிலான டகிரங்கத் தாக்குதலும் சேர்ந்து கொண்டுள்ளது. இந்த அதிகாரத்துவம் கம்யூனிஸ்ட் அறிக்கை பிரசுரிக்கப்பட்ட 140 ஆவது ஆண்டு நிறைவினை அதன் பிழைகள் எனப்படுவதை கண்டிப்பதற்கான ஒரு சந்தர்ப்பமாக்கிக் கொண்டது. ஒரு முன்னணி சஞ்சிகை 'முதலாளித்துவம் வீழ்ச்சி கண்டு சோசலிசம் வந்து கொண்டிருக்கின்றது என மார்க்சும் எங்கேல்சும் தீர்க்கதரிசனமாக் குறிப்பிட்டது தவறு, ஏனெனில் உண்மைகள் இதனை ஊர்ஜிதம் செய்யவில்லை' என சமீபத்தில் ஆட்சேபித்தது. இன்னும் மற்றுமோர் அறிக்கை ஸ்டாலினிஸ்டுகளால் கடைபிடிக்கப்பட்டு வரும்

கொள்கைகளின் நிசத் தன்மையை அம்பலமாக்குகிறது. ஒரு முன்னணி 'கோட்பாட்டாளன்' அரசாங்க கொள்கை 'ஊழியத்துக்கும் மூலதனத்துக்கும்' ஏற்ப இலாபங்கள் பங்கிடப்படுவதை அனுமதிக்கிறது' என விளக்கினார். தொழிலாளர் வர்க்கத்தின் மீது ஏற்படுத்தும் தாக்கம் பற்றி இக் 'கோட்பாட்டாளன்' கருத்துத் தெரிவிக்கையில் அரசாங்கம் 'சரணடலை அனுமதிக்கிறது. ஆனால் 'சோசலிச சரணடல்!' என்றார்.

75. சீன ஸ்டாலினிச பத்திரிகையில் வெளியான செய்தி இந்த 'சோசலிச சரணடலின்' அர்த்தத்தை சுட்டிக் காட்டியிருந்தது. 30 இலட்சத்துக்கும் அதிகமான குழந்தைகள் தனிப்பட்ட முதலாளித்துவ வேலை கொள்வோரின் கீழ் வேலை செய்யும் பொருட்டு பாடசாலைகளிலிருந்து விலகி உள்ளனர். வேலை கொள்வோர் 'குழந்தை ஊழியத்தை பயன்படுத்தி செல்வந்தர்' ஆகுவதை பத்திரிகை ஒப்புக்கொண்டுள்ளது. குழந்தை ஊழியத்தின் பெருக்கம் தொழிலாளர்களின் வாழ்க்கைத் தரத்தில் ஏற்பட்ட பிரமாண்டமான வீழ்ச்சியின் ஒரு நிச வெளிப்பாடாகும். தொழிலாளர்களின் கூலிகளில் சொற்ப அதிகப்புக்கள் மட்டும் ஏற்பட்டிருக்கையில் பணவீக்கம் அதிகரித்து வருகின்றது. 1988 இன் முதல் காலாண்டு பகுதியில் அத்தியாவசியமற்ற உணவுப் பொருட்களின் விலை 24.2% ஆலும் மரக்கறிகள் 48.7% ஆலும் அதிகரித்தன.

76. பப்லோவாதிகள் பல தசாப்தங்களாக மாஓவாதத்தை ட்ரொட்சிசத்துக்கான ஒரு பதிலீடாக மகத்துவப்படுத்திக் காட்டி வந்தனர். 1952 க்கு முன்பிருந்தே பப்லோ, மாஓவாதிகளால் சிறைப் பிடிக்கப்பட்ட ட்ரொட்ஸ்கிஸ்டுகளின் மேன்முறையீடுகளைப் பிரசுரிக்கவும் மறுத்து விட்டார். பப்லோவாதிகள் மாஓவின் ஸ்டாலினிசம், முதலாளித்துவ தேசியவாதம் விவசாயி தீவிரவாதங்களில் இருந்து பொறுக்கி எடுத்த கலவைக்கு எதிராக ஒரு நிச பாட்டாளி வர்க்க நிலைப்பாட்டினால் சீன ட்ரொட்ஸ்கிஸ்டுகளை காப்பதற்குப் பதிலாக இந்த இணக்கபூரு மார்க்சிஸ்டுகளை 'புரட்சியின் அகதிகள்' என கண்டனம் செய்து தாக்கினர். 1957 இல் இலங்கை பப்லோவாதிகள் சீன வெளிநாட்டு அமைச்சர் சூ. என். லாயை சந்தித்த போதிலும் இந்த சிறைப்பிடிக்கப்பட்ட ட்ரொட்ஸ்கிஸ்டுகளின் விடயத்தை எழுப்ப மீண்டும் மறுத்துவிட்டார்கள். மாஓவாதத்துக்கு அடிபணிந்து போன பப்லோவாதிகளின் வரலாற்றுத் தாக்கங்கள் இன்று 'மாபெரும் சுக்கான் பிடிகாரனின்' வாரிசுகளின் கொள்கைகளாக முழுமையே அம்பலமாகி உள்ளது. முதலாளித்துவத்தை மீண்டும் வெறியுடன் அறிமுகம் செய்து வைக்கும் சீன ஸ்டாலினிஸ்டுகளின் கொள்கைகள் நாட்டினை பொருளாதார அழிவினுள் தள்ளி வருவதோடு, தவிர்க்க முடியாத விதத்தில் பாட்டாளி வர்க்கத்தின் பிரமாண்டமான வெடிப்புக்கும் இட்டுச் செல்லும். அடுத்த புரட்சிகர எழுச்சியின் போது நாட்டில் அதிகாரத்துவத்தினை

யும் ஸ்டாலினிசத்தால் மூளையிடப்பட்ட போராசை பிடித்த முதலாளி வர்க்கத்தினையும் துடைத்துக் கட்ட இடம்பெறும் மாபெரும் போராட்டத்தில் ஏழை விவசாயிகளுக்கு சீன தொழிலாள வர்க்கமே தலைமை தாங்கப் போகின்றது

# நிரந்தரப் புரட்சிக் கோட்பாடு நிரூபணம்

77. பின்தங்கிய நாடுகளில் ஸ்டாலினிசம், மாஓவாதங்களுக்கான பப்லோவாதிகளின் அடிபணிவு தேசிய முதலாளி வர்க்கத்துடனான சமரசங்களுடன் இணைந்து பயணம் செய்தது. பப்லோவாதிகள் அக்டோபர் புரட்சி, சீனப் புரட்சி (1925 — 27) ஸ்பானிய புரட்சிகளின் அத்தியாவசியமான வரலாற்றுப் படிப்பினைகளுக்கு புறமுதுகு காட்டியதன் மூலம் அல்ஜீரியாவின் பென்பெல்லா முதல் ஆர்ஜன்ரைனாவின் பேரோனுக்கு மட்டுமன்றி பர்மாவின் நீவின் வரையிலான சகல முதலாளித்துவத் தேசியவாத தலைவர்களுக்கு கரகோஷம் செய்யும் தலைவர்களாகினர். அவர்கள் தேசிய முதலாளி வர்க்கத்திடமிருந்து தொழிலாள வர்க்கத்தின் அரசியல் சுயாதீனத்துக்குப் போராடுவதன் அவசியத்தினை நிராகரித்தனர். இதற்குப் பதிலாக அவர்கள் நிரந்தரப் புரட்சிக் கோட்பாட்டினைப் பொய்மைப்படுத்தினர். இதனை பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்துக்கான போராட்டத்துக்கு வழிகாட்டும் ஒரு நனவான மூலோபாயம் என்ற நிலையில் இருந்து பாட்டாளி வர்க்கம் அல்லாத சக்திகளுக்கு தமது சொந்த அடிபணிவினை நியாயப்படுத்தும் நிலைக்கு தள்ளினர். தொழிலாள வர்க்கத்தினை சுயாதீனமான முறையில் அணிதிரட்டுவதன் ஊடாக நிரந்தரப் புரட்சியின் மூலோபாயத்துக்காகப் போராடுவதற்கு மாறாகப் பப்லோவாதிகள் இது காஸ்ட்ரோ, பென்பெல்லா போன்ற முதலாளித்துவ தேசியவாதிகளினால் நனவற்ற விதத்தில் யதார்த்தமாக்கப்பட்டுள்ளதாக மனத் திருப்தியுடன் பிரகடனம் செய்தனர். அத்தோடு பப்லோவாதிகள் காஸ்ட்ரோ, பென்பெல்லா போன்ற 'நனவற்ற மார்க்சிஸ்டுகள்' 'தொழிலாளர் அரசுகளை ஸ்தாபிப்பதில் வெற்றி கண்டுள்ளதால் பாட்டாளி வர்க்கம் ஆட்சிக்கு வரத் தனது சொந்தப் புரட்சிக் கட்சியைக் கொண்டிருக்க வேண்டியதில்லை என பிரகடனம் செய்தனர். பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் என்ற விடயம் தொடர்பாக மார்க்ஸ் எங்கேல்ஸ், லெனின், ட்ரொட்ஸ்கி எழுதிய அனைத்தையும் — சிறப்பாக அரச ஆட்சியின் புதிய வடிவமாகத் தொழிலாள வர்க்கத்தினால் கண்டுபிடிக்கப்பட்ட சோவியத்துக்களின் உலக முக்கியத்துவத்தை — புறக்கணித்த பப்லோவாதிகள், ஒரு தொழிலாளர் அரசு உருவாக்கப்பட்டு விட்டதா இல்லையா என்பதைத் தீர்மானம் செய்ய, தொழிலாளர் ஆட்சியின சுயாதீனமான வடிவங்களின் தோற்றம் ஒரு அத்தியாவசியமான அளவீடு ஆகமாட்டாது என

வாதிட்டனர்.

78. மறு ஐக்கியத்துக்கான 1963 ஆம் ஆண்டின் காங்கிரஸ் பின் தங்கிய நாடுகளில் நான்காம் அகிலத்தின் பகுதிகளை கட்டி எழுப்பும் வரலாற்று அவசியத்தினை நிராகரிக்கும் வேலைத்திட்டத்தினை அடிப்படையாகக் கொண்டிருந்தது. அக்காங்கிரஸில் பப்லோவாதிகள் நிறைவேற்றிய பிரேரணை பிரகடனம் செய்ததாவது! நடு மையம் வரை நாற்றம் கண்டு பரந்த ஆதரவினை இழந்து போயுள்ள ஆளும் வர்க்கங்களை எதிர்கொள்ளும் புரட்சி, ஏழை விவசாயிகள், ஏழையான குட்டி முதலாளி வர்க்கம் உள்ளடங்கலாக பரந்த உலக ஜனத்தொகையினை போராட்டத்தினுள் ஈர்க்கின்றது. இதன் மூலம் பாரம்பரியமான ஒழுங்குகளையும், அதன் அரசினையும் சரிவுக்குள் தள்ளுகின்றது. அத்தகைய அளுத்தங்களை மத்தியவாத தொழிலாள வர்க்க கட்சிகள் மீதும் மற்றும் அத்தகைய அமைப்புக்கள் மீதும் செலுத்துவதன் மூலம் அவற்றை ஆட்சிக்குக் கொண்டுவரச் செய்கின்றது;...... பின்தங்கிய நாடுகளில் எதிரியின் பலவீனங்கள் மொட்டை ஆயுதத்துடனும் ஆட்சிக்கு வருவதற்கான சாத்தியத்தை உண்டுபண்ணியுள்ளது’.

79. புரட்சிக் கட்சியைக் கட்டி எழுப்பும் போராட்டத்தினை கைவிடுவதானது பாட்டாளி வர்க்கத்தின் புரட்சிகர பாத்திரத்தினையே நிராகரிப்பதாகும். மறு ஐக்கியத்துக்கான பிரேரணையில் பாட்டாளி வர்க்கத்துக்கான பதிலீட்டினை தேடுதல் வெளிப்பாடாகியது: ‘இந்நாடுகளின் விசித்திரமான சமூக — பொருளாதார அடிப்படையின் நோக்கில் பாட்டாளி வர்க்கத்தின் முக்கிய பலம், கைத்தொழில் பற்றித் தொழிலாளர்கள் இடையே காணப்படவில்லை, இவர்கள் — ஆர்ஜன்ரைனாவை தவிர — இந்நாடுகளில் சுறுசுறுப்பான உழைக்கும் ஜனத்தொகையில் ஒரு சிறிய துண்டினையும் கூலி உழைப்பாளர்களின் சிறுபான்மையினரை மட்டுமே கொண்டுள்ளனர்’. சுரங்கத் தொழிலாளர்கள், பெருந்தோட்டத் தொழிலாளர்கள், விவசாயத் தொழிலாளர்கள் மற்றும் பெருமளவிலான தொழிலற்றவர்கள் மீது கவனம் செலுத்தப்பட வேண்டும். கெரில்லா படைகளை விரிவுபடுத்தும் வடிவில் விவசாயிகள் மார்க்சிசக் கோட்பாட்டில் சுட்டிக் காட்டப்பட்டதனை விட கூடிய தீவிரமும், தீர்க்கமுமான பாத்திரத்தினை காலனித்துவ புரட்சியில் சந்தேகத்துக்கு இடமின்றி ஆற்றியுள்ளனர்......’

80. கெரில்லாவாதத்தினை மகத்துவப்படுத்துவதானது பொலீவிய பப்லோவாதி மொஸ்காசோவினால் அப்பட்டமாக உச்சரிக்கப்பட்டது. ‘கியூபாவாரர்களால் முன்வைக்கப்பட்ட கெரில்லா விதிமுறையானது ஒவ்வொரு நாட்டினதும் சிறப்புத் தன்மைகளுக்கு ஏற்ப வேறுபட வேண்டி;

இருப்பினும் சகல அபிவிருத்தி அடையாத நாடுகளிலும் பிரயோசிக்கத் தக்கதாகும். தீர்வு காணப்படாத நிலப் பிரச்சினையை உடைய பரந்தளவிலான விவசாயிகளைக் கொண்ட அந்நாடுகளில் கெரில்லாக்கள் தமது பலத்தினை விவசாயிகளிடமிருந்தே பெறுவர். கெரில்லாப் போராட்டம் இம்மக்களை கியூபாவில் நடந்தது போல் ஆயுதமும் கையுமாக தமது விவசாயப் பிரச்சினையை தீர்க்க நடவடிக்கையில் ஈடுபடுத்தும். ஏனைய நாடுகளில் பாட்டாளி வர்க்கமும் நகரங்களின் தீவிரவாத குட்டி முதலாளித்துவ வர்க்கமும் கெரில்லாப் படைகளுக்கு ஆட்களை வழங்கும்' ('உலகப் புரட்சியின் 50 ஆண்டுகள்' — 1917 — 1967 — ஆசிரியர் ஏர்னெஸ்ட் மண்டேல்) அன்று சில்லி தொழிலாளர்களின் எதிர்கால தோல்விக்காக சுறுசுறுப்புடன் தொழிற்பட்டு வந்த மொஸ்கோசோவின் சகாவான விட்டேலும் கெரில்லா யுத்தத்தின் அளவு கடந்த முக்கியத்துவத்தை தம் பட்டம் அடித்தார்: 'இந்தப் புதிய ஆயுதக் கிளர்ச்சி மூலோபாயத்தைத் தொடக்கி வைத்த பெருமை மாஓசேதுங்குக்கும் சீனக் கம்யூனிஸ்ட் கட்சிக்குமே உரியது என்பதில் பிரச்சினைக்கு இடமில்லை'. (அதே நூல் பக்கம் — 46) என பிரகடனம் செய்தார்.

81. பப்லோவாதிகளின் அரசியல் குற்றங்களின் பரிமாணத்தினை முழுமனே புரிந்து கொள்ள கெரில்லா மூலோபாயத்தின் பலாபலன்கள் பற்றிய ஒரு ஐந்தொகையை வரைய வேண்டியிருக்கும். சில்லி, உருகுவே, பொலிவியா, ஆர்ஜன்ரைனா நாடுகளில் கெரில்லாவாதத்தினைப் புகழ்ந்து பாராட்டுவதன் மூலம் பப்லோவாதிகள் பாட்டாளி வர்க்கத்திலிருந்து புரட்சிகர மூலகங்களைத் தனிமைப்படுத்தினர், தொழிலாள வர்க்கத்தின் புரட்சிக் கட்சியின் அபிவிருத்தியை தடை செய்தனர், பெரும் தோல்விகளுக்குப் பங்களிப்பு செய்தனர்.

82 நிரந்தப் புரட்சிக் கோட்பாட்டினை காட்டிக் கொடுத்த இப் பயணத்தில் பப்லோவாதிகள் அனைத்துலகப் பாட்டாளி வர்க்க நிலைப்பாட்டினை முழுமனே கைவிட்டனர். உண்மையில் சோசலிசத்தின் வரலாற்று முன்நோக்கினை முதலாளித்துவம் ஏகாதிபத்தியத்துக்கு எதிரான தொழிலாள வர்க்கத்தின் போராட்டத்தின் வேர்களில் இருந்து தனிமைப்படுத்தினர். பப்லோவாதிகள் தமது சந்தர்ப்பவாதப் போக்கினை அமுல் செய்யும் பொருட்டு ஸ்டாலினிஸ்டுகளின் பழைய செல்வாக்கிழந்த 'இரண்டு கட்ட' கோட்பாட்டுக்குப் புத்துயிரூட்டினர். இதன் மூலம் கிரேம்ளின் அதிகாரத்துவம் பல தசாப்தங்களாக பாட்டாளி வர்க்கத்தினை பல்வேறு முதலாளித்துவ தேசியத் தலைவர்களுக்குக் கீழ்ப் படுத்தியது. இதனை சோசலிசப் புரட்சிக்கான ஆரம்பிப்புக்கள் ஜனநாயகப் புரட்சி பூரணப்படுத்தப்படும் வரை தாமதப்படுத்தப்பட வேண்டும் எனக் கூறியபடியே செய்தனர்.

83. தேசிய முதலாளி வர்க்கத்துக்கு தமது கீழ்ப்படிவினை நியாயப் படுத்தி வந்த அதேவேளையில் பப்லோவாதிகள் தமது மறு ஐக்கியத்துக் கான காங்கிரசில் பின்தங்கிய நாடுகளில் புரட்சித் தலைமைக்கான நெருக் கடி உண்மையில் நிலவவில்லை எனவும் அல்லது குறைந்தபட்சம் அற்ப அளவில் தன்னும் இல்லை எனவும் குறிப்பிட்டனர். 'காலனித்துவ அரைக் காலனித்துவ நாடுகளில்......... ஏகாதிபத்தியத்தினால் சிருஷ்டிக் கப்பட்ட விசித்திரமான சமூக — பொருளாதார முழு அடிப்படையும் முதலாளித்துவத்திற்குரிய பலவீனமேயாகும். ஒரு தீவிரமான விவசாயப் புரட்சி இன்மையால் சன தொகையின் பெரும்பான்மையினரின் நிரந்த ரமான அவலங்களும், கைத்தொழில் மயமாக்கம் சார்பு ரீதியில் துரித தமாக முன்னேறிய போதிலும், வாழ்க்கைத் தரத்தில் ஏற்பட்டுள்ள வீழ்ச் சியும் ஒரு புரட்சிகர அலையில்லாமல் தன்னியக்கமாக சார்பு ரீதியான அல்லது தற்காலிகமான சமூக அல்லது பொருளாதார உறுதிப்பாட் டுக்கான நிலைமையை உருவாக்கி விடாது. பொலிவியாவில் போன்று ஒரு ஓய்ந்து போகா; பரந்த போராட்டங்களின் தொடர்ச்சி 10 ஆண் டுகளுக்கு இந்த அனுபவங்களைப் பெற்றுள்ளது.'

84. சந்தர்ப்பவாத திருப்திக்கான இந்தப் பரிந்துரையின் புறநிலை யான முக்கியத்துவத்தினை ஆராய்வதற்குக் கடந்த கால் நூற்றுண்டு கால இரத்தம் தோய்ந்த அனுபவங்களை — சிலவற்றின் பேர் குறிப்பி டின் இந்தோனேசியா, சில்லி, பொலிவியா' ஆர்ஜன்ரைனு சூடான்— மட்டுமே நினைவில் இருத்திக் கொள்ள வேண்டியிருக்கும். பல வருடங் களாக பப்லோவாதிகள் தமது கொள்கை நிரந்தரப் புரட்சிக் கோட் பாட்டினை அடிப்படையாகக் கொண்டது எனக் கூறி வந்தனர். ஆனுல் 1982 இல் பப்லோவாதத்தின் பிடிவாதமான தர்க்கத்தினைத் தொடர் ந்து சோசலிசத் தொழிலாளர் கட்சி (எஸ். டபிள்யூ பி) ட்ரொட்ஸ்கி யைக் கண்டனம் செய்தது. சோசலிசத் தொழிலாளர் கட்சி தனது சகோதரக் கட்சிகளாக அணைத்துக் கொண்டுள்ள கிரனடா 'நியூ ஜுவல் மூவ்மன்ட்' நிகரகுவா, சன்டினிஸ்டா போன்ற குட்டி முதலாளித்துவ இயக்கங்களைக் கொண்ட ஒரு புதிய 'பரந்த லெனினிச அனைத்துல கத்தின்' அபிவிருத்திக்கு நிரந்தரப் புரட்சிக் கோட்பாடு தடையாக இருப்பதாகப் பிரகடனம் செய்தது. சோசலிசத் தொழிலாளர் கட்சி நிரந்தரப் புரட்சிக் கோட்பாட்டைக் கைவிட்டதோடு 1917 இல் போல் ஷிவிக்குகளால் கைவிடப்பட்டு 1920 களில் சியாங்கை சேக்குடனுன தனது நாசகரமான கூட்டினை நியாயப்படுத்தும் பொருட்டு ஸ்டாலி னுல் புத்துயிருட்டப்பட்ட 'தொழிலாளர் விவசாயிகளது ஜனநாயக சர்வாதிகாரம்' என்ற பழம் சருத்துப்பாட்டினைப் புனருத்தாரணம் செய்துள்ளது. ட்ரொட்ஸ்கிசம் மீதான இந்தத் தாக்குதலின் அரசியல் விளைவுகள் சோசலிசத் தொழிலாளர் கட்சி தென்னுபிரிக்க பாட்டாவி

வர்க்கத்தை முதலாளித்துவ ஆபிரிக்க தேசிய காங்கிரசின் அரசியல் ஆளுமைக்கு நிபந்தனையின்றி அடிபணிய வேண்டும் என உறுதியாக வலியுறுத்தியதன் மூலம் நன்கு தெளிவாக வெளிப்பாடாகி உள்ளது.

85. தேசிய முதலாளித்துவ வர்க்கத்திடம் பப்லோவாதிகளின் இறுதியான அடிபணிவு — சாராம்சத்தில் இரண்டாம் உலகப் போருக்குப் பின் பாட்டாளி வர்க்கப் புரட்சியின் அச்சுறுத்தலைத் திசை திருப்பும் பொருட்டு, ஏகாதிபத்தியம் அந்த சக்திகளின்பால் ஒத்துப்போகும் நிலைக்குத் திரும்பியதையே பிரதிநிதித்துவம் செய்கிறது. இரண்டாம் உலகப் போரினைத் தொடர்ந்து ஆசியா, மத்திய கிழக்கு, ஆபிரிக்கா முழுமையாகவும் உள்ள அரசுகளுக்கு ஏகாதிபத்தியத்தினால் போலிச் சுதந்திரம் வழங்கப்பட்டது. ஆனால் 40 ஆண்டுகளின் பின்னரும் இந்தப் 'புதிய சுதந்திர அரசுகளில்' அடிப்படை ஜனநாயகப் பணிகள் எதுவுமே வெற்றிகரமாக அமுல் செய்யப்படவில்லை. ஸ்டாலினிசத்தின் சீரழிவுடன் சேர்ந்து, பின்தங்கிய நாடுகளில் மக்களின் அடிப்படைத் தேவைகளைத் திருப்தி செய்ய முடியாத முதலாளித்துவ தேசியவாதத்தின் தோல்வி, சோஷலிசத்தை அடைவது என்பது தனியாக ஒரு புறமிருக்க, சர்வதேச பாட்டாளி வர்க்கத்தின் உள்ளே மார்க்சிசத்தின் அபிவிருத்தியைத் தடை செய்ய குட்டி முதலாளித்துவ தத்துவவாதிகளால், சிறப்பாக பப்லோவாதிகளால் முன்வைக்கப்பட்ட எல்லா மூலிகை ளுககும் மேலாக ட்ரொட்ஸ்கிசத்தின் பூரண தத்துவார்த்த வெற்றியைப் பறைசாற்றுகின்றது.

86. 1947 இல் இந்தியா துண்டாடப்பட்டது, தேசிய முதலாளித்துவம் ஏகாதிபத்தியத்துடன் கூட்டமைத்து ஜனநாயக தேசிய போராட்டத்தைக் கருச்சிதைத்ததுடன் அடையாளமாயிற்று. இந்தப் பாணி அதனையே மீண்டும் மீண்டும் இடம்பெறச் செய்தது. ஆயுதப் போராட்டத்தின் தலையீட்டில் நேரடி காலனித்துவ ஆட்சி முடிவுற்ற அங்கெல்லாம் தேசிய முதலாளித்துவத்தினால் காலனித்துவத்தின் கசப்பான மரபுகளையும் பொருளாதார பின்னடைவுகளையும் இல்லாமற் செய்ய முடியவில்லை. ஏகாதிபத்தியத்தின் பொருளாதார குரல்வளை விடுபட முடியாத வகையில் நெரிக்கப்பட்டுக் கொண்டிருப்பதானது குறைந்த வளர்ச்சியடைந்த நாடுகள் என்றழைக்கப்படும் நாடுகளின் தப்பவியலாத கடன் பளுவில் இருப்பதில் காண முடிகிறது. பின்தங்கிய நாடுகளின் மக்கள் தொகையின் பல்வேறு தேசிய இனங்களுக்கிடையில் சமத்துவத்தை ஏற்படுத்துவதற்கு மாறாக இன, மொழி, மற்றும் மத ரீதியான குரோதங்கள் திட்டமிட்டு வேண்டுமென்றே தூண்டி விடப்படுகின்றன. சுயநிர்ணய உரிமை மறுப்பின் வெளிப்பாடே இனவாதம், படுகொலைக்கான ஏற்பாடுகள் மற்றும் அரச ஒடுக்குமுறைகளாகும்.

87. இலங்கையில் தமிழ் குட்டி முதலாளி வர்க்கத்தின் மிகவும் தீவிரமான கன்னையினை பிரதிநிதித்துவம் செய்யும் தமிழ் புலிகள் சுய நிர்ணய உரிமைக்காக ஒரு உறுதியான போராட்டத்தினைக் கொண்டு நடாத்த இலாயக்கற்றதாக உள்ளது. புலிகளின் அரசியல், இந்திய முதலாளி வர்க்கம் பற்றிய உயிராபத்தான நப்பாசைகளை அடிப்படையாகக் கொண்டுள்ளது. இது இந்திய – இலங்கை உடன்படிக்கையை அங்கீகரித்ததன் மூலம் உச்சக்கட்டத்தை அடைந்தது. அத்தோடு தமிழ் வெகுஜனங்களை இன்றைய இக்கட்டான நிலைக்கும் இட்டுச் சென்றது இந்திய இராணுவத்தால் வேட்டையாடப்பட்டு வரும் இன்றைய நிலையிலும் கூட தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர்கள், ராஜீவ் காந்தி மீதான தமது விசுவாசத்தைப் பிரகடனம் செய்து கொண்டுள்ளதோடு, இந்தியப் பாட்டாளி வர்க்கத்துக்குப் புறமுதுகு காட்டி வருகின்றனர். தமிழீழ விடுதலைப் புலிகளின் குட்டி முதலாளித்துவத் தன்மையின் தாக்கங்கள், இந்திய முதலாளி வர்க்கத்தின் மூலோபாய நலன்களைப் பேணும் அவர்களின் நடவடிக்கைகள் மூலம் நன்கு வெளிப்பாடாகி உள்ளது. தமிழீழ விடுதலைப் புலிகளின் நிலைப்பாடானது அதன் மத்திய குழு உறுப்பினரான திலகரின் பேச்சில் திரட்டிக் கூறப்பட்டுள்ளது. அவர் பிரகடனம் செய்ததாவது:

''எமது விடுதலை இயக்கம் இந்தியாவின் நலன்களுக்கு எதிரானது அல்ல. தென்னாசியாவின் பிராந்திய வல்லரசு என்ற முறையில் அதன் அந்தஸ்தினை நிலைநாட்டு இந்தியாவின் மூலோபாய அபிலாசைகளுக்கு நாம் எந்த வகையிலும் எதிரானவர்கள் அல்லர். நாம் எப்போதும் இந்தியாவின் நேச சக்தியாக இயங்கி வந்துள்ளோம், அவ்வாறே தொடர்ந்தும் இயங்குவோம். இந்த உடன்படிக்கை இந்தியாவின் புவியியல் – அரசியல் நலன்களை ஈட்டிக் கொள்வதை இலக்காகக் கொண்ட இந்திய – இலங்கை உறவுகளின் வரையறைக்குள் நின்று கொண்டிருப்பின் நாம் எமது நிபந்தனையற்ற ஆதரவினை இந்திய – இலங்கை உடன்படிக்கைக்கு வழங்கியிருப்போம்''.

88. இந்திய முதலாளி வர்க்கத்தின் புவியியல் – அரசியல் நலன்களை சாஸ்டாங்கமாக விழுந்து கும்பிடு போடும் பாணி, 'ஏரியஸ்' திட்டத்தை அங்கீகரிக்கும் நிகரகுவா சன்டினிஸ்டாக்களிடமும் பிரதிபலிக்கின்றது. இது மத்திய அமெரிக்காவில் ஏகாதிபத்திய மேலாதிக்கத்தினை ஊர்ஜிதம் செய்யும் அரச வடிவங்களின் மீறத்தகாத தன்மையை ஏற்கின்றது. சன்டினிஸ்டாக்களின் வரலாறும், பரிணாமமும் முதலாளித்துவ தேசியவாதத்துக்கு பப்லோவாத அடிபணிவின் தவறினை அடித்து நிரூபித்துள்ளது. ஆட்சிக்கு வந்த ஒரு தசாப்தத்தின் பின்னர், சன்டினிஸ்டாக்கள் ஜனநாயகப் புரட்சியின் எந்த விதமான அடிப்படைப் பணிகளையும் அமுல் செய்யத் தவறி விட்டனர். நிலச் சீர்திருத்தம் சம்பந்த

மாக விரிவான வேலைத்திட்டம் எதுவுமே கிடையாது. நாட்டின் பொருளாதாரத்தின் பெரும் பகுதி இன்னமும் தனியார் உடமையாக இருக்கையில், சோசலிஸ்த் தொழிலாளர் கட்சி நிகரகுவாவை ஒரு தொழிலாளர் அரசு எனப் பிரசடனம் செய்கின்றது. இந்த உடன்படிக்கை கைச்சாத்தானதன் பின்னர், சன்டினிஸ்டாக்கள் தொழிலாள வர்க்க வேலைநிறுத்தங்களை நசுக்குகையில் மனகுவாவில் கொண்டாஸ்களை சமாதான பேச்சுவார்த்தைக்கு அழைத்தனர். உண்மையில் கொண்ட்ரா தலைவர்களுடனான உறவுகள் புதுப்பிக்கப்பட்டமை — இவர்களில் பலர் ஒரு காலத்தில் சன்டினிஸ்டா முன்னணியில் இருந்தவர்கள் — தேசிய முதலாளி வர்க்கத்தின் தீவிரவாத குட்டி முதலாளித்துவ ஜனநாயக கன்னையினர் கூட, தொழிலாள வர்க்கத்தின் சுயாதீனமான இயக்கத்தினை எதிர்கொள்ளும் தருணத்தில் முதலாளி வர்க்கத்தின் படுபிற்போக்கான பகுதியினருடன் கூட்டுச்சேர ஆயத்தமாக உள்ளதை அம்பலப் படுத்துகின்றது.

89. அமெரிக்காவில் அனைத்துலகக் குழுவுடன் ஐக்கியம் கொண்ட 'வேர்க்கஸ் லீக்' அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் ஆத்திரமூட்டல்களுக்கு எதிராக நிகரகுவாவை உறுதியுடன் பேணி வந்துள்ளது. உலக ஏகாதிபத்திய மையத்தில் தனது தினசரி பணிகளை நடத்துகின்ற ஒரு கட்சி என்ற முறையில் சகல ஒடுக்கப்படும் தேசியங்களதும், சிறப்பாக யங்கி ஏகாதிபத்தியத்தின் சுமைக்கு நேரடியாக முகம் கொடுக்கும் லத்தீன் அமெரிக்கா, கரிபியன் நாடுகளின் நலன்களைக் காக்கின்ற ஒரு விசேட பொறுப்பு வேர்க்கஸ் லீக்கின் தோளில் வீழ்கின்றது. மேலும் ஒடுக்கப்படும் தேசிய இனங்களுடன் பாட்டாளி வர்க்க ஐக்கியத்துக்குச் செல்லும் இப்போராட்டம் அமெரிக்கத் தொழிலாள வர்க்கத்தின் உள்ளே புரட்சிகர வர்க்க நனவினை அபிவிருத்தி செய்வதில் ஒரு தீர்க்கமான அங்கமாக உள்ளது. இது அமெரிக்காவினால் இழைக்கப்படும் ஒவ்வொரு ஏகாதிபத்திய காட்டுமிராண்டி நடவடிக்கையையும் வெறுத்து ஒதுக்கக் கற்றுக் கொள்ள வேண்டும். இருப்பினும் ஏகாதிபத்திய அடிமைத்தனைக்கு முற்றுப்புள்ளி வைக்கும் ஒடுக்கப்படும் நாடுகளினை நிபந்தனை இன்றி பேணுகையில் வேர்க்கஸ் லீக்கோ அல்லது அனைத்துலகக் குழுவின் எந்தவொரு பகுதியோ அவற்றின் முதலாளித்துவ தலைவர்களின் வேலைத்திட்டத்தினை அங்கீகரிக்கக் கடமைப்பட்டவை அன்று. உண்மையில் எண்ணற்ற கசப்பான அனுபவங்கள் பாட்டாளி வர்க்க சோசலிசப் புரட்சியின் அடிப்படையில் மட்டுமே ஜனநாயகப் புரட்சியின் வெற்றி சாத்தியமாகும் என்பது நிதர்சனமாயுள்ளது.

90. உலக சோசலிசப் புரட்சியின் மூலோபாயத்தினை அடிப்படையாகக் கொண்ட ஒரு கட்சி என்ற முறையில் அனைத்துலகக் குழு தனியொரு வர்க்க நிலைப்பாட்டையே கடைப்பிடிக்கின்றது. தொழிலாள

வர்க்கத்தினை எந்தவொரு பகுதியினருக்கும் கீழ்ப்படுத்துவதனை நியாயப் படுத்தும் 'விதிவிலக்கான நிலைமைகள்' எந்தவொரு நாட்டிலும் இருக் கப் போவதும் இல்லை, இருக்கவும் முடியாது. கம்யூனிஸ்ட் அகிலத்தின் முதல் நான்கு (1919 - 1922) காங்கிரசுகளின் காலப் பகுதியில் பல நாடு களில் முதலாளித்துவ உறவுகள் இன்னமும் அபூர்வமாகவே வளர்ச்சி கண்டிருந்ததோடு அதில் பாட்டாளி வர்க்கம் சனத்தொகையில் கணக் கில் எடுக்க முடியாத தொகையினரை மட்டுமே கொண்டிருந்தது. லெனின் முதிர்ச்சி அடையாத பாட்டாளி வர்க்கத்தினரிடையேயும் அதன் சுயாதீனமான வர்க்க நலன் பற்றிய ஒரு நனவினை விருத்தி செய்ய வேண்டியதன் அவசியத்தினை வலியுறுத்தினார். ஏறத்தாழ 70 ஆண் டுகளின் பின்னர் ஒவ்வொரு கண்டத்திலும் ஏற்பட்டுள்ள முதலாளித் துவ உறவுகளின் பிரமாண்டமான வளர்ச்சிக்கிடையேயும் சகல ஒடுக்கப் படும் நாடுகளிலும் தேசிய முதலாளி வர்க்கத்தின் முற்றுமுழுதான நாற்றமெடுப்பினை ருசுப்படுத்திய பரந்த வரலாற்று அனுபவங்களுக்கு இடையேயும் தொழிலாள வர்க்கத்தின் அரசியல் சுயாதீனத்துக்கான போராட்டத்தில் இருந்து செய்யும் பின்னடிப்புக்கள் அதனை நிராயுத பாணியாக்கவும் தோல்விகளை தயார் செய்யவும் மட்டுமே உதவும்.

91. தொழிலாளர் புரட்சிக் கட்சியின் குத்துக்கரணம் நிரூபித்தது போன்று மத்திய கிழக்கில் தொழிலாள வர்க்க நலன்கள் காட்டிக் கொடுக்கப்பட்டமையானது இரக்கமற்ற முறையில் பித்தானியாவில் முதலாளி வர்க்கத்திடம் அதனை அடிபணிவுக்கு இட்டுச் சென்றது. அத் தோடு உண்மையில் லிபியாவில் கடாபியுடனும், ஈராக்கில் சதாம் ஹூசேனுடனும் ஹீலி கொண்டிருந்த கொள்கையற்ற 'கூட்டுக்கள்'' உலக ஏகாதிபத்தியத்தின் அடிப்படை நலன்களுக்கு சேவகம் செய்தன. ஏகாதிபத்தியம் அந்த அல்லது இந்த ஆட்சியாளர்களுடன் என்ன தான முரண்பாடுகளைக் கொண்டிருப்பினும் பின்தங்கிய நாடுகளில் ஏகாதிபத்தி யத்துக்கு முக்கிய அச்சுறுத்தலாக விளங்கும் புரட்சிகரத் தொழிலாள வர்க்கத்தை எதிர்த்துப் போராட இன்னமும் தேசிய முதலாளி வர்க்கத்தி லேயே தங்கியுள்ளது.

92. அனைத்துலகக் குழுவும் அதன் பகுதிகளும் பூகோளத்தின் ஒவ் வொரு பகுதியிலும், அனைத்துப் போராட்டங்களிலும் அனைத்துலகப் புரட்சிகர வர்க்கமான தொழிலாள வர்க்கத்தின் வரலாற்று நலன்களைப் பிரதிநிதித்துவம் செய்கின்றன. இது அனைத்து நிலைமைகளின் கீழும் ஏகாதிபத்தியத்தின் சகல ஏஜன்சிகளிடம் இருந்து தொழிலாள வர்க்கத் தின் அரசியல் சுயாதீனத்தை நிலைநாட்டப் போராடுகின்றது.

# அனைத்துலகக் குழுவின் பிளவு

93. அனைத்துலகக் குழு 1985 இல் இருந்து பிரித்தானிய ட்ரொட்ஸ்கிச இயக்கத்தின் மாஜி - தலைவர்களான ஒடுகாலிகள் ஹீலி, பண்டா, சுலோற்றருக்கு எதிராக நடத்திய போராட்டத்தின் வரலாற்று முக்கியத்துவம் இங்கு தங்கியுள்ளது. தொழிலாளர் புரட்சிக் கட்சியுடன் ஏற்பட்ட பிளவானது பப்லோவாத சந்தர்ப்பவாதத்துக்கு எதிரான அனைத்துலகக் குழுவின் புதுப்பிக்கப்பட்ட போராட்டத்தினை பிரகடனம் செய்தது. இதன் மூலம் நான்காம் அகிலத்தின் உள்ளே 1951 ஆம் ஆண்டின் மூன்றும் காங்கிரசுடன் ஆரம்பித்து நீண்டு வந்த நெருக்கடியைத் தீர்ப்பதற்கான நிலைமைகளைச் சிருஷ்டித்தது.

94. 1963 ஆம் ஆண்டின் மறு ஐக்கியத்துக்கு எதிராகவும் அனைத்துலகக் குழுவினைப் பேணவும் சோசலிச லேபர் லீக்கு (1973 இல் தொழிலாளர் புரட்சிக் கட்சி எனப் பெயர் மாற்றப்பட்டது.) தலைமை தாங்கிய போராட்டத்துக்கு இடையேயும் எஸ் எல். எல் - தொ. பு. க. (டபிள்யூ. ஆர். பி.) அரசியல் போக்கு 1960 பதுகளின் கடைப்பகுதியில் இருந்து பெரிதும் தேசியவாத, சந்தர்ப்பவாதப் பண்பினை எடுத்தது. பப்லோவாதத்துக்கு எதிரான அனைத்துலகக் குழுவின் போராட்டத்தில் இருந்து பின்வாங்கிய எஸ். எல். எல். - டபிள்யூ. ஆர். பி. அனைத்துலகக் குழுவினை அமைப்பதை, பிரித்தானியாவில் புரட்சிக் கட்சியைக் அமைப்பதற்கு கீழ்ப்பட்டதாக நோக்கியது. தேசியப் பணிகளுக்கே எப்போதும் முன்னுரிமை கொடுக்கப்பட்டது. இது திட்டவட்டமான தேசிய அமுத்தங்களுக்கு ஒரு சந்தர்ப்பவாத அடிபணிவினைப் பிரதிபலித்தது. 1968 மே - ஜூன் சம்பவங்களின் முக்கியத்துவம் அவை பிரித்தானிய தொழிற்பாட்டில் ஏற்படுத்தும் நடைமுறைத் தாக்கங்களின் அடிப்படையில் மதிப்பிடப்பட்டதேயன்றி (அதாவது ஒரு தினசரிப் பத்திரிகையை ஸ்தாபிதம் செய்தல்) தொழிலாளர் இயக்கத்தில் உள்ள சகல போக்குக்களும் வகித்த பாத்திரங்களைப் பூரணமாக ஆய்வு செய்யக் கோரும் அனைத்துலகப் பாட்டாளி வர்க்கத்தின் ஒரு மூலோபாய அனுபவமாக மதிப்பிடப்படவில்லை.

95. இந்தப் பின்னடிப்பு, எஸ். எல், எல். தலைமையின் உள்ளேயான பப்லோவாதப் போக்கின் அபிவிருத்தியுடன் பிணைந்து போய்க் கிடந்தது. 1967 அளவில் பண்டா ஹோசிமிங்கை லெனினின் அரசியல் மறு பிறப்பு எனப் பாராட்டியும், சீனாவில் செங்காவலர் இயக்கத்துக்கு நிபந்தனையற்ற ஆதரவு வழங்கியும், நாசரின் முதலாளித்துவ தேசியவாத ஆட்சிக்கு எகிப்திய தொழிலாள வர்க்கத்தை அடிபணியக் கோரியும் வந்தார். ட்ரொட்ஸ்கிச அடிப்படைக் கொள்கைகள் மீதான இந்தத்

தாக்குதல்களை எதிர்கொள்வதற்குப் பதிலாக ஹீலி"/ம், சுலோற்றரும் வேலைத்திட்டப் பிரச்சினைக்குள்ளாக்கும் விஷயங்கள் புரட்சிகர இயக்கத்தினுள் அற்பமான முக்கியத்துவத்தையே பெறுகின்றன என்ற நிலைப்பாட்டை அபிவிருத்தி செய்தனர். எஸ். எல். எல். – டபிள்யூ. ஆர். பி. தலைவர்களின்படி ட்ரொட்ஸ்கிச வேலைத்திட்ட தினை அபிவிருத்தி செய்வதைக் காட்டிலும் 'பிரச்சாரவாதம்', 'கருத்தியல் சிந்தனைவாத வழிகளுக்கு' எதிராகப் போராடுவதே அதிக முக்கியத்துவம் வ ய்ந்ததாக இருந்தது.

96. 1972 ஐ தொடர்ந்து எஸ். எல். எல். – டபிள்யூ: ஆர். பி. தலைவர்களால் அதிகரித்த கர்ண கடூரத்துடன் முன்வைக்கப்பட்ட இக்கருத்துப்பா ட்டின் முக்கியமான உள்ளடக்கம் நான்காம் அகிலத்தை எதிர்கொண்டுள்ள ஆபத்து அரசியல் தனிமைப்படுத்தலாக இருந்தது என்பதா கும். மேலும் ஹீலி, பண்டா, சுலோற்றர் ஆகியோர் ட்ரொட்ஸ்கிச அடிப்படைக் கொள்கைகளைக் கண்மூடித்தனமாகக் கடைப்பிடிப்பதே இந்த தனிமைப்படுத்தலுக்கான காரணம் என்றனர். இது கோட்பாட்டுக்கும் நடைமுறைக்கும் இடையேயான ஐக்கியத்தினை நிசமாக விளங்கிக் கொள்வதற்கு ஒரு தடைக்கல்லாக இருப்பதாக' இவர்கள் தெரிவித்தனர். இது ''ஒரு பிரச்சார வாழ்க்கையை நியாயப்படுத்தியது''. அது ''ஒரு போதும் ஒரு நிஜப் புரட்சிகர நடைமுறைக்கான வழிகாட்டியாக அழைக்கப்படவில்லை''. அதற்குப் பதில க இது ''மாற்றத்தினை தடை செய்யவும் வர்க்கப் போராட்டத்தின் உயிர்வாழ்வு இயக்கத்தினைப் புரிந்துக் கொள்வதைத் தடை செய்யவும் ஒரு பேரளவிலான உடன்பாட்டு மூடு திரையை இப்பொழுது வழங்குகின்றது'' என்றனர்.

97. நான்காம் அகிலம் முகம் கொடுத்துள்ள பேராபத்து, தனிமைப்படலே என்ற நிலைப்பாடானது, நான்காம் அகிலத்தின் அடிப்படைக் கொள்கைகள் வேலைத்திட்டத்தில் இருந்து விடுபடுதல் அவசியம் என்ற முடிவுக்கு இட்டுச் சென்றது.

1972 ஆம் ஆண்டளவிலேயே சுலோற்றர் சந்தேகத்துடன் ''புரட்சிக் கட்சிகளால் தொழிலாள வர்க்கத்தை ஆட்சி அதிகாரத்துக்கு இட்டுச் செல்ல முடியுமா, நெருக்கடியினால் உருவான அரசியல் அபிவிருத்தியின் அரங்குக்கு ட்ரொட்ஸ்கிச வேலைத்திட்டத்தினை – இன்றுள்ள ட்ரொட்ஸ்கிசச் சக்திகளைக் கொணர்வதன் மூலம் சோசலிசம் நிர்மாணிக்கப்பட்டு விடுமா?'' எனக் கேட்டார். அவரின் பதிலோ ஓர் அழுத்தமான இல்லை என்பதே. 1979 இல் ஒரு முன்நோக்கு பண்டாவினால் எழுதப்பட்டு, பின்னர் அனைத்துலகக் குழுவின் பெயரில் வெளியிடப்பட்

டது. ''வர்க்கப் போராட்டத்தின் அபிவிருத்தியின் மேல் பிரச்சார லேபல்களை ஒட்டாததும், அதன் மூலம் அதன் சாராம்சத்தை நிசமாகக் கறந்து எடுப்பதை ஒழித்துத் தடுக்காததும், அதற்குப் பதிலாக வளர்ச்சி காணும் புரட்சிகர யதார்த்தம் வேண்டி நிற்பது என்ன என்ற ஒரு போராட்ட விழிப்புணர்வினை வளர்க்கும் விதத்தில் காரியாளர்கள் பயிற்றப்பட வேண்டும்''.

98. சகல அரசியல் போக்குக்களையும் இயக்கங்களையும் அவை புறநிலை ரீதியாகப் பிரதிநிதித்துவம் செய்யும் சமூக சக்திகளின் அடிப்படையில் மதிப்பீடு செய்யும் பாரம்பரிய மார்க்சிச விதிமுறையினையே தொழிலாளர் புரட்சிக் கட்சியின் இந்தச் சந்தர்ப்பவாதிகள் ''வர்க்கப் போராட்டத்தின் அபிவிருத்தியின் மேல் பிரச்சார லேபல்களை ஒட்டுதல்'' என இழிவுபடுத்தினர். இந்த வழியில் மட்டுமே தொழிலாள வர்க்கத்தின் சுயாதீனமான மூலோபாய உபாயப் போக்குக்களை நிர்ணயம் செய்ய முடியும். மறு புறத்தில் நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் உள்ளேயான ஹீலிவாத சந்தர்ப்பவாதக் கன்னை, பாட்டாளி வர்க்கத்தினதும் அனைத்துலக மார்க்சிச இயக்கத்தினதும் அத்தியாவசியமான வரலாற்று அனுபவங்களைக் கணக்கில் கொள்ளாமல் ''வளர்ச்சி அடையும் புரட்சிகர யதார்த்தம் வேண்டுவது என்ன?'' என்பதைத் தீர்மானித்துக் கொள்ளக் கூடியதாக இருத்தல் வேண்டும் என்றனர்.

99 1985 - 86 பிளவு வரையிலான தசாப்தத்தில் தொழிலாளர் புரட்சிக் கட்சித் தலைவர்களால் அமுல் செய்யப்பட்ட சகல காட்டிக் கொடுப்புக்களதும் அடிப்படையாக இதுவே விளங்கியது. நிரந்தரப் புரட்சிக் கோட்பாட்டை நிராகரித்தல், மத்திய கிழக்கு, ஆபிரிக்க முதலாளித்துவ தேசியவாத ஆட்சியாளர்களுடனான கூட்டு, பிரித்தானியாவில் தொழிற்சங்க, தொழிற் கட்சி அதிகாரத்துவத்துக்கு அடிபணிவு, அனைத்துலகக் குழுவின் பகுதிகளை நாசமாக்கும் ஒழுங்கு முறையான பிரயத்தனங்கள். ஒரு நீடிக்கப்பட்ட காலப்பகுதியில் தொ. பு. க தலைவர்கள் இன்றைய சகாப்தத்தின் முக்கிய பண்பு ''தோல்வி காணாத தொழிலாள வர்க்கத்தின்'' தோற்றமே எனப் பிரகடனம் செய்வதன் மூலம் உலகப் பாட்டாளி வர்க்கத்தின் மூலோபாய அனுபவங்கள் பற்றிய எந்தவொரு மார்க்சிச மதிப்பீட்டையும் தடைசெய்ய முயன்றனர். இந்த பிசுபிசுத்த வார்த்தையோடு தொ. பு. க சந்தர்ப்பவாதிகள் பாட்டாளி வர்க்கப் புரட்சித் தலைமை நெருக்கடியை உருக்குலைத்ததோடு அதனிடத்தில் வர்க்கப் போராட்டம் பற்றிய முற்றிலும் கருத்தளவிலானதும் சஞ்சலத்துக்குரியதுமான எண்ணக் கருத்துக்களை இருத்தினர். தொழிலாள வர்க்கத்தின் ஒவ்வொரு நிகழ்வும் அவற்றின் பெறுபேறுகளையிட்டு சட்டை செய்யாமல் 'தோல்வி காணாத தொழிலாள வர்க்கத

துக்கு' ஒரு உதாரணம் எனத் தம்பட்டம் அடிக்கப்பட்டது. உண்மையில் இக் 'கோட்பாடு' தொழிலாள வர்க்கத்துக்கு மார்க்சிச முன்னணிப் படை ஆற்ற வேண்டிய சுயாதீனமான பொறுப்புக்களை குறைத்த அதே வேளையில் ஸ்டாலினிஸ்டுகள், சமூக ஜனநாயகவாதிகள், முதலாளித்துவ தேசியவாத, தீவிரவாதிகளின் குற்றங்களை நியாயப்படுத்தவும், மூடி மறைக்கவும் சேவை செய்தது.

100. 1985 – 86 இல் அனைத்துலகக் குழுவுக்கும் தொ. பு. க. சந்தர்ப்பவாதிகளுக்கும் இடையே ஏற்பட்ட பிளவில் இருந்து ஓடுகாலிகளின் சகல கன்னைகளும் ட்ரொட்ஸ்கிசத்தில் இருந்து தம்மைப் பூரணமாகத் துண்டித்துக் கொண்டு விட்டனர். ஹீலி தம்மை மிகைல் கொர்பச்சேவின் ஆதரவாளராகப் பிரகடனம் செய்ததோடு அக்டோபர் புரட்சியின் 70 ஆவது ஆண்டு நிறைவுக் 'கொண்டாட்டங்களில்' கலந்து கொள்ள அதிகாரத்துவத்தினால் மாஸ்கோவுக்கும் அழைக்கப்பட்டார். கிரீசில் சவாஸ் மைக்கேலின் தலைமையிலான அவரது சகாக்கள் கொர்பச்சேவை மகத்தானவராகக் காட்டும் வேலையை உள்நாட்டில் ஸ்டாலினிஸ்டுகளுடன் மக்கள் முன்னணி அரசியலில் நேரடிப் பங்கு கொள்வதுடன் இணைத்துக் கொண்டனர். நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் அரசியல் ஆளுமையை நிராகரிப்பதற்கான ஒரு சாக்குப்போக்கை தொ. பு. க. யால் பிரசுரிக்கப்பட்ட அனைத்துலகக் குழுவுக்கு எதிரான ஒரு பகிரங்கக் கண்டனத்தினை எழுதியதன் பின்னர் பண்டா, தொழிலாளர் புரட்சிக் கட்சியில் இருந்து பிரிந்தார். ட்ரொட்ஸ்கியையும் ட்ரொட்கிசத்தையும் கண்டனம் செய்ததோடு தம்மை ஜோசப் ஸ்டாலினின் ஒரு தீவிர ஆதரவாளனாகவும் பிரகடனம் செய்தார். இன்று சுலோட்டரினால் தலைமை தாங்கப்படும் தொ. பு. க. யின் மிச்சசொச்சங்கள் உடனடியாக சகல பப்லோவாதக் குழுக்களுள்ளும் பழையதும் வர்க்க சக வாழ்வினைக் கடைப்பிடித்தலில் மதிப்பிழந்தவர்களுமான மொரினோவாதிகளுடன் உறவுகளை ஏற்படுத்திக் கொள்ளச் சென்றது.

101. 1985 – 86 இன் பிளவில் இருந்து இடம்பெற்று வரும் சம்பவங்கள், புரட்சிகர இயக்கத்தின் உள்ளே சந்தர்ப்பவாதத்துக்கு எதிரான போராட்டத்துக்கும் வர்க்கப் போராட்டத்தின் வரலாற்று அபிவிருத்திக்கும் இடையேயான ஆழமான உறவை மீண்டும் வெளிக்காட்டியது. பிளவானது அனைத்துலகக் குழுவினுள் பிரதிபலித்த புறநிலை வர்க்க சக்திகளின் போராட்டத்தின் விளைவாகும். 1938 இல் ட்ரொட்ஸ்கியால் ஸ்தாபிக்கப்பட்ட நான்காம் அகிலம் நிகழ்வுகளின் தாக்கங்களின் கீழ் 1953 இல் ஒரு சீரான அரசியல் இயக்கம் என்னும் நிலையில் இருந்து ஒழிந்து போகையில் அனைத்துலகக் குழு, அமெரிக்க சோசலிசத் தொழி

லாளர் கட்சியின் சீரழிவுக்கு (1963) எதிராக சோசலிச லேபர் லீக்கினால் பேணப்பட்டது.

இது 1985 இல் இணக்கம் காண முடியாத வர்க்கப் போக்குக ளிற்கு இடையே முற்றிலும் துருவப்படுத்தப்பட்டது. அனைத்துலகக் குழு வின் கணிசமான பகுதியினர், குட்டி முதலாளித்துவச் சந்தர்ப்பவாதத் துக்கு எதிரான நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் நீண்ட மரபுரிமைகளை அடிப்படையாகக் கொண்டிருந்தமையாலேயே பிரித்தானிய சந்தர்ப்பவாதிகளின் காட்டிக் கொடுப்புக்களை எதிர்க்க முடிந்தது. இக் காரணத்தினால் பிளவு தொ. பு. கட்சியை தண்டித்த அதே வேளையில் அது அனைத்துலகக் குழுவைப் பெருமளவில் பலப்படுத்தியது. அத்தோடு மார்க்சிசக் கோட்பாட்டின் ஒரு நிஜ மறுமலர்ச்சிக்கும் இட்டுச் சென் றுள்ளது.

102. தொழிலாளர் புரட்சிக் கட்சி ஓடுகாலிகளுக்கு எதிரான போரா ட்டத்தினை அனைத்துலகக் குழு கொண்டு நடாத்துகையில் நான்காம் அகி லத்துக்குப் பேராபத்து ''பிரச்சாரவாதம்'' அன்றி சந்தர்ப்பவாதமே என்ற அடிப்படை உண்மையை மீண்டும் ஊர்ஜிதம் செய்துள்ளது. இங்கு முன்னைய பண்பானது வேலைத்திட்டத்தினை வறுமனே மிதமிச்ச மாக காட்சிக்கு வைப்பதாகும், இப்பலவீனம் கல்வி, வெகுஜன இயக் கத்தின் உள்ளேயான அனுபவத்தின் ஊடாகக் களையப்பட முடியும். பின்னையதோ பலம் வாய்ந்த சமூக சக்திகளில் வேரூன்றிய ஒரு திட்ட வட்டமான அரசியல் போக்காகும். இது தொழிலாள வர்க்கத்தின் மீதும் புரட்சிகர முன்னணிப் படையின் மீதும் ஏகாதிபத்திய அழுத்தத் தினைப் பிரதிபலிக்கின்றது. பிரச்சாரவாதத்தினை நோக்கிச் சரிந்து விட்ட தோழர்கள் பால் சலுகை காட்டாத போதிலும் கட்சி பொறுமையைக் கடைப்பிடிக்கின்ற வேளையில் சந்தர்ப்பவாதத்தின் ஒவ்வொரு வெளிபாடு சம்பந்தமாகவும் அது ஈவிரக்கமற்ற பகைமைப் போக்கினைக் கடைப் பிடிக்கின்றது.

103 1985 - 86 பிளவு நான்காம் அகிலத்தின் அபிவிருத்தியில் ஒரு வரலாற்று மைல்கல் என்பதில் எந்தவொரு பிரச்சினைக்கும் இடமில்லை. இது 1953 இல் அனைத்துலகக் குழு நிறுவப்பட்டதில் இருந்து பப்லோவா தச் சந்தர்ப்பவாதத்துக்கு எதிராக ட்றொட்ஸ்கிச இயக்கத்தினால் தொடுக் கப்பட்ட நீண்ட போராட்டத்தின் உச்சக்கட்டமாகும். பப்லோவாத சந்தர்ப்பவாதத்தினால் சிருஷ்டிக்கப்பட்ட நீண்டகால ஐக்கியமின்மையும், தடுமாற்றமும் ஒரு முடிவுக்கு வந்து கொண்டுள்ளது. உலகம் பூராவும் உள்ள சகல நிச ட்றொட்ஸ்கிஸ்டுகளையும் – அதாவது புரட்சிகர மார்க் சிஸ்டுகளை – அனைத்துலகக் குழுவின் பதாகையின் கீழ் கொணர்வதற்கான நிலைமைகள் உருவாகியுள்ளன.

# முதலாளித்துவ நெருக்கடியும் தொழிலாள வர்க்கத்துக்கு எதிரான தாக்குதலும்

104. ஸ்டாலினிசம், சமூக ஜனநாயகம், பப்லோவாத சந்தர்ப்பவாதத்தின் இணைந்த காட்டிக் கொடுப்புக்கள் பிரெட்டன் வூட்சின் சரிவினால் தூண்டி விடப்பட்ட மிக மோசமான நெருக்கடி காலப் பகுதியில் நின்று பிடிப்பதற்கும் ஒரு புதிய உலக முதலாளித்துவ சமபல நிலையை ஸ்தாபிப்பதற்கு அவசியமான அரசியல், பொருளாதாரக் கொள்கைகளைத் தயாரி செய்யவும் அனைத்துலக முதலாளி வர்க்கத்துக்கு நிலைமைகளை உருவாக்கியது பெட்ரோ - டாலர்களின் மறு சுற்றோட்டம் என்ற தீர்க்கமான பொறிமுறையின் மூலம் திரவ நெருக்கடி அச்சுறுத்தலில் இருந்து மீள முடிந்தது. பொருளாதாரப் பின்னடைவுக்கு முடிவு கட்டவும் உலக வர்க்கத்தை விரிவுபடுத்தவும் வங்கி கடன் கொடுப்பனவுகளை பிரமாண்டமாக அதிகரிக்க அங்கீகாரம் அளிக்கப்பட்டது. 1973 - 75 பொருளாதாரப் பின்னடைவில் இருந்து தற்காலிகமாக விடுபட முடிந்த போதிலும் உலக முதலாளித்துவத்தின் மிக முக்கியமான புள்ளி விபரங்கள் பிரெட்டன் - வூட்ஸ் சகாப்தத்தின் செழிப்பு நிலைமைகளுக்கு திரும்பவே இடமில்லை என்பதைச் சுட்டிக் காட்டின. 1970 பதுகளின் கடைப்பகுதியில் பணவீக்க அதிகரிப்பு வீதத்தையும், குறைந்த வளர்ச்சி வீதத்தையும் குறிக்கும் பொருட்டு 'ஸ்டக்பிளேசன்' என்ற பதம் பாவனைக்கு வந்தது.

105. இலாப வீதம் சம்பந்தமான புள்ளி விபரங்கள் மிகவும் முக்கியமானவை. இவை 1970 பதுகள் பூராவும் தொடர்ந்து வீழ்ச்சி கண்டன. 1974 இன் பின்னர் ஐரோப்பா, அமெரிக்கா இரண்டிலும் இலாப வீதம் ஆழமாக வீழ்ச்சி கண்டது. 1976 அளவில் முதலீட்டு மூலதனம் மீதான சராசரி இலாப வீதம் 9.2 வீதமாகும். 1966 இல் 13.4% மாக இருந்தது. அமெரிக்காவில் நிதி அல்லாத கம்பனிகளின் இலாப வீதம் 1963 - 66 இல் 15.5% இல் இருந்து 1967 - 70 இல் 12% மாகவும் 1971-74 இல் 10.1% மாகவும் 1978 இல் 9.7% மாகவும் வீழ்ச்சி கண்டது. 1965 இல் தேசிய வருமானத்தின் 14% மாக விளங்கிய இலாபங்கள் 1970 இல் 8.8% மாக வீழ்ச்சி கண்டது. இப்புள்ளி 1980 இல் 8.2% இல் இருந்து 1982 இல் 6.7% மாக வீழ்ச்சி கண்டது.

106. இலாப வீதத்தின் வீழ்ச்சி, சுருள் பணவீக்கம் டாலர் மீதான அனைத்துலக நம்பிக்கையின் முழுச் சரிவினை எதிர்கொண்ட அமெரிக்க முதலாளி வர்க்கம் 1970 பதுகளின் கடைப்பகுதியில் தொழிலாள வர்க்

கத்தின் வாழ்க்கைத் தரங்களின் மேல் நேரடித் தாக்குதலை நடாத்து வதை விட வேறு மாற்று வழி இல்லை என்ற முடிவுக்கு வந்தது. 1979 இல் கார்ட்டர் நிர்வாகம் போல் வோர்க்கரை சமஷ்டி றிசேர்வ் வங்கியின் தலைவராக நியமனம் செய்தது. உடனடியாக அவர் பயங்கர மான சிக்கன கொள்கைகளை அமுல் செய்யத் தொடங்கினர். வட்டி வீதங்கள் வரலாற்று மட்டங்களுக்கு உயர்த்தப்பட்டன. இரண்டாம் உலக யுத்தத்தின் முடிவின் பின்னர் தொழிலாள வர்க்கத்துக்கு எதிரா கப் படுமோசமான தாக்குதலை நடாத்தும் பொருட்டு பொருளாதாரப் பின்னடைவினைப் பயன்படுத்துவதே இதன் வெளிப்படையான நோக்க மாகியது. பொருளாதாரப் பின்னடைவு ஒரு சில மாதங்களுள் ஐரோப் பாவுக்கும் பரவியது. 1982 இல் வேலையற்றோர் எண்ணிக்கை 1975 ஐக் காட்டிலும் இரண்டு மடங்காகியது.

107. 1980 நவம்பரில் றீகன் தெரிவு செய்யப்பட்டமை அமெரிக்கா வில் தொழிலாளர் இயக்கத்துக்கு எதிரான உக்கிரமான தாக்குதலை சமிக்கை செய்தது. எதிர்ப்புக் காட்டோம் என்ற வாக்குறுதியை ஏ. எப். எல் – சீ. ஐ ஓ. விடம் பெற்ற றீகன் நிர்வாகம், கார்ட்டர் நிர் வாகத்தினல் தயார் செய்யப்பட்ட அவசரகால அதிகார அறிக்கையை அடிப்படையாக கொண்டு 1981 ஆகஸ்டில் 13,000 விமான போக்குவர த்து கட்டுப்பாட்டாளர்களை ஒரேயடியாக வேலைநீக்கம் செய்தது. தொழி லாள வர்க்கத்தின் கடந்த காலத் தேட்டங்களை கட்டிக்காக்க எந்தவித மான பாசாங்கு தன்னும் செய்ய அதிகாரத்துவம் தவறியதால் தொழிற் சங்க இயக்கத்தினை அடியோடு துடைத்துக் கட்டுவது தொடர்ந்தது.

108. தொழிலாள வர்க்க எதிர்ப்பின் ஒவ்வொரு வடிவத்தினையும் முறை முறையாகச் சிதறடிக்கும் பொருட்டு ஏ. எப். எல். – சீ. ஐ. ஓ. தொழிற்சங்க இயக்கத்தைத் துடைத்துக்கட்டத் தலைமை தாங்கிற்று. இது கைத்தொழில் சார்ந்த ஒப்பந்தங்கள் ஒழிக்கப்படுவதை வரவேற் றது. இன்றுள்ள உடன்படிக்கைகள் இரத்துச் செய்யப்படுவதற்கு இண ங்கியது சம்பள வெட்டுக்களுக்கும் எண்ணற்ற 'திருப்பி வழங்கும்' கோரிக்கைகளுக்கும் உடன்பட்டது. ஒரு தொகை பக்டாகள் இழுத்து மூடப்படுவதற்கு ஆர்வத்துடன் ஆதரவளித்தது. தொழிற்சங்கத் தலைவர் கள் நிசமாக இல்லாது போகினும் நடைமுறையில் தம்மை 'கோாப ரேட்' முகாமை அமைப்பினுள் இணைப்பதை ஏற்றுக் கொண்டனர். அதி காரத்துவம் தனது வேலையை முற்று முழுதாகச் செய்ததால் பாரிய கூட்டுத்தாபனங்கள் இடைநிலை முகாமையாளர்களை வேலை நீக்கம் செய்து அவர்களின் முன்னைய மேற்பார்வை வேலைகளை தொழிற்சங்க அதிகாரிக ளிடம் ஒப்படைப்பதைச் சாத்தியமாக்கியது.

பாரிய அமெரிக்க கூட்டுத்தாபனங்களால் சமீபத்தில் வெளியிடப் பட்ட உச்ச இலாபங்கள், தொழிலாளர் அதிகாரத்துவங்கள் சாத்திய

மாக்கிய பெருமளவில் அதிகரித்த சுரண்டல் மட்டத்தினைப் பிரதிபலிக்கின்றது. பல கைத்தொழில்களில் அதிகரித்த விற்பனையன்றி செலவு வெட்டே நஷ்டத்தில் இருந்து இலாபத்துக்கு இடம்பெயர்வதற்கான ஒரு பெரும் காரணியாக உள்ளது. 1980 க்கு முனைரை விட 24% குறைவான விற்பனையில் மோட்டார் கம்பனிகள் தற்போது இலாபம் ஈட்டுகின்றன. 1970 இல் கூலிகளும் சம்பளங்களும் தேசிய வருமானத்தில் 75.4% ஐ உள்ளடக்கி இருந்தன. 1986 இல் இப்புள்ளிகள் 61% ஆக வீழ்ச்சி கண்டன.

109 1979 – இல் அமெரிக்க முதலாளி வர்க்கம் கடைப்பிடித்த கொள்கைகள் அனைத்துலக மட்டத்தில் வர்க்க ஆட்சி விதிமுறையில் ஒரு மாற்றத்தினைச் சமிக்கை செய்தது. 1979 மே மாத தில் தட்ச்சர் தெரிவு செய்யப்பட்டமையானது தொழிலாள வர்க்கத்தினைக் கட்டுப்பாட்டுக்குள் கொணர்வதை இலக்காகக் கொண்ட உக்கிரமான ஒரு எதிர்த்தாக்குதலின் ஆரம்பத்தினையும், இரண்டாம் உலக யுத்தத்தின் பின்னர் உருவாக்கப்பட்ட சமூக சேமநல முறைகளை முடிந்த மட்டும் ஒழித்துக் கட்டுவதையும் ஏககாலத்தில் குறித்து நின்றது. பிரான்சில் 4 ஸ்டாலினிச அமைச்சர்களைக் கொண்ட சோசலிச' மிட்ரண்ட் அரசாங்கம், ஒரு கேவலமான தீவிரவாதப் பகட்டுக்களின் பின்னர், றீகனன் பொருளாதாரக் கொள்கைகளில் இருந்தும் பேதம் காண முடியாத கொள்கைக்குத் திரும்பியது. ஜேர்மனியில் ஹெல்மட் கோலின் தெரிவினைத் தொடர்ந்து இத்தகைய ஓர் அபிவிருத்தி ஏற்பட்டது. ஐரோப்பிய றீகன்வாதங்களைத் தோற்றமான 'சட்டவிதி ஒழுப்பு' ஆனது தேசியமய கைத்தொழில்களை சிதறடிப்பதை இலக்காகக் கொண்ட ஒரு வெறிபிடித்த 'தனியார்மயமாக்க' பிரச்சாரமாக விளங்கியது. 1979 - 1988 க்கும் இடையே போர்த்துக்கல் முதல் கிரீஸ் வரையிலான ஒவ்வொரு ஐரோப்பிய அரசாங்கமும் சமூக சீர்திருத்தம், வர்க்க சமரச கொள்கைகளை நிராகரித்தன. இப்போக்கு அமெரிக்காவுடனும் ஐரோப்பாவுடனும் கட்டுபட்டு நின்றுவிடவில்லை. அவுஸ்திரேலியாவில் ஹோக்கின் கீழும், நியூசிலாந்தில் லாங்கேயின் கீழும் சமூக ஜனநாயக அரசாங்கங்கள் தடையற்ற முதலாளித்துவ சுரண்டல்களுக்கு எதிராகத் தொழிலாள வர்க்கத்தினால் அமைக்கப்பட்ட வரையறுக்கப்பட்ட தடைகளைக் கூடச் சிதறடித்தன. சர்வ தச நாணய நிதியத்தினதும், உலக வங்கியினதும் சாட்டையின் கீழ் பொருளாதார ரீதியில் பின்தங்கிய நாடுகள் கூட – பெரேஸ் கொடேராவின் ஈக்குவடோர், சீகாவின் ஜமேக்கா முதல் ஜயவர்தனாவின் இலங்கை காந்தியின் இந்தியா வரை – றீகன் நிர்வாகத்தின் கொள்கைகளைப் பின்பற்றத் தள்ளப்பட்டன.

# புதிய புரட்சிகர நெருக்கடிக்கான புறநிலை அடிப்படை

110. அனைத்துலக தொழிலாளர் இயக்கத்தின் வெளிப்பாடான நெருக்கடி, முதலாளித்துவ தொழில்சார் பிரச்சாரவாதிகளால் முதலாளித்துவத்தின் ஒரு புதிய பொன் சகாப்தத்தைப் பிரகடனம் செய்யப்பட படுத்தப்பட்டது. ஆனால் வறுமையின் பெரும் வளர்ச்சிக்கு இடையேயும் முதலாளி வர்க்கத்தினால் முழு முதலாளித்துவ முறையினதும் ஆழமான உலக நெருக்கடியில் இருந்து விடுவித்துக் கொள்ள முற்றிலும் முடியாது போய்விட்டது. உண்மையில் இன்று முதலாளி வர்க்கம் உலகளாவிய ரீதியில் முகம் கொடுக்கும் நெருக்கடி, வெறும் இணைந்த நெருக்கடியாக வன்றி ஒரு வரலாற்று, ஒழுங்கு முறையான பண்பைக் கொண்டுள்ளது

111. 1970 பதுகளில் இலாப வீதத்தில் ஏற்பட்ட வீழ்ச்சியும் பொதுவான தேக்க நிலையும் ட்ரான்ஸ்நஷனல் கூட்டுத்தாபனங்களின் வெடிப்புமிக்க பெரு வளர்ச்சிக்கு உந்துதலை வழங்கின. இதன் பெறுபேறுக உலக சந்தை முன்னெரு போதும் இல்லாத விதத்தில் இணைக்கப்பட்டு, உற்பத்தியும் அனைத்துலக மயமாக்கப்பட்டது. அனைத்துத் தேசியப் பொருளாதாரங்களும் - அமெரிக்கா உட்பட - உலகப் பொருளாதாரத்தின் முழுமையானதும் தீவிரமானதுமான மேலாதிக்கத்துக்கு ஆட்பட்டமை நவீன வாழ்வின் ஒரு அடிப்படை உண்மையாகும். இணைந்த சுற்று வழிகளின் கண்டு பிடிப்புடனும், பூரணத்துவத்துடனும் கூடிய விதத்தில் தொழில்நுட்பத்தில் ஏற்பட்ட முன்னேற்றங்கள் (தொடர்பு) போக்குவரத்து சாதனங்களின் புரட்சிகர மாற்றங்களை ஏற்படுத்தி உள்ளன அதற்குப் பதிலாக அவை, உலகளாவிய பொருளாதார இணைப்புத் தொடர்களை துரிதப்படுத்தி உள்ளன. ஆனால் இந்த பொருளாதார தொழில்நுட்ப அபிவிருத்திகள் முதலாளித்துவத்துக்கு புதிய வரலாற்றுச் சாலைகளைத் திறப்பதற்கு மாறாக உலகப் பொருளாதாரத்துக்கும் முதலாளித்துவ தேசிய அரச முறைக்கு இடையேயும், சமூக உற்பத்திக்கும் தனிச் சொத்துடமைக்கு இடையேயும் அடிப்படையான முரண்பாடுகளை வரலாற்றில் முன்னெரு போதும் இல்லாத விதத்தில் உக்கிரம் ஆக்கியுள்ளன.

112 பிரமாண்டமான 'ட்ரான்ஸ்நஷனல்' கூட்டுத்தாபனங்களின் தோற்றமும் உற்பத்தியின் உலக மயமாக்கமும் தவிர்க்க முடியாத புரட்சிகர தாக்கங்களைக் கொண்ட மற்றுமோர் காரணியுடன் விடுபட முடியாத விதத்தில் இணைந்து கொண்டுள்ளது: அமெரிக்கா தனது உலகப் பொருளாதார மேலாதிக்கத்தினை சார்பு ரீதியாகவும், முழுமையாகவும்

இழந்தமை. அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் உலக அந்தஸ்தில் ஏற்பட்ட இந்த வரலாற்று மாற்றம், அமெரிக்காவை உலகின் முக்கிய கடன் கொடுப்பவர் என்ற நிலையில் இருந்து மாபெரும் கடனாளி என்ற மாற்றத்தின் மூலம் வெளிப்படாகியது. இது தொழிலாளர்களின் வாழ்க்கைத் தரங்களில் ஏற்பட்ட பெரும் வீழ்ச்சிக்கான அடிப்படை காரணமாக விளங்குவதோடு அமெரிக்காவினை புரட்சிகர வர்க்க மோதுதல் காலப்பகுதிக்கும் இட்டுச் செல்லும்.

113. மூன்றாவது காரணி, அமெரிக்காவின் மேலாதிக்கத்தின் கீழ் உலக முதலாளித்துவத்தின் யுத்தத்தின் பின்னைய முழுப் பொருளாதார புவியரசியல் கட்டுமான மறுநிர்மாணத்தின் தலைதூக்க முடியாத தகர்வு, ஜப்பான் பலம் வாய்ந்த கைத்தொழில் சக்தியாகவும், பெரும் மூலதன ஏற்றுமதியாள ராகவும் எழுச்சிக் கண்டதைக் காட்டியது. இது அமெரிக்க முதலாளித்துவத்தைப் பூகோளத்தின் ஒவ்வொரு மூலையிலும் சவால் செய்கின்றது. அமெரிக்காவுக்கும் ஜப்பானுக்கும் இடையேயான மோதுதல் பெரிதும் வெடிக்கும் தன்மை கொண்டதாய் இருந்த போதிலும் அது ஏகாதிபத்தியவாதிகளுக்கு இடையே மோசமடைந்து வரும் குரோதத்தின் ஒரே வெளிப்பாடு மட்டும் ஆகிவிடாது. ஐரோப்பிய முதலாளி வர்க்கம் பொருளாதார சமூகத்தை (ஈ. சீ) ஜப்பானிய அமெரிக்க மூலதனம் இரண்டையும் சவால் செய்யவல்ல ஒரு வர்த்தக நிதிக் கூட்டாக பரிணமம் செய்ய முயன்று வருகையில் யுத்தத்தின் பின்னைய பழைய 'அத்திலாந்தி கூட்டு' அடியோடு தகர்ந்து வருகின்றது. 1992 அளவில் தனியொரு ஐரோப்பியச் சந்தையை நிறுவும் திட்டங்களின் முக்கியத்துவம் இதுவே.

114 மாபெரும் புரட்சிகர முக்கியத்துவத்தின் நான்காவது காரணி ஆசிய பசுபிக் கரையோர பொருளாதாரங்களின் அசாதாரண துரித வளர்ச்சியாகும். அது நின்று பிடிக்க முடியாத ஏற்றுமதிச் சந்தைகளில் முற்றிலும் தங்கியுள்ள அவற்றின் பொருளாதார அந்தஸ்தானது தேசிய முதலாளி வர்க்கத்துக்கு எதிரான போராட்டத்துக்கு தள்ளப்பட்டு வரும் பரந்த தொழிலாள வர்க்கங்களைத் தோற்றுவித்துள்ளது. தென் கொரிய தொழிலாள வர்க்க இயக்கம் இளையதாயினும் பலம்வாய்ந்த கைத்தொழில் பாட்டாளி வர்க்கப் படையணியானது ஆசியா பூராவும் உலகப் புரட்சி அரங்கினுள் நுழைவதைக் குறிக்கின்றது. மேலும் ஏகாதிபத்தியத்தின் மூலதன ஏற்றுமதி, தொழிலாள வர்க்கத்தின் புதிய துய சக்தி வாய்ந்ததுமான படையணிகள் எழுச்சி கண்டிருப்பது ஆசியாவில் மட்டுமல்ல. இதே போக்கு ஆபிரிக்காவிலும் லத்தின் அமெரிக்காவிலும் (சிறப்பாக மெக்சிக்கோ) நன்கு முன்னேறியுள்ளன.

115. நம் கவனத்தை ஈர்க்கும் ஐந்தாவது காரணி பின்தங்கிய நாடுகளின் திகிலூட்டும் வறுமையும், மலட்டுத் தேசிய முதலாளி வர்க்கங்களின் எண்ணற்ற 'அபிவிருத்தி' மூலோபாயங்களின் முழுத் தகர்வும் ஆகும். லத்தின் அமெரிக்க நாடுகள், ஆபிரிக்கா, இந்திய உபகண்டம் என்பன தமது கைத்தொழில், பொது பொருளாதார அபிவிருத்தியைப் பொறுத்த மட்டில் எந்த விதத்திலும் இனங்காண கூடியனவாக இல்லாத போதிலும் எல்லாமே மூக படுடா குவளேகளே. ஏகாதிபத்தியத்தினல் உருவாக்கப்பட்ட துன்பங்கள், சீரழிவுகளில் இருந்தும் அதன் தேசிய முதலாளி வர்க்க கையாட்களின் கொள்கைகளில் இருந்தும் தப்புவதற்கு சோசலிசப் புரட்சியைத் தவிர வேறு வழியில்லை.

116. இறுதியாக ஆறாவது காரணியைப் பற்றி நாம் ஏற்கனவே குறிப்பிட்டுள்ளது புரட்சிகர உடன் விளைவுகளாகும். இது சகல ஆளும் ஸ்டாலினிச அதிகாரத்துவங்களும் சோவியத் யூனியனிலும், கிழக்கு ஐரோப்பாவிலும், சீனுவிலும் சந்தைப் பொருளாதாரக் கொள்கைகளுக்கு திரும்புவதில் இருந்து ஊற்றெடுத்தாக வேண்டும். சீனுவில் கடந்த 35 ஆண்டுகளுக்கு மேலாகக் கண்டிராத வகையில் வறுமை வடிவங்கள் புத்துயிர் பெற்று வருகின்றன. ஸ்டாலினிச அதிகாரத்துவம் நகரத்திலும் நாட்டு புறங்களிலும் முதலாளித்துவ உறவுகளை ஊக்குவிப்பதன் பெறு பேறுகவே இது ஏற்பட்டுள்ளது. தமது தாக்கத்தினை பணவீக்கமும், வேலையில்லாத் திண்டாட்டமும் ஏற்கனவே உணர வைத்துள்ளன போலந்தில் சமீபத்திய வேலைநிறுத்தங்கள் வெளிக்காட்டியது போன்று ஸ்டாலினிச ஆட்சிக்குட்பட்ட நாடுகளில் உள்ள தொழிலாளர்கள் முதலாளித்துவம் மீண்டும் அறிமுகம் செய்யப்படுவதை அமைதியாக ஏற்றுக் கொள்ளமாட்டார்கள்.

# அமெரிக்கா, ஜப்பான், ஐரோப்பாவும் ஏகாதிபத்தியங்களுக்கு இடையேயான குரோதத்தின் வளர்ச்சியும்

117. முதலாளித்துவம் ஒரு இரண்டாவது பொன் சகாப்தத்தினுள் நுழைந்து கொண்டுள்ளதாக தம்மை தாஜா பண்ணிக் கொண்டுள்ள மன மொடிந்த குட்டி முதலாளித்துவ தீவிரவ திகளுக்கு முரணுக முதலாளித்துவத்தின் நன்கு தூரதிருட்டி மிக்க பிரதிநிதிகள் அமெரிக்க மேலாதிக்கத்தின் தகர்வு உலகளாவிய பொருளாதாரம் என அழைக்கப்படும் ட்ரான்ஸ்நஷனல் உற்பத்தியின் பெருக்கம், வர்த்தகப் போட்டிகளின் உக்கிரம், தொழில்நுட்ப முன்னேற்றங்களின் தாக்கங்கள் ஆகியன தீர்வு காண முடியாத பெரும் பிரச்சினைகளைத் தோற்றுவித்துள்ளன என்பதை

அறிவர். அத்தகைய பிரதிநிதிகளில் ஒருவரான மாஜி அமெரிக்க திறை சேரி செயலாளர் டபிள்யூ. மைக்கேல் புளுமென்தல் சமீபத்தில் எழுதிய தாவது; 'மிக பிரமாண்டமான அளவிலான ஒரு நிச உலக மூலதனச் சந்தையும் மற்றும் பல இடைநிலை தொடர்புகளும் ஒத்த வெளிச்சத்தை வேகத்தில் எல்லைகளை சட்டை செய்யாமல் உலகின் கம்பியூட்டர்கள், தொலைத்தொடர்பு திட்டங்களின் ஊடாக புதிய பண அணிகலன்களும், பணத்தைபொத்த கருவிகளும் உள்நாட்டு கொள்கை, நாணய மாற்று வீதங்கள் தொடர்பாக வெறும் தேசிய ரீதியிலான நடவடிக்கைகளை காலவதியானதாக்கி விட்டன.

தேசிய பண விநியோகம் என்ன என்ற கேள்விக்கு பதிலளிப்பது இனியும் சுலபமான காரியமல்ல. தேசிய ரீதியில் பண விநியோகத்தைக் கட்டுப்படுத்துவது எப்படி என்பதைத் தீர்மானிப்பதும் அதைப்போன்றே கடினமானதே. விளையாட்டின் விதிகள் அடிப்படையில் மாற்றம் அடைந்து விட்டன. பொதுவில் சொன்னால் பொருளாதார விவகாரங்களின் பல துறைகளில் – குறைந்தபட்சம் உலகின் பெரிய நாடுகளில் சிலவற்றிலும் இறுதியில் அனைத்திலும் – தொழில்நுட்பம் தேசிய இறைமை பற்றிய அடிப்படைக் கருத்தினை துரிதமாக காலவதியானதாக்கிக் கொண்டுள்ளது. தொழில்நுட்பம், தனிப்பட்ட பொருளாதார வஸ்துகளால் சக்தி வாய்ந்த விதத்தில் தொடுக்கப்பட முடியாத ஒரு உலகினை சிருஷ்டித்துள்ளது என்ற முடிவுக்கு வருவது தவிர்க்க முடியாது நாம் எதுவும் மாற்றமடைந்து விடவில்லை என்ற விதத்தில் தொடர்ந்து செயற்பட்டு வருவோமேயாயின், கட்டாயமாக தேசிய கொள்கைகளை பிரயோகிப்பதில் நாம் காட்டும் விடாப்பிடியானது விரக்தியை ஏற்படுத்துவதோடு பெரும்பாலும் எதிர்விளைவுகளைக் கொண்டதாகவும் இருக்கும்' (பொறின் அபயர்ஸ் – இதழ் – 66 – இல. – 3 – பக்கம் 585 – 95)

118. தொழில்நுட்ப முன்னேற்றங்கள் – அவையே நெருக்கடிக்கான காரணி அன்று. வேறு வழியின்றி புளுமென்தல் அதை அங்கீகரிக்கின்றார். மாறாக, 70 ஆண்டுகளுக்கு முன்னர் ட்ரொட்ஸ்கியால் முன்வைக்கப்பட்ட வரலாற்று ஆய்வுகளின் செல்லுபடியான தன்மையை அவரின் விளக்கம் ருசுப்படுத்துகின்றது. 'முதலாளித்துவ விருத்தி செய்த உற்பத்திச் சக்திகள் தேச, அரச எல்லைகளை கடந்து வளர்ச்சி கண்டுள்ளன. இன்றைய அரசியல் உருவமான தேசிய அரசு இந்த உற்பத்திச் சக்திகளைச் சுரண்ட மிகவும் குறுகியது ஆதலால் எமது பொருளாதார அமைப்பின் இயற்கைப் போக்கு, இந்த அரச எல்லைகளைக் கடந்து செல்ல முயல்வதாக உள்ளது. முழுப் பூகோளமும், நிலம், கடல் வெளிப்பரப்பு அத்தோடு உட்புறமும் ஒரு பொருளாதார வேலைக்களமாகிவிட்டன. இவற்றின் வெவ்வேறான பகுதிகளும் தவிர்க்க முடியாத

விதத்தில் ஒவ்வொன்றுடனும் பிணைக்கப்பட்டுள்ளன. ஆனால் இதனைப் பூரணத்துவம் செய்கையில் முதலாளித்துவ அரசுகள் ஒவ்வொரு நாட்டினதும் முதலாளி வர்க்கத்தின் இலாப நலன்களின் பேரில் உலகம் தழுவிய பொருளாதார முறையை அடிமைப்படுத்தத் தள்ளப்பட்டுள்ளன. 1789 - 1815, 1848 - 1859, 861 - 1866, 1870 புரட்சிகள், யுத்தங்கள் மூலம் சிருஷ்டிக்கப்பட்ட பழைய தேசிய அரசு நீடித்து நிலைத்து வாழ்கின்றது என்பதை ஏகாதிபத்திய அரசுகள் வெறெதனையும் விட நன்கு வெளிப்படுத்தியுள்ளது. இன்று இது பொருளாதார வளர்ச்சிக்கு ஒரு சகிக்க முடியாத இடைஞ்சலாகி உள்ளது'.

('யுத்தமும் அனைத்துலகமும்')

119. உலகப் பொருளாதாரத்தின் அமைதியான அபிவிருத்தியை முதலாளித்துவத்தின் கீழும், அதன் தேசிய அரச முறையின் கீழும் காண்பது முடியாத காரியம் முதலாளித்துவ 'கார்டல்கள்' ஏகாதிபத்தியங்களுக்கு இடையேயான மோதுதல்கள் உலகை கூட்டாக சுரண்டுவதன் மூலம் நிரந்தரமாக ழ்ப்படுத்திக் கொண்டு விட்டன எனக் காட்டும் 'அதிதீவிர ஏகாதிபத்திய' கருத்துப்பாடு படுமோசமான திரிபுவாதி கார்ள் கவுட்ஸ்கியில் பல தசாப்தங்களுக்கு முன்னர் முன்வைக்கப்பட்ட சமயத்தில் எங்ஙனம் ஒரு பிற்போக்குக் கோமாளித்தனமாக விளங்கியதோ அப்படியே இன்னும் இருந்து வருகின்றது.

ஏகாதிபத்தியங்களுக்கு இடையேயான குரோதங்களை ஏகாதிபத்திய சக்திகளுக்கும் சோவியத் அணிக்கும் இடையேயான மோதுதல் முற்றிலும் முந்திக் கொண்டுள்ளது என்ற கருத்து முதலில் பப்லோவால் முன்வைக்கப்பட்டது. பின்னர் பண்டாவினாலும் சுலோற்றரினாலும் உயர்த்திப் பிடிக்கப்பட்டது. இது பிரெட்டன்வூட்ஸ் அமைப்பின் கட்டுமானத்தினுள் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் தற்காலிக மேலாதிக்கத்துக்கு குட்டி முதலாளித்துவ அடிபணிவன்றி வேறொன்றுமல்ல.

120. ஏகாதிபத்தியம் உலக பொருளாதாரத்துக்கும் தேசிய அரசு முறைக்கும் இடையிலான முரண்பாடுகளை வெற்றிகரமாகத் தீர்த்துக் கொண்டு விட்டதை தொக்கி நின்ற ஏடுகோள், இரண்டாம் உலக யுத்தத்தின் முடிவில் இருந்து ஏகாதிபத்தியங்களுக்கு இடையேயான மிகவும் உக்கிரமான குரோதங்களின் மறுக்க முடியாத அபிவிருத்தியினால் சிதறுண்டு போயிற்று.

121. உலக சந்தையில் அமெரிக்கா மேலாதிக்கம் இழந்ததைக் காட்டும் வகையில் எண்ணற்ற புள்ளி விபரங்களை காட்ட முடியும். 1950 - 976 வரை அமெரிக்க நிலுவை 600 கோடி டாலர் உபரிக்கும் 1900

தத்தின் முடிவில் இருந்து ஏகாதிபத்தியங்களுக்கு இடையேயான மிகவும் உக்கிரமான குரோதங்களின் மறுக்க முடியாத அபிவிருத்தியினால் சிதறுண்டு போயிற்று.

121. உலக சந்தையில் அமெரிக்கா மேலாதிக்கம் இழந்ததைக் காட்டும் வகையில் எண்ணற்ற புள்ளி விபரங்களை காட்ட முடியும். 1950 – 1976 வரை அமெரிக்க நிலுவை 600 கோடி டாலர் உபரிக்கும் 1900 கோடி டாலர் பற்றுக்குறைக்கும் இடையே தளம்பிக் கொண்டிருந்தது; 1977 – 981 க்கும் இடையே 2500 கோடி டாலருக்கும் 3400 கோடி டாலருக்கும் இடைப்பட்ட உறுதியான வர்த்தக பற்றுக்குறை காணப்பட்டது. 1982 இல் வர்த்தகப் பற்றுக்குறை 3600 கோடி டாலராக இருந்தது. 1985 இல் 12500 கோடி டாலரை எட்டியது 1970 பதுகள் வரை அமெரிக்க மூலப்பொருட்களையும் எண்ணெயையும் இறக்குமதி செய்தது உற்பத்தி, மூலதனப் பொருட்களை ஏற்றுமதி செய்தது. இன்று நிலைமை தலைகீழாகியுள்ளது. 19‹5 இல் அமெரிக்காவின் 5 முக்கிய ஏற்றுமதிகள் – ஜப்பானுக்கு – தானியங்கள், சோயா பீன்ஸ், நிலக்கரி, கோதுமை பருத்தி என்பனவாகும். அதே சமயம் இது ஜப்பானிலிருந்து மோட்டார் வாகனங்கள் அலுவலக இயந்திரங்கள் நுகர்வு எலெக்ரொனிக் உற்பத்திகள் செமிகொன்டக்டரிஸ் என்பவற்றை இறக்குமதி செய்தது 1965 இல் 65% மாக இருந்த அமெரிக்க வாகன உற்பத்தி பங்கு 1980 இல் ‹0% ஆக வீழ்ச்சி கண்டது. 19‹0 – 84 க்கும் இடையே அமெரிக்கா தனது ஏற்றுமதி சந்தைப் பங்கில் 23% த்தை இழந்தது. உருக்குக் கைத்தொழிலின் நிலை, ஒரு காலத்தில் சவால் செய்ய முடியாத முன்னணிக் கைத்தொழில் சக்தியாக மிளிர்ந்த அமெரிக்கா இன்று அதை இழந்து விட்டத்தை நன்கு காட்டுகின்றது. 1955 இல் அமெரிக்கா உலக உருக்கில் 39.3% ஐ உற்பத்தி செய்தது. 1975 இல் இது 2‹ 4% க்கு வீழ்ச்சி கண்டது. 1984 இல் இது 8 4 விகிதமாகியது. 197‹ - 1987 க்கும் இடையே உருக்கு உற்பத்தி 44 விகிதத்தால் வீழ்ச்சி கண்டது. 19‹0 பதுகளில் ஒருங்கிணைக்கப்பட்ட அமெரிக்க உருக்கு கம்பனிகள் அமெரிக்க சந்தையின் 95 விகிதத்துக்கும் மேலானதை வழங்கின. இன்று அவற்றின் பங்கு 60 விகிதத்துக்கும் குறைவு.

122, ஜப்பான் ஒரு கைத்தொழில், நிதிச் சக்தியாக வளர்ச்சி கண்டதைக் காட்ட இதற்கு குறைவுபடாத பரந்தளவிலான புள்ளி விபரங்கள் உள்ளது. அமெரிக்காவின் வீழ்ச்சியைக் காட்டும் புள்ளி விபரங்களுடன் ஒப்பிடுகையில் அவை ஆச்சரியமூட்டுபவையாக உள்ளன கடந்த கால் நூற்றாண்டின் போது அமெரிக்காவுக்கும் ஜப்பானுக்கும் இடையேயான வர்த்தகத்தில் ஒரு தெளிவான அதிகரிப்பு ஏற்பட்டது ஆனால் ஜப்பானிய இறக்குமதிகள் அமெரிக்க ஏற்றுமதிகளை காட்டிலும் பெருமளவில் அதிகரித்து காணப்பட்டன. 1960 இல் அமெரிக்கா ஜப்பானுக்கு

2400 கோடி டாலர்களுக்கு பொருட்களை விற்பனை செய்து 22.0 கோடிக ளுக்கு பொருட்களை கொள்வனவு செய்தது. 1985 இல் அமெரிக்கா 2260 கோடி டாலர் பொருட்களை ஏற்றுமதி செய்து 6 80 கோடி டாலர் பெறுமதியான பொருட்களை இறக்குமதி செய்தது. பணவீக்கத்துக்கான ஒழுங்குகளை செய்கையில் இது ஏற்றுமதியில் 5 மடங்கு அதிகரிப்பையும் பிரதிநிதித்துவம் செய்கிறது. 1960 இல் ஜப்பானின் தலா வருமானம் அமெரிக்க மட்டத்தில் சுமார் 30 விகிதத்தில் நின்று கொண்டிருந்தது. 1980 இது சுமார் 70 விகிதத்துக்கு வளர்ச்சி கண்டது. 1960 – 80 க்கும் இடையே உலக மொத்த தேசிய உற்பத்தியில் (ஜீ. என். பி.) ஜப்பானின் மொத்தப் பங்கு 300 வீதத்துக்கும் மேலாக அதிகரித்தது.

123. உலக நிதித்துறையில் ஜப்பானின் பாத்திரம் கடந்த 20 வருடங்களாக எந்த விதத்திலும் குறைவுபடாத பெரும் வளர்ச்சி கண்டுள்ளது. அமெரிக்காவின் தேறிய வெளிநாட்டுக் கடனான 26,400 கோடி டாலர்களுடன் ஒப்பிடுகையில் ஜப்பானின் தேறிய வெளிநாட்டுச் சொத்து 30,000 கோடி டாலர்களை எட்டியுள்ளது. உலகிலுள்ள எட்டு பெரும் வங்கிகளில் ஏழு வங்கி ஜப்பானுடையது. உலகின் முன்னணி 200 வங்கிகளில் 25 வங்கிகள் ஜப்பானுடையது. முன்னணி 500 வங்கிகளில் 98 வங்கிகள் ஜப்பானியருடையது. அனைத்து அனைத்துலக வங்கிக் கடன்களில் 25 விகிதத்தை அவை வழங்கியுள்ளன. ஒப்பிடுமிடத்து அமெரிக்க வங்கிகள் அனைத்து அனைத்துலக வங்கி கடன்களில் சுமார் 28 விகிதத்தையே கொண்டுள்ளது. லண்டன் நகரில் இயங்கும் 25 பெரும் வங்கிகளில் 22 வங்கிகள் ஜப்பானியருடையது. 1 86 இல் டோக்கியோ பங்குமுதல் சந்தை உலகின் பெரும் சந்தையாகியது இது உலக பங்குப் பெறுமானத்தில் முக்கால் பங்கை இது கொண்டிருந்தது. நியூயோர்க் பங்குமுதல் சந்தையின் அளவு சேர்க்கப்படாவிடின் உலகின் இணைந்த ஏனைய சகல பங்குமுதல் சந்தைகளை விட பெரியது டோக்கியோவே. நொமுரா செகுயூரிட்ஸ் கம்பனியின் சந்தை மூலதனம் 5400 கோடி டாலர்களாகும். இது தனது பெரும் அமெரிக்கப் போட்டியாளரான மெரில் லின்ஞ் அன்ட் கம்பனியை விட 20 மடங்கு அதிகமானது. இவை 1987 அக்டோபர் வோல் ஸ்ரீட் சரிவுக்கு முன்னைய புள்ளி விபரங்களையே பிரதிபலிக்கின்றது. அதிலிருந்து டோக்கியோ பங்கு விலைகள் முற்றிலும் மீண்டுவிட்டன. ஆனால் வோல் ஸ்ரீட் கடந்த ஆண்டு மட்டத்துக்கு பெரிதும் கீழேயே நின்று கொண்டுள்ளது. வோல் ஸ்ரீட் நெருக்கடி சம்பந்தமாக ஒரு முக்கிய முதலாளித்துவ சஞ்சிகையான 'பொரின் பாலிசி' யில் ஓர் ஆய்வு வெளியாகியது. அது ஆளும் வர்க்கத்தின் முக்கிய பகுதியினரின் சிந்தனையைப் பிரதிபலிக்கின்றது. ஒரு பொருளியலாளர் தெளிவாக குறிப்பிடுகையில் '1987 சரிவு பொருளாதார, நிதிப் பலத்தை அமெரிக்காவிடமிருந்து ஜப்பானுக்கு மாற்றுவதில்

ஒரு முக்கியமான படியை குறித்துள்ளது' என்றார்.
(1988 ஸ்பிரில், இல. 70 - பக்கம் - 72)

124 ஜப்பானிய – அமெரிக்க முதலாளித்துவத்தின் உலகளாவிய போட்டி முன்னெருபோதும் இல்லாத விதத்தில் பெரும் உக்கிரம் கண்டு வருகின்றது. ஏற்றுமதி சந்தைகளையும், மூலப் பொருட்களையும் 'மலிவு' ஊழிய மூலகங்களையும் கட்டுப்பாட்டுக்குள் கொணரும் பொருட்டு உலகம் பூராவும் அமெரிக்காவின் உள்ளும் ஆளும் வர்க்கங்கள் மூர்க்கமாகப் போராடி வருகின்றன. டாலரின் ஆழமான வீழ்ச்சியைத் தொடர்ந்து ஜப்பானியர்கள் அமெரிக்காவினுள் தமது நிதி, கைத்தொழில் அந்தஸ்துகளை துரிதமாக அதிகரித்துக் கொண்டுள்ளனர், கலிபோர்னியாவின் 22 பாரிய வங்கிகளில் 5 வங்கிகள் ஜப்பானியர்களினால் கட்டுப்படுத்தப்பட்டுகின்றன. அந்த மாநிலத்தில் மட்டும் அவர்களின் வங்கிச் சொத்து 2500 கோடி டாலர்கள் என நம்பப்படுகின்றது. அமெரிக்க காங்கிரசில் ஜப்பானிய இறக்குமதிகளுக்கு எதிரான பாதுகாப்புவாத சட்ட இயக்கத்திற்கு பதிலாக ஜப்பானிய கைத்தொழிலாளர்களும், நிதியியலாளர்களும் வெளிநாட்டு உற்பத்தி வசதிகள் திட்டத்தை விரிவுடுத்தியுள்ளனர். பாதுகாப்புவாத நடவடிக்கைகளை தாண்டி அமெரிக்காவினுள் பொருட்களை ஏற்றுமதி செய்வதற்கு அவர்கள் தென்கொரியா, தாய்வான், ஸ்பெயின், மெக்ஷிக்கோவை வெளிநாட்டுத் தளங்களாக நம்பிக்கொண்டுள்ளனர்.

125. ஜப்பானின் பிரமாண்டமான பொருளாதார பலத்துக்கும் அதன் இன்றைய பலவீனமான இராணுவ நிலைக்கும் எதிரிடையாக அமெரிக்காவின் உலக பொருளாதார அந்தஸ்தின் வீழ்ச்சிக்கும் இன்னமும் மேலாதிக்கமிக்க இராணுவ மேன்மைக்கும் இடையேயான பாரிய அசமத்துவமும் இவ்விரு ஏகாதிபத்திய போட்டியாளர்களுக்கும் இடையேயான பகைமையை சாந்தப்படுத்துவதற்கு மாறாக உக்கிரமாக்க உதவுகின்றது. ஜப்பானிய முதலாளி வர்க்கம் தனது அரசியல், பொருளாதார அபிலாசைகள் அமெரிக்க நலன்களால் இடைவிடாது விரக்திக்குள்ளாக்கப்படுகின்றது என உணராமல் இருக்க முடியாது. இவை இறுதி ஆய்வுகளில் பின்னையவரின் இராணுவ பலத்தினால் ஆதரிக்கப்படுகின்றது. பாரசீக வளைகுடாவில் அமெரிக்க அதிரடிப் படைகளை இறக்கியமை ஈரானை மிரட்டுவதற்கு மட்டுமன்றி மத்திய கிழக்கில் ஜப்பானின் எண்ணெய் வழிகள் எக்கணமும் அமெரிக்காவினால் வெட்டப்படும் என்பதை ஜப்பானுக்கு நினைவூட்டவுமேயாகும். இந்நடவடிக்கையானது ஜப்பானிய முதலாளி வர்க்கத்துக்கு தனது நாட்டின் மூலப்பொருள் பற்றாக்குறையையும் அது வழங்கியுள்ள இன்றைய அபிவிருத்தி மட்டத்தையும் நினைவூட்டத் தவறாது. இது 1942 இல் இருந்ததைக் காட்டிலும்

பேராபத்தானது. நீண்ட காலத்தில் இத்தகைய ஒரு நிலைமையை ஜப்பானிய முதலாளி வர்க்கத்தால் சகித்துக் கொள்ள முடியாது.

126, என்ன வடிவில் இவை அபிவிருத்தி கண்டாலும் ஜப்பானுக்கும் அமெரிக்காவுக்கும் இடையே தவிர்க்க முடியாத விதத்தில் உக்கிரம் காணும் மோதுதல் உலக ஏகாதிபத்திய விவகாரங்களில் ஸ்திரப்பாட்டைக் குலைக்கும் காரணியாக விளங்குகின்றது. இரண்டாம் உலக யுத்தத்தைத் தொடர்ந்து வந்த இரண்டு தசாப்த காலங்களில் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் மேலாதிக்கமும் ஏகாதிபத்தியங்களுக்கு இடையேயான குரோதத்தின் மேலெழுந்தவாரியான சாந்தமும் உலக வர்த்தகத்தின் பரந்த அளவிலான பரம்பலுக்கான அரசியல் முன் தேவையாக விளங்கின. யுத்தத்தின் பின்னைய சகாப்தத்தின் முன்னொரு போதும் இல்லாத அளவிலான செழிப்பு இதனையே அடிப்படையாகக் கொண்டிருந்தது. இரண்டாம் உலக யுத்தத்தை உருவாக்கிய அதே பொருளாதார புவியியல் தப்பு வழிகள் ஊடாக ஏகாதிபத்தியங்களுக்கு இடையிலான உறவுகளின் வெடிப்பும், மேலாதிக்கத்தின் வீழ்ச்சியும் ஒரு வெடிப்பு மிக்க அசமத்துவமான ஒரு புதிய காலப்பகுதியை குறிகாட்டுகின்றது. இவை ஒரு அமைதியானதும், முற்போக்கானதுமான அடிப்படையில் உலக சந்தையை ஐக்கியப்படுத்த முடியாத முதலாளி வர்க்கத்தின் இயலாமையை நன்கு புலப்படுத்தியுள்ளன. உண்மையில் மேலே மேற்கோளாகக் காட்டப்பட்ட பொருளியலாளரின்படி அமெரிக்காவுக்கும் ஜப்பானுக்கும் இடையேயான மோதுதல் '1930 ஆம் ஆண்டுகளுக்கு சமமான ஒரு அனுபவத்தை: நிதிக் குழப்பங்கள், அயலவரிடம் பிச்சை எடுக்கும் கொள்கைகள் உலகளாவிய மந்தமாக உயரவும் சிலவேளை யுத்தமாகவும்' அச்சுறுத்திக் கொண்டுள்ளது.

. 127 உலக ஏகாதிபத்திய விவகாரங்களில் ஐரோப்பா இன்னமும் ஒரு பெரும் பாத்திரத்தை வகிக்கிறது உலகின் பழம் முதலாளி வர்க்கம் எந்தவிதத்திலும் உலக ஆதிக்கத்துக்கான போராட்டத்தில் இருந்து விலகிக் கொண்டு விடவில்லை. மாறாக 1992 இல் ஒரு தனி ஐரோப்பிய சந்தையை எல்லைக் கட்டுப்பாடுகள், சுங்கங்கள் இல்லாமலும் முடிந்த மட்டும் தனியொரு நாணயத்துடன் நிறுவும் திட்டங்கள் அமெரிக்காவுக்கும் ஜப்பானுக்கும், ஐரோப்பாவுக்கும் இடையே வளர்ச்சி காணும் ஏகாதிபத்தியங்களுக்கிடையேயான குரோதங்களுடன் தொடர்புபட்டவை.

32 கோடி மக்களுடன் ஐரோப்பா பெரும் முதலாளித்துவ சந்தையை கொண்டுள்ளது. மேலும் ஐரோப்பிய முதலாளி வர்க்கம் அந்த உத்தேச 1992 இணைப்பு அனைத்துலக ரீதியில் போட்டி மிக்கதாக தொடர்ந்திருக்க உதவும் எனவும் நம்புகின்றது. அமெரிக்கா, ஐரோப்பி

129. மேலும் ஒவ்வொரு ஐரோப்பிய முதலாளி வர்க்கமும் தனது நாட்டு தொழிலாளர்கள் அயல் நாட்டு தொழிலாளர்களை காட்டிலும் நல்ல சமூக திட்டங்கள், உயர்ந்த மட்ட சம்பளங்கள் வேலை நிலைமைகளை கொண்டிருந்ததால் தேசிய முதலாளித்துவம் திட்டமிட்டுள்ள தனி சந்தையுள் போட்டியிட முடியாது என வலியுறுத்தி வருகிறார்கள் எனவே பெல்ஜியம் அரசாங்கம் சகல சம்பள ஏற்றங்களையும் தடை செய்துள்ளது பணவீக்க வீதத்துடன் சம்பள மட்டத்தை இணைக்கும் வாழ்க்கைச் செலவு சரத்துக்களை குறைக்க வேண்டும் எனவும் கேரியுள்ளது. டானிஷ் அரசாங்கம் 1985 இல் வாழ்க்கைச் செலவு போனசுகளை 2 ஆண்டுகளுக்கு ரத்துச் செய்துள்ளது பாராளுமன்றம் வாழ்க்கை செலவு அதிகரிப்பு மீதான சகல உடன்படிக்கைகளையும் செல்லுபடியற்றதாக்கும் சட்டம் ஒன்றை இயற்றியுள்ளது. மேற்கு ஜெர்மனியில் (ஓராண்டு உடன்படிக்கைகளுக்கு பதிலாக) தொழிற் சங்கங்கள் பணவீக்க நிலையில் உடன்படிக்கையை மீள ஆயும் எந்தவித சரத்துக்களும் இல்லாமலே முதல் தடவையாக மூன்றாண்டு சம்பள ஒப்பந்தத்துக்கு உடன்பட்டுள்ளன.

## ஏகாதிபத்தியமும் ஆசிய பசுபிக் கரையும்

130. கடந்த கால் நூற்றாண்டில் ஆசிய பசுபிக் கரையென பேர் பெற்ற பிராந்தியத்தில் முதலாளித்துவம் பரந்த வளர்ச்சி கண்டுள்ளது இதில் ஜப்பான், தாய்வான், தென் கொரியா, ஹொங்கொங், சிங்கப்பூர், இந்தோனேசியா, மலேசியா, தாய்லாந்து பிலிப்பைன்ஸ் அடங்குகின்றன. சீன மக்கள் குடியரசு கூட இந்தப் புவியியல் பிராந்தியத்தில் ஓர் பாகமே. இதன் பொருளாதாரமும் பொதுவாக இன்று ஆசிய பசுபிக் கரை அபிவிருத்தி பற்றி முதலாளித்துவ ஆய்வுகளிலும் உலக முதலாளித்துவ பொருளாதாரத்தில் இதன் பத்திரம் பற்றியும் சேர்க்கப்பட்டு வருகின்றது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. 1960 – 1982 க்கும் இடையே சீனா உட்பட ஆசிய பசுபிக் நாடுகளில் மொத்த உள்நாட்டு உற்பத்தி உலகின் மொத்த உள்நாட்டு உற்பத்தி (ஜீ. டீ. பி) யின் 7.8 வீதத்தில் இருந்து 16.4% மாக அதிகரித்தது. அமெரிக்காவின் மொத்த உ. உ. யுடன் தொடர்புபடுத்துகையில் அதன் ஆசிய பசுபிக் 18% இல் இருந்து 53.2% மாக அதிகரித்தது. 1960 – 1985 க்கும் இடையே இப் பிராந்திய உலக ஏற்றுமதி பங்கு 7.5% இல் இருந்து 17% மாக இரண்டு மடங்குக்கு மேல் அதிகரித்தது. 1965 இல் கூட்டு ஆசிய – பசுபிக் பொருளாதாரங்கள் 18,300 கோடி டாலர் பொருட்களையும் சேவைகளையும்

உற்பத்தி செய்தது. இது வட அமெரிக்க மட்டத்துக்கு 75% விதமு குறைந் தாகும். 198 இல் அவர்களின் மொத்த உற்பத்தி 1,7 பிலிய யன் டாலர்களாக உயர்ந்தது. இது வட அமெரிக்க உற்பத்தியை காட்டிலும் 50% மும் ஐரோப்பாவை காட்டிலும் 30% மும் குறைவானது.

131. இரண்டாம் உலக யுத்தத்தின் முடிவில் இருந்து உலகின் அநேக பாகங்களில் முதலாளித்துவம் பெருக்கம் கண்டமையும் ஆசியம் மவில் பரத முதலாளித்துவ மத்திய ஸ்தானங்கள் உருவாகியமையு காதிபத்தியம் முதலாளித்துவத்தின் உச்சகட்டம் என்ற லெனின் வரை விளக்கணத்தையோ அல்லது இச்சகாப்தம் பற்றிய ட்ரொட்ஸ்கியின் விவரணத்தையே எந்த விதத்திலும் முரண்பாட்டுக்குள்ளாக்கி விடவில்லை லெனின் தமது ஏகாதிபத்தியத்தில் சிறப்பாக எச்சரித்தது போன்று 'இந்த வீழ்ச்சிப் போக்கு முதலாளித்துவத்தின் துரித வளர்ச்சியை நீக்கி விடுகின்றதென நினைப்பது தவறாகும். இது அப்படி அன்று'. அமெரிக்க ஏகாதிபத்தியம் ஆசிய பசுபிக் நாடுகளை கூட்ட மேடைகள்' ஆகப் பயன்படுத்திக் கொண்டுள்ளது. உதாரணமாக அமெரிக்க, 'செமிகொன் டக்டர்' கைத்தொழில், இணைக்கப்பட்ட மின்ஒட்ட வழிகளில் பெரிதும் சிக்கலான பாகங்களை தனது ஆசிய பசுபிக் விசமிகளுக்கு ஏற்றுமதி செய்கின்றது. அங்கு ஊழிய-தீவிர கூட்டிணைப்பு வேலைகள் நிறைவேற்றப்படுகின்றன. 'உள்ளார்ந்த தாபன வர்த்தக' சுற்றோட்டம் பூரணமாக இணைக்கப்பட்ட அலைகள் திருப்பவும் அமெரிக்காவினுல் இறக்குமதி செய்யப்படுவதுடன் பூர்த்தியடைகின்றது. இந்த அபிவிருத்திகளின் பின்னணியில் உள்ள உள்நோக்கம் பெரிதும் தெளிவானது. 'செமிகொன்டக்டர்' கைத்தொழிலைப் பற்றிய ஒரு ஆய்வு குறிப்பிட்டதுபோல் ''1964-1972 காலப்பகுதியில் அமெரிக்க இணைக்கப்பட்ட மின்னோட்ட வழி நிறுவனங்கள் தூர கரையோர 'அசெம்பிளி' களுக்கு இடம் பெயர்ந்தமை பானது ஊழிய-தீவிர கட்டங்களைக் கொணடு இணைந்த மினஒட்ட உற்பத்தியில் ஊழிய செலவினத்தை குறைப்பதற்கான ஒரு உக்கிரமான நடவடிக்கையாகும். தென் ஆசிய அபிவிருத்தியடையும் நாடுகளுக்கும் அமெரிக்காவுக்கும் இடையேயான பெருமளவிலான கூலி செலவின வேறுபாடுகள் 'அசம்பிளி' யை தூர கரையோரங்களுக்கு, நகர்த்துவதை பெருமளவில் பொருளாதார ரீதியில் ஊக்குவிக்கின்றது. (அனைத்துலகப் போட்டியில் அமெரிக்க கைத்தொழில்' — சிஸ்மன்-ரைசன் — 1983)

132. ஆசிய-பசுபிக் முதலாளித்துவப் பொருளாதாரங்கள் தொழிலாள வர்க்கத்தை இந்த மிலேச்ச சுரண்டலுக்கு உள்ளாக்குவதன் அடிப்படையில் அமைந்துள்ளன மத்திய முதலாளி வர்க்கம் மிலேச்ச—இராணுவ பொலிஸ் சர்வாதிகாரத்துடன் கூடிய சர் தேச நாணய நிதியத்தினுல் விரும்பப்படும் 'ஏற்றுமதி மூலோபாயத்தைப்' போற்றுகின்றது. அரச முறைகளுள் வேரோ

டிய இவை, நிச ஜனநாயகப் புரட்சிகளினூல் ஒருபோதும் அடித்துச் செல்லப்
படாத பல துறை-நிலமானித்துவ மிச்ச சொச்சங்களை பேணிக்காக்கின்றன.
'ட்ரான்ஸ்நஷனல்' கூட்டுத்தாபனங்களுக்கான உச்ச சுரண்டல் ஊழிய களஞ்
சியங்களாக தொழிற்படும் அதே வேளையில் இந்தச் சகல 'குட்டி ஜப்பான்கள்'
எனப்படுபவற்றின் பொருளாதாரங்கள் உலக வர்த்தக மாதிரிகளால் பாதிக்
கப்படத்தக்கவையாகும்.

133. அனைத்துலக வர்த்தக உறவுகளின் நிலைப்பாட்டிலிருந்து பார்க்
கையில் ஆசிய பசுபிக்கில் முதலாளித்துவ பரவலாக்கத்தின் முக்கிய அம்சம்,
அப்பிராந்தியம் பூராவும் பாட்டாளி வர்க்கத்தின் பெரும் வளர்ச்சியே
1960களில் இருந்து தென்கொரியாவின் நாட்டுப்புறங்களில் இருந்து ஏற்பட்ட
தீவிரமான இடம் பெயர்வினூல் தொழிலாள வர்க்கம் துரித வளர்ச்சி கண்
டது. வேலைநிறுத்த அலைகள் தென்கொரியாவை ஆட்டிப்படைத்தோடு
ஜெனரல் சுன்-டூ-வானை இளைப்பாறவும் நெருக்கியது: இது முதலாளித்துவ
ஆய்வாளர் ஒருவரை பின்வருமாறு மதிப்பிடச் செய்தது. ''கடந்த 20 வரு
டங்களுக்கு மேலாக கொரிய தொழிலாளர்களின் வாழ்க்கைத்தரம் பற்றிய
எதிர்பார்ப்புக்கள் பெருமளவில் அதிகரித்தன. தொழிலாளர்களாக மாற்
றப்பட்ட விவசாயிகள் நகரங்களின் பக்டரிகளில் ஜீவியத்தை ஈட்டிக்கொள்
ளும் வாய்ப்புக்காக தொடர்ந்தும் நன்றியுடையவர்கள் அல்லர்.

134. இக்கட்டுரையின் ஆசான்கள் தென்கொரியாவில் முதலாளித்துவத்
தின் ''வெற்றியை நிரூபிக்கும் புள்ளிவிபரங்களைக் கொடுத்துள்ளனர்
இதேசமயம் கொரிய அபிவிருத்திக் கழகத்தின்படி 980ல் 5 பேரைக்கொண்ட
குடும்பமொன்றின் குறைந்தபட்ச வாழ்க்கைச் செலவு மாதாந்தம் 270 000
வொன். 56%மான தொழிலாளர்கள் 200,000 வொன்னிலும் குறைவாகவே
பெறுகிறுர்கள். கொரியன் தொழிலாளர்கள் வாரத்துக்கு ஏறக்குறைய 53
மணித்தியாலங்கள் வேலை செய்கிறுர்கள். சர்வதேச தொழிலாளர் அமைப்
பினூல் ஆய்வு செய்யப்பட்ட எந்தவொரு நாட்டினைக் காட்டிலும் இது அதிக
மானது. உருக்குக் கைத்தொழிலில் வேலைமுறைகள் 12 மணித்தியாலங்களைக்
கொண்டவை. வேலைமுறை மாற்றத்தின்போது சில தொழிலாளர்கள்
ஓர் தொடர்ச்சியாக 24 மணித்தியாலயங்களுக்கு வேலைசெய்ய வேண்டியது
சாதாரணமானது. 1985ல் பாதுகாப்பு நிலைமைகளினூல் 1718 தொழிலா
ளர்கள் கைத்தொழில் விபத்துக்களினூல் கொல்லப்பட்டனர்.

135. ஆசியபசுபிக் ஏனைய 'அபிவிருத்தியடையும்' பொருளாதாரங்களில்
தென்கொரிய நிலைமைகள் பொதுவில் இன்னமும் படுகொடூரமான முறை
யில் பிரதிபலிக்கின்றன. தென்கொரியாவில் போராட்டங்கள் ஏற்கனவே
வெளிப்படுத்தியுள்ளது போல் பாட்டாளி வர்க்கம் ஒடுக்குமுறை முதலாளித்
துவ ஆட்சியாளர்களுக்கு எதிரான போராட்டத்திற்கு முன்னணியில் வந்து
கொண்டுள்ளது. ஏசியன்பசுபிக், நிரந்தர புரட்சி கோட்பாட்டிற்கு மாபெ

ரும் வரலாற்று ருசுவினை வழங்கவுள்ளது என்பதில் பிரச்சனைக்கே இடமில்லை.

## பின் தங்கிய நாடுகளின் வறுமை

136, பூமியின் சனத் தொகையில் கணிசமான பெரும்பான்மையினர் விபரிக்க முடியாத வறுமையில் வாழ்ந்து கொள்ள நெருக்கப்பட்டுள்ளமையானது முதலாளித்துவத்திற்கு எதிரான மாபெரும் வரலாற்று குற்றச்சாட்டினை உள்ளடக்கிக் கொண்டுள்ளது. யுத்தத்தின் பின்னைய செழிப்பின் முக்கிய காலப்பகுதியில் ஆசிய, ஆபிரிக்க, லத்தீன் அமெரிக்க மக்களின் வாழ்க்கைத் தரத்தை கணிசமான அளவு உயர்த்த முதலாளித்துவத்தால் முடியாது போய்விட்டது அத்தோடு கடந்த 15 ஆண்டுகளின்போது சமூக நிலைமைகள் பெருமளவு சீர்கெட்டுப் போயுள்ளன. "காலனித்துவ ஒழிப்பின்" முதல் நீரோட்டத்தில் தேசிய முதலாளி வர்க்கம் சுயபூர்த்தி மூலம் செழிப்பு என்ற நப்பாசையை வளர்த்தது. அத்தோடு "இறக்குமதி பதிலீட்டு" கொள்கையிலும் ஈடுபட்டது. இவை "புதிதாக சுதந்திரம்" பெற்ற நாடுகளை ஏகாதிபத்திய சக்திகளின் பொருளாதார குரல்வளை நெரிப்பில் இருந்து விடுதலை செய்யும் என எதிர்பார்க்கப்பட்டது. சுயபூர்த்தி கொள்கையை ஒரு சோசலிச வடிவமாகவோ அல்லது முதலாளித்துவ தேசியவாதிகளின் ஸ்டாலினிச கூட்டுக்கள் கபடமான விதத்தில் "முதலாளித்துவம் அல்லாத அபிவிருத்திப் பாதை" என்று காட்டும் முயற்சிகளும் கூட இடம் பெற்றன. ஆனால் அவர்கள் உருவாக்கிய பகட்டான பிரதாபங்களும், சலசலங்களும் இன்று எஞ்சியில்லை.

137. 1970களில் ஏகாதிபத்திய வங்கிகளின் ஊக்குவிப்புடன் பின் தங்கிய நாடுகள் பெற்ற பிரமாண்டமான கடன், திருப்பிச் செலுத்த முடியாத ஒரு கடன் மலையை உண்டுபண்ணியுள்ளன. வங்கிகள் கடன் நெருக்கடிக்கு கடன் வழங்கும்வரை பெருமளவில் வெட்டுவதன் மூலம் பதிலளித்தது. சடப்பொருள் பண்டங்களின் விலைகள் 20தாம் நூற்றாண்டின் அதிகுறைந்த மட்டத்துக்கு வீழ்ச்சி கண்டமையும் உலக வர்த்தகத்தின் ஸ்தம்பிதமும் பாதுகாப்புவாத கொள்கைகளின் அதிகரித்து வரும் அழுத்தங்களும் இந்த ஆட்சியாளர்களை தமது வட்டிக் கொடுப்பனவுகளை ஈடுசெய்யும் விதத்தில் உள்நாட்டு நுகர்வுகளை மேலும் பெருமளவில் வெட்டும் வண்ணம் நெருக்கப்பட்டன. உலக வங்கியினதும் சர்வதேச நாணய நிதியத்தினதும் கட்டளைப்படி பின்தங்கிய நாடுகள் தமது இறக்குமதி பதிலீட்டு கொள்கைகளை பெருமளவில் கைவிட்டுவிட்டு, அவற்றினை ஏகாதிபத்தியத்தின் கட்டளைக்கு முற்றாக அடிபணியச் செய்யும் "ஏற்றுமதி மூலோபாயத்தை" கடைபிடித்தன.

138. இறக்குமதி பதிலீட்டில் இருந்து ஏற்றுமதிக்குச்செல்லும் இதந்

பெயர்ச்சி அனைத்துலக வங்கியாளர்களால் 'சிராக்கங்கள்' என நாசூக்காக அழைக்கப்பட்டது. ஆனால் உலக வங்கி சமீபத்தில் ஒத்துக் கொண்டது போல் "சிராக்கங்கள் சில நாடுகளுக்கு குறிப்பாக சகாரா, ஆபிரிக்காவுக்கும் பெருமளவில் கடன் பழுவில் மூழ்கிப்போயுள்ளமைக்கும் ஆரம்பத்தில் எதிர்பார்த்ததைக் காட்டிலும் ஒரு நீண்ட பாதை என்பதை நிரூபித்துள்ளன. உரிய நிபந்தனைகளின் அடிப்படையில் அவசியமான வளங்கள் இல்லாதவிடத்து இந்நாடுகள் கல்வி, சௌக்கிய சேவைகள், போசாக்கு வேலைத்திட்டங்களையும் முன்னேற்றமான நீர் வசதிகளையும் ஏழைகளுக்கு இருப்பிடங்களையும் பராமரிக்க கஷ்டப்படும்" (உலக வங்கி ஆண்டறிக்கை – 1987 பக்கம் – 5) லத்தீன் அமெரிக்காவில் சராசரி தொழிலாளி தினசரி 1975ஐ காட்டிலும் குறைந்த 'கலோரிகளை'யே உட்கொள்கின்றான். சனத்தொகையில் மூன்றில் ஒரு பங்கு மட்டுமே அத்தியாவசியமான உணவினை உட்கொள்கின்றது என மதிப்பிடப்பட்டுள்ளது. சிசு மரணவீதம் பெருமளவு அதிகரித்துள்ளது. 1986ல் தலாவருமானம் 1980 மட்டத்துக்கு கீழேயே இருந்தது. 1970பதுகளின் காட்டிக் கொடுப்புகளுக்கும் தோல்விகளுக்கும் லத்தீன் அமெரிக்க தொழிலாள வர்க்கம் செலுத்தும் விலை இதுவே.

139. உலக வங்கியால் குறிப்பிடப்பட்ட அத்தியாவசிய சேவைகளிலும் வேலைத்திட்டங்களிலும் மேற்கொண்டு ஏற்படும் வீழ்ச்சியின் தாக்கங்களை ஒருவர் பின்தங்கிய நாடுகளின் 1986ம் ஆண்டில் தலா மொத்த தேசிய உற்பத்தியை கவனத்தில் எடுப்பின் கற்பனை செய்ய முடியும். சில பிரதிநிதித்துவ உதாரணங்களை குறிப்பிடின் தலா தேசிய உற்பத்தி : புருண்டி – 230 டாலர் எதியோப்பியா – 110 டாலர், மடகாஸ்கர் – 240 டாலர் சயிரே – 170 டாலர், சோமாலியா – 280 டாலர் மலாவி – 170 டாலர், பேர்கினோ பாசா – 150 டாலர், கினி-பிசோ – 120 டாலர், பங்களாதேஷ் – 160 டாலர், பர்மா –190 டாலர், இந்தியா – 270 டாலர் இந்தியா, ராஜீவ் காந்தியின் ஆட்சியின் கீழ் ஏற்றுமதி மூலோபாயத்திற்கு ஆவலோடு திசை திரும்பியது. இதன் பொருளாதார அபிவிருத்தியானது ஏகாதிபத்தியத்தின் ஒட்டுண்ணித்தனத்திற்கும் வரலாற்று வங்குரோத்திற்கும் மிகவும் நல்ல உதாரணமாக விளங்குகிறது. 1950 – 1985க்கும் இடையே விவசாயத்தின் தேசிய உள்நாட்டு உற்பத்தியின் தலா அதிகரிப்பு 0 0074% பம்பாயில் பிரசுரமாகும் 'எகோனமிக் அன்ட் பொலிரிகல் வீக்லி' இந்திய பொருளாதாரத்தின் முழு அபிவிருத்தியினையும் அளவீடு செய்கையில் "வளர்ச்சி பற்றாக்குறையானது. அதோடு சனத்தொகையின் பெருக்கத்தினால் இதன் பெரும்பகுதி நடுநிலைப்படுத்தப்பட்டுவிட்டது. கடன் வாங்கல்களால் ஏற்பட்ட அபிவிருத்தியானது கடன்களைத் திருப்பி செலுத்துவதற்கு போதுமான நிதிகளை உருவாக்காததோடு கடன் சுமையும் அதிகவின்றது. பற்றாக்குறை நிதியீட்டல்கல் பொருளாதார பலவீனத்தை மட்டுமன்றி அரசியல் உதிறுப்பாடற்ற நிலையையும் உண்டுபண்ணும் பணவீக்

கத் தாக்கங்களை சிருஷ்டிக்கின்றது. பிராந்திய, மாகாண சமத்துவமின்மை அதிகரித்து அரசியல் ஸ்திரமற்ற நிலை உருவாகின்றது. இவை கஷ்டமான பிரச்சினைகள். இவற்றுக்கு தீர்வுகள் கண்ணில் தென்படவில்லை. இந்தியா இவை அனைத்தையும் முதுகில் சுமந்த வண்ணமே 21 நூற்றாண்டில் கா டி வைக்கின்றது (ஜனவரி - 2 - 9, 1988 - பக்கம் 50)

140. லெனினின் ஆய்வுகளும் வரலாற்று தீர்க்கதரிசனங்களும் பின் தங்கிய நாடுகளின் மக்களின் பயங்கரமான துன்பங்கள் மூலம் ருசுப்படுத்தப் பட்டுள்ளன. 'முதலாளித்துவம் இன்று எங்கும் கைத்தொழிலின் பின்னால் நின்றுகொண்டுள்ள விவசாயத்தை அபிவிருத்தி செய்ய முடிந்தால் தொழில் நுட்ப அறிவில் ஏற்பட்டுள்ள அதிர்ச்சிதரும் முன்னேற்றத்துக்கு இடையே யும் எங்கும் பட்டினிக்கு ஆளாகியும், அரைவயிற்றுடனும் இருந்து வரும் வெகுஜனங்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்தமுடிந்தால் மூலதனத்தின் அபரிமிதத்தைப் பற்றியே பேச்சு இருக்காது என்பதை சொல்லவேண்டிய தில்லை. இந்த 'வாதத்தினை' முதலாளித்துவத்தின் குட்டி முதலாளித்துவ விமர்சகர்கள் சகல சந்தர்ப்பங்களிலும் முன்வைக்கின்றனர். ஆனால் முத லாளித்துவம் இவற்றினைச் செய்திருந்தால் அது முதலாளித்துவமாக இருக்க முடியாது. வெகுஜனங்களின் சமத்துவமற்றதும் பரிதாபமுமான நிலைமை கள் இந்த உற்பத்தி முறைகளின் அடிப்படையானதும் தவிர்க்க முடியாத நிலைமைகளாகும் முதலாளித்துவம் தொடர்ந்து இருந்துவரும்வரை ஒரு குறிக்கப்பட்ட நாட்டில் வெகுஜனங்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்த உபரி மூலதனம் ஒரு போதும் பயன்படுத்தப்படமாட்டாது. அங்ஙனம் செய்வது முதலாளிகளின் லாபத்தில் ஒரு வீழ்ச்சியை ஏற்படுத்துவதாக இருக்கும் இது இந்த இலாபத்தை அதிகரிக்கும் நோக்கில் பின் தங்கிய நாடுகளுக்கு மூலதனத்தை ஏற்றுமதி செய்யப் பயன்படுத்தப்படும்.' (ஏகாதிபத்தியம்) உலகே சோஷலிச புரட்சி மூலம் ஏகாதிபத்தியத்தை தூக்கி வீசுவதிலேயே தீர்வு தங்கியுள்ளது பின்தங்கிய நாடுகளின் மக்கள் இம்முடிவினை நோக்கிப் பிடிவாதமாக தள்ளப்பட்டுள்ளனர்

## உலக கடனின் பெருக்கம்

141. கடன் பெருக்கம், பின்தங்கிய நாடுகளின் தரித்திர நிலைக்கு ஒரு மையப் பாத்திரத்தை வகித்ததோடு உலக பொருளாதார நெருக்கடிக்கு ஒரு மத்திய மூலகமாகவும் விளங்குகின்றது. 1973-75 உலகப் பொருளா தாரப் பின்னடைவிற்கு பின்னைய ஒரு தசாப்த காலம், உலக திக் கடனின் ரு விய க்த்தக்க பெருக்கத்தால் பலவுபமயப்படுத்தப்பட்டது. அனைத்துலக மூலதனத்தின் அசாதாரணமான அசைவினால் இதற்கு எண்ணெய் வார்க் ப்பட்டது. விரைவானதும், பாரியதுமான ஆதாயத்தை உத்தரவாதம்

குசய்யும் எந்தவிதமான முதலீட்டினையும் தேடி பேரளவிலான தொகை பூகோளத்தை ஊடறுத்துச் செல்கின்றன. மூலதனத்தின் இத்தகைய ஒரு வெறிபிடித்த இயக்கம் வரலாற்றில் முன்னெருபோதும் இருந்ததில்லை. அனைத்துலக நாணய மாற்றுவீதங்களில் ஏற்படும் நிலையற்ற மாற்றங்கள் நிதிச் சொத்துக்களை பூகோளத்தின் ஒரு பாகத்தில் இருந்து இன்னொரு பாகத்துக்கு பிரமாண்டமான அளவில் இடம் பெயரவைக்கும் காரணமாகியுள்ளது. 96 ல் அமெரிக்காவில் 100 கோடி டாலருக்கும் குறைவாக இருந்த தினசரி வெளியீட்டுச் செலாவணி வர்த்தகம் 1 3ல் 3400 கோடி டாலர்களாக அதிகரித்தது உலகரீதியாய் இது 1979ல் 7500 கோடி டாலர்களாக விருந்து 1986ல் 20000 கோடி டாலர்களுக்கும் மேலாக உயர்ந்தது.

142. எவ்வாறெனினும் சகல வெறிபிடித்த நடவடிக்கைகளும் மனித இனத்தின் உற்பத்திச் சக்திகளின் நிச அபிவிருத்திக்கு எந்தவொரு பங்களிப்பையும் செய்யவில்லை. மாறாக இலாபத்துக்கான வெறிபிடித்த திட்டமானது அபரிமிதமான சந்தைகளையும் அனைத்துலக, தேசிய கடன்களின் பிரமாண்டமான சிகரங்களையும் சிருஷ்டித்துள்ளது. முதலாவதைப் பொறுத்தமட்டில் உலக முதலாளித்துவப் பொருளாதாரத்தின் வெறிபிடித்த போட்டியானது நிதி அடிப்படையில் கைத்தொழில் பொருட்களின் அளவுக்கதிகமான இயலளவை சிஷ்ட்டித்துள்ளது என்பது முதலாளித்துவ பொருளியலளாருக்கு இரகசியம் அல்ல. 197 பதுகளில் எண்ணெய் செழிப்பு முதலீட்டில் இருந்து 19:0பதுகளின் எண்ணெய் ' பிம்பம்'' முறையிலான இடைமருவல் இந்த தொடர்ச்சிக்கான நல்லதோர் எடுத்துக்காட்டாகும்; அளவுக்குமீறிய இயலளவை சிருஷ்டித்த இந்த இலாபத்துக்கான அதே அராஜக ஓட்டமானது இன்று ஆலைகளுக்கு மூடுவிழா பேரளவிலான வேலை நீக்கங்கள் முதலான பாரம்பரிய முதலாளித்துவ தொழிநுட்பங்கள் ஊடாக இதன் அழிவினை கொண்டிருக்கிறது. இந்தப் போக்கானது அமெரிக்காவினதும் ஐரோப்பாவினதும் உருக்கு தொழிலை ஏற்கனவே நாசமாக்கி விட்டத். மோட்டார் வாகனத்தொழில், தசாப்தம் பூராவும் இப்போக்கு வளர்சி கண்டு வருவதோடு 1990களுக்கும் தொடரும்.

143. உலக பொருளாதாரத்தின் மேல் ஒரு இருண்ட நிழல் போன்ற இந்த இராட்சத கடன் வலைகளும் அவற்றின் தாக்கங்களும் பெரும் அழிவுகரமானவை என்பதை சகல முதலாளித்துவ பொருளியலளர்களும் அங்கீகரித்துள்ளார்கள். அனைத்து நாடுகளும் கடன் மட்டங்களால் அடியோடு வங்குரோத்தடைந்துள்ளன. அவை வகு ஜனங்களை பட்டினி போடுவதின் மூலம் ஏற்றுமதிகளை பெருமளவில் அதிகரிப்பதன் ஊடாகவே அரை குறையாக தன்னிலும் திருப்பட்ச் செலுத்தப்பட முடியும் 1982 ல் வெளி நாட்டுயுடன் மீளக் கொடுப்பனவு ஏற்றுமதி களின் பதினைந்து வீதத்தினை ஏற்கனவே எட்டியுள்ளது. ஆர்ஜன்ரைனாவில் 179% ஐயும் மெக்சிகோவில் 129% ஐயும் ஜிரேசிலில் 122% ஐயும் வெனிசூலாவில் 75% ஐயும் பிலிப்பைன்சில் 91%

கம் எட்டியுள்ளது. சகல கடன் பட்ட குறைவிருத்தி நாடுகளையும் பொ றுத்தமட்டில் ஏற்றுமதிகள், கடன் விகிதாசாரம் 1978ல் 132 2%ல் இருந்து 1986ல் 17 .5%மா அதிகரித்துள்ளது. கடந்த தசாப்தத்தில் குறைவிரு த்தி நாடுகளின் கடன்களின் மொத்த உள்நாட்டு உட்பத்திக்கு கடன் விகி தாசாரம் 1978ல் 2 .6%மாகவும் 19 2ல் 40% மாகவும் இருந்து 1986ல் 40% ஆக அதிகரித்தது. தலா அடிப்படையில் பார்க்குமிடத்து லத்தின் அமெரிக்க நாடுகளின் கடன்மட்டம் ஈடாட்டம் கண்டுவருகின்றன. இது ஆர்ஜன்டினாவில் 1662 டாலராகவும் பொலிவியால் 622 டாலராகவும் பிரே சிலில் 791 டாலராகவும் சில்லியில் 1740 டாலராகவும் கோஸ்டரிகாவில் 1625 டாலராகவும் மெக்சிகோவில் 1261 டாலராகவும் வெனிசூலாவில் 000 டாலராகவும் உள்ளது

144. அமெரிக்காவின் உள்ளே கடன் புள்ளிவிபரங்கள் அமெரிக்க முத லாளித்துவத்தின் உள்ளார்ந்த நாற்றம் எடுப்பினை அம்பலம்படுத்துகின்றது. 1980ல் 91400 கோடி டாலர்களாக இருந்த சமஷ்டி கடன் 1987ல் 18 100 கோடி டாலர்களாக அல்லது மொத்த தேசிய உற்பத்தியின் 37% மாக அதிகரித்துள்ளது கடன்களின் மீதான வட்டி 1975ல் 23.2 பில்லியன் டாலர்க ளில் இருந்து 1979ல் 42 6 பில்லியன் டாலர்களுக்கும் 1985 129.4 பில்லி யன் டாலர்களுக்கும் அல்லது வரவு செலவுத்திட்டத்தின் 13 7% மாகவும் உயர்ந்தது. 1970ல் 1 6 ட்ரிலியன் டாலர்களாக இருந்த அரசாங்க, தனி யார் கடன்கள் 1980ல் 8 ட்ரிலியன் டாலர்களாக அதிகரித்தது. "கோர் பரேட்" கடனின் பெருக்கமானது அமெரிக்க வர்த்தகத்தின் முழு அடிப்ப டையினதும் நொருங்கும் தன்மையை அம்பலப்படுத்துவதுடன் இது முத லாளித்துவ தொழிற்பாட்டுக்கு எதிரான குற்றச்சாட்டையும் பி திநி து வம் செய்கின்றது. அதில் இலாபத்திற்கான ஓட்டம் உற்பத்தி போக்கினை யே தடை செய்து பேராபத்தான நெருக்கடிக்கு தளம் அமைக்கின்றது.

145 அமெ க்க கைத்தொழிலின் புனரமைப்பினை முதலாளித்துவ பத் திரிகைகள் உலக சந்தையில் அமெரிக்காவின் போட்டியிடும் தன்மையின் ஒரு மறுபிறப்பு என கொண்டாடின. உண்மையில் அது வளங்களை உத ணக்கரையானவித்ததில் வீண்விரயம் செய்வதை குறிக்கின்றது. 1980பதுக ளின் இணைப்புக்கள் தொழிலாளர் வர்க்கத்தைப் பல வீனப்படுத்துவதை யும் சுரண்டல் வீதத்தை உச்சிரமாக்குவதையும் இன்றைய இலாபவீதத்தின் வீழ்ச்சியை ஈடுசெய்வதையும் தமது மைய இலக்காக கொண்டிருந்தன. வங்கிகளும் தரகர் இல்லங்களும் இந்த "இணைப்பு பைத்தியம்" பிரமாண்டமான கடதாசி இலாபங்களை சிருஷ்டித்தத என்ற உமையில் அதிகம் சிரத்தை காட்டவில்லை. 1970 க்கு முன்னர் 12 இணைப்புக்கள் மட்டுமே இடம்பெற்றன. இவை 100 கோடி டாலர்களை செலவு பிடித்தது. அத்தகைய பல கோடி இணைப்புக்கள் 1985ல் 25ம் 1986ல் 33 ம் இடம் பெற்றன. 4000 நிறுவனங்கள் 1986ல் புனரமைப்புக்காக 2000

கோடி டாலர்களை செலவிட்டதோடு 1983 – 1987 க்கும் இடையே 49000 கோடி டாலர்கள் மதிப்புடைய 12200 கம்பனிகள் கைமாறின,

146. இந்த சொத்துக்களின் மறுகலைப்பானது தவிர்க்க முடியாத பிர மாண்டமான கடன்களை உள்ளடக்கிக் கொண்டது. உதாரணமாக கல்பை சுவிகரிக்கும் ஆர்கோவின் தோல்வியில் முடிந்த முயற்சிக்கு 1100 கோடி டாலர்கள், ரீ. பூ. பிக்கன்சின் சுவிகரிக்கும் முயற்சியை தோற்கடிக்க கல்பு க்கு 100 கோடி டாலர்கள், கல்புடனான தனது இணைப்பை நிதியீட்டம் செய்ய சோகலுக்கு 1400 கோடி டாலர்கள். இந்த இணைப்பு பைத்திய த்தின் விளைவாக "கோர்பரேட்" கடன் வான் மட்டத்திற்கு உயர்ந்தது 1950ல் அமெரிக்க கூட்டுத்தாபனங்களினால் அவை வட்டியாக செலுத்திய ஒவ் வொரு டாலர்களுக்கும் 43 டாலர்களை வைத்திருந்தன. 1982ல் இருந்து சொத்துகளுக்கும் வட்டிக்கும் இடையேயான விகிதாசாரம் நாலுக்கு ஒன்றாக வீழ்ச்சி கண்டது; 1983 கடன் சுமார் 6 000 கோடி டாலர்களாகும் (சா தாரண பங்கு) சமத்துவம் 30000 கோடிகளாலும் அதிகரித்தது. 1984ல் புதிய "கோர்பரேட்" கடன்கள் 16900 கோடி டாலர்களினால் அதிகரித்தது இதேசமயம் சமத்துவம் 7800 கோடி டாலர்களால் வீழ்ச்சி கண்டது. 1983ல் கடன் மற்றுமோர் 14500 கோடி டாலர்களால் அதிகரித்தது. பெரும் பாலான கைத்தொழில்களில் இலாபங்கள் நிலையான வட்டிகளையும் முன் னுரிமையம் பங்கிலாப கட்டணங்களையும் வழங்க போதியதாக இருக் வில்லை கடன்களின் அளவு தொடர்ச்சியாக அதிகரித்து வந்த வேளையில் இதன் கால எல்லை தொடர்ந்து குறுகிக் கொண்டே வந்தது. 1976ல் குறுங்கால கடன்கள் 4000 கோடி டாலர்களில் இருந்து 1984ல் சுமார் 10000 கோடி டாலர்களாக அதிகரித்தது. 1985 ஆண்டில் வரிவிதிப்புக்கு முன்னைய 47% டி மான இலாபம் கடன் சேவைக்கு சென்றது. கடனில் அரை பங்குக்கும் மேல் குறுங்கால கடனாக வழங்கியது. கடன்களின் தரத்தை பொறுத்த மட்டில் 1985 சகல புதிய கோர்பரேட் விநியோகங்களினதும் 25% ஐ மதிப் பற்ற "பொன்டு" கள் (கடன் பத்திரங்கள்) கொண்டிருந்தன.

147. இந்த பிரமாண்டமான கடன் அடிப்படையில் நின்று பிடிக்க முடியாத தன்மை தெளிவானது பெரிதும் அச்சத்திற்குரியதும் ஆனால் ஒரு பொருளாதாரப் பின்னடைவின் தவிர்க்க முடியாத ஆரம்பமானது வழு அமைப்பின் மேலும் தாங்க முடியாத சுமையை திணிப்பதோடு கோர்ப ரேட் வங்குரோத்தின் ஒரு தொடரான பிரதிபலிப்புக்களால் பயமுறுத்து கின்றது. மேலும் 65 ஆண்டுகளுக்கு முன்னர் ட்ரொட்ஸ்கி போலி மூலத னத்தின் பெருக்கம் முதலாளித்துவ பொருளாதாரத்தின் வங்குரோத்தினை பிரதிபலிக்கும் கண்ணாடி என குறிப்பிட்டார். கோடானு கோடியான சகல கடன்களும் மூலதனத்தின் மீதான கோரிக்கையை பிரதிநிதித்துவம் செய்கின் றது, அவை ஒன்றில் மறைந்துவிட்டன அல்லது அவை இன்னமும் சிருஷ் டிக்கப்படவுள்ளன. தொடர்ந்து இருந்துவராத மூலதனத்தில் எனையுர

கறந்தெடுக்க முடியாது. உயிர்காவும் ஊழியத்தில் இருந்து – தொழிலாள வர்க்கத்தில் இந்தே கடனை தாங்கிப் பிடிப்பதற்கான அந்த மூலதனம் பெறப்பட்டாக வேண்டும். அதனை வேலை செய்பவர்களை உக்கிரமாகச் சுரண்டுவதன் ஊடாகவும் அதே சமயத்தில் தேசிய வருமானத்தின் தொழிலாளர்களின் பங்கினை குறைப்பதன் மூலமுமே பூர்த்தி செய்ய முடியும்

148. இக்கொள்கையை அமுல் செய்வதானது தொழிலாளர் இயக்கத்தில் உள்ள முதலாளித்துவ வர்க்க ஏஜன்டுகளின் ஒதுலைப்பிலேயேத் முற்றிலும் தங்கியுள்ளது. ஆனால் இந்தத் துரோகிகள் தமது உள்ளார்ந்த விருப்புகளுக்கிடையே இப்பொறுப்புக்கு சமமாக நிரூபிக்க முடியாதவர்கள். இலாப முறையின் முடிவுகளுக்கு எதிரான தொழிலாள வர்க்கத்தின் கிளர்ச்சியானது, முதலாளித்துவ அமைப்பின் நெருக்கடியின் தவிர்க்க முடியாத ஒரு பின்விளைவாகும் அந்தக் கிளர்ச்சியை புரட்சிகர வழியில் வழி நடாத்துவது நான்காம் அகிலத்தின் வரலாற்றுப் பொறுப்பாக துஇருந் வருகின்றது.

# ஏகாதிபத்திய யுத்தத்திற்கு எதிரான போராட்டம்

149. தேசிய அரச முறையின் வரையறைகளுக்கு எதிரான உலகப் பொருளாதாரத்தின் உற்பத்திச் சக்திகளின் கிளர்ச்சியானது ஒரு மூன்றாம் ஏகாதிபத்திய உலக யுத்தத்தினை கொண்டுள்ளது. மனித இனத்துக்கு சோசலிசமா அல்லது காட்டுமிராண்டித்தனமா என்ற பதிலீட்டை வழங்குகின்றது. இந்நூற்றாண்டில் இருதடவைகள் 1914 – 1917 லும் மீண்டும் 1939 – 1945 லும் கோடானு கோடி மனிதர்களை நாசமாக்கிய இராணுவ பேரழிவுக்குள் ஏகாதிபத்தியம் மனித இனத்தை மூழ்கடித்தது. அத்தோடு கடந்த நான்கு தசாப்தகால 'சமாதானத்தின்' போது ஏகாதிபத்தியம் பூகோளத்தின் மீது கொண்டிருந்த பேராதிக்கம் எண்ணற்ற 'சிறிய யுத்தங்களுக்கு' காரணமாகியது. இவற்றில் மேலும் பல இலட்சம் அழிந்தனர். இன்று அணுவாயுத யுத்தங்களின் தோற்றத்துடன் உலக சந்தையை மறுபங்கீடு செய்வதற்கான மற்றொரு யுத்தம் எனும்போது அது மனித இனத்தின் நாகரீகத்தின் மரணத்தையே குறிக்கின்றது. உலக வளங்களின் பெரும்பாகம் அழிவுச் சாதனங்களை உற்பத்தி செய்யதற்கே விணடிக்கப்படுகின்றது. 1972ல் 30,000 கோடி டாலர்களாக இருந்த அனைத்துலக ஆயுத செலவினங்கள் இன்று 1 ட்ரில்லியன் டாலர்களாக அதிகரித்துள்ளது.

150. ஒன்றில் தொழிலாள வர்க்கம் உலக பொருளாதாரத்துக்கும் தேசிய அரசுக்கும் இடையிலான இந்த முரண்பாட்டினை முதலாளி வர்க்கத்தினை தூக்கி வீசி, சமூக உடமையின் அடிப்படையில் முழுப் பூகோளத்தினதும் உற்பத்தி சக்திகளை மாசீரமைப்பு செய்வதன் மூலம் ஒரு முற்போக்கு பாணியில் தீர்த்து வைக்கலாம். அல்லது முதலாளித்துவம் தனது சொந்த தீர்வுகள் மூலம் உற்பத்திச் சக்திகளை பேரழிவுக்கு உள்ளாக்குவதன் மூலமும் மனித இனத்தை அழித்தொழிப்பதன் மூலமும் தீர்வுகாண முயலும். முதலாம் உலக யுத்தத்துக்கான அடிப்படைக் காரணமாக ட்ரொட்ஸ்கி குறிப்பிட்ட விளக்கம் எந்தவொரு எதிர்கால யுத்தத்துக்கான செல்லுபடியான மூலவிளக்கமாக உள்ளது: 'இன்றைய இரத்தம் தோய்ந்த மோதுதல் தேசிய பாதுகாப்புக்கான ஒரு நடவடிக்கை என்ற சகல பேச்சுக்களும் ஒன்றில் பாசாங்கானது அல்லது கண்மூடித்தனமானது' மாறாக யுத்தத்தின் நிஜ புறநிலை முக்கியத்துவமானது, இன்றைய தேசிய பொருளாதார மத்திய நிலையங்களின் சரிவும், அதற்குப் பதிலாக ஒரு உலக பொருளாதாரத்தை பதிலீடு செய்வதுமேயாகும், ஆனால் ஏகாதிபத்தியத்தின் இந்தப் பிரச்சனையை தீர்ப்பதற்கு அரசாங்கங்கள் பிரேரிக்கும் வழிகள் சகல மனித இன உற்பத்தியாளர்களதும் புத்திசாதுரியமான, ஒழுங்கமைக்கப்பட்ட வழிகளூடாக அன்றி வெற்றியீட்டிய நாட்டின் முதலாளி வர்க்கம் உலகப் பொருளாதார முறையைத் தாம் சுரண்டுவதன் ஊடாகவே அந்நாடு இந்த யுத்தத்தினூல் ஒரு பெரும் சக்தி என்ற நிலையில் இருந்து ஒரு உலக சக்தியாக பரிமாற்றம் செய்யப்படவுள்ளது.
( 'யுத்தமும் அனைத்துலகமும்' )

51 தனது பொருளாதார மேலாதிக்க இழப்புக்கு இடையேயும் அமெரிக்கா தொடர்ந்தும் மிச்சக்தி வாய்ந்த ஏகாதிபத்திய நாடாக இருப்பதோடு உலக பொலிஸ்கார பாத்திரத்தையும் தனக்கு ஒதுக்கிக் கொண்டுள்ளது. ஆனல் 1945ல் – 'அமெரிக்க நூற்றாண்டு' எனப்பட்டதன் தொடக்கத்தில் நிலவிய நிலைமைகள் பெருமளவில் உருமாற்றப்பட்டுள்ளன. முதலாளித்துவ நாடுகளுக்கிடையே ஒரு காலத்தில் தனது சொல்லை 'சட்டம்' ஆக்கிய பொருளாதார முதன்மையை இது இழந்துவிட்டது என்ற உண்மையானது அமெரிக்காவை முன்னரைவிட தனது இராணுவ பலத்தின் சாட்டுமிராண்டித்தனமான சக்தியில் தங்கியிருக்கும்படி நெருக்கியுள்ளது. ட்ரொட்ஸ்கியின் இன்னுமோர் தீர்க்க தரிசனமும் ருசுவாகப் போகின்றது: ''உலகம் பிளவுபட்டுள்ளது. இது சட்டாயம் மீண்டும் மீளப் பிரிக்கப்படும். ஜேர்மனியைப் பொறுத்தமட்டில் இது 'ஐரோப்பாவை அணிதிரட்டும்' ஓர் பிரச்சனையாக விளங்கியது. அமெரிக்க உலகினை கட்டாயம் 'அணிதிரட்ட வேண்டும்'. அமெரிக்க ஏகாதிபத்திய எரிமலையின் வெடிப்பினை நேருக்கு நேர் சந்திக்கும்படி வரலாறு மனித இனத்தை கொண்டுவந்துள்ளது.''
(யுத்தமும் நான்காம் அகிலமும் (1934)

152. யுத்தத்துக்கான அமெரிக்காவின் உந்து நல் அதன் ஏகாதிபத்திய போட்டியாளர்களுக்கு எதிராக திருப்பப்பட்டுள்ளது. இலத்தின் அமெரிக்காவினதும் உலகினதும் ஒடுக்கப்படும் மக்களின் புரட்சிகர எழுச்சிக்கு எதிராக திருப்பப்பட்டுள்ளது. ஏகாதிபத்தியத்தின் நேரடி சுரண்டலில் இருந்து பூமியின் 1/6 பங்கு நிலப்பரப்பை 1917ல் நீக்கிய சோவியத் யூனியனின் சிருஷ்டிக்கு எதிராக திருப்பப்பட்டுள்ளது.

153. க்ளோஸ்விட்ஸ் குறிப்பிட்டது போல் யுத்தம் என்பது வேறுவழிகளில் தொடரப்படும் அரசியலாகும். ஆனால் யுத்தம் சம்பந்தமான எமது நிலைப்பாடு அதைத் தொடுத்து வரும் அரச சக்திகளின் வர்க்கப் பண்பினால் நிர்ணயம் செய்யப்படுகின்றது. ஏகாதிபத்தியத்தினால் நடாத்தப்படும் எந்த வொரு யுத்தத்திலும் "முதல் வேட்டினை" யார் தீர்க்கிறார்கள் என்பதைப் பற்றிச் சட்டை செய்யாமல் 'வேர்கஸ் லீக்கின்" நிலைப்பாடு ஒரு புரட்சிகர தோற்கடிப்பு வாதமாகும் ஏகாதிபத்திய நாடுகளில் தொழிற்படும் அனைத்துலகக் குழுவின் பகுதிகள் "தமது" நாடுகளின் ஆளும் வர்க்கங்களின் யுத்த இலட்சியம் தொடர்பாக இதே போக்கினையே கடைப்பிடிக்கும் யப்பான், ஜேர்மனி, அமெரிக்கா இவற்றிற்கிடையேயான ஒரு புதிய யுத்தம் உலக மேலாதிக்கத்தின் பொருட்டு வேறுபட்ட ஏகாதிபத்திய மாயையில் தேசிய கும்பல்களுக்கு இடையே நடைபெறும் ஒரு போரினையே எளிதில் குறிக்கும். பாட்டாளி வர்க்கத்தின் சுயாதீனமான நலன்களை அடிப்படையாகக் கொண்டு அனைத்துலகக் குழு அத்தகைய யுத்தத்தின் தன்மையை சளைக்காது அம்பலப்படுத்தும், "தேசிய பாதுகாப்பு" கொள்கையை தொழிலாள வர்க்கத்தை ஏமாற்றும் மோசடியென அது எதிர்க்கப்படும். புரட்சிகர தொழிலாளர்கள் யுத்தத்திற்கு எதிராக தமது வர்க்கத்தை அணிதிரட்டப் போராடியாக வேண்டும். இம் முயற்சிகளுக்கு இடையேயும் யுத்தம் வெடிக்குமானால் நனவுள்ள முன்னணிப் படை தமது சொந்த முதலாளி வர்க்கத்தை தோற்கடிக்க கட்டாயம் தொழிற்பட வேண்டும் அத்தோடு யுத்த வெறியர்களை தூக்கிவீசும் பொருட்டு யுத்தகால உக்கிரம் கண்ட அரசியல் முரண்பாடுகளைப் பயன்படுத்த வேண்டும்.

154. முழு பூகோளத்தின் மீதும் ஏகாதிபத்தியம் கொண்டுள்ள மேலாதிக்கம் நாடுகளின் பொருளாதார, கலாச்சார அபிவிருத்திப் பாதையில் பெரும் தடைக்கல்லாக அமைகிறது. அரச எல்லைகளை கிழித்து எறிவதும் ஆபிரிக்க, ஆசிய, லத்தீன் அமெரிக்காவை பலம் வாய்ந்த இணைப்புக்களுள் கொணர்வதன் மூலம் ஒடுக்கப்படும் மக்களை ஐக்கியப் படுத்துவதும் நிச முன்னேற்றத்திற்கான இன்றியமையாத முன் நிபந்தனைகளாகும் ஆனால் இந்த இராட்சத பணியினை பாட்டாளி வர்கத்தின் தலைமையின் கீழ் வெகு ஜனங்களை அணிதிரட்டுவதன் ஊடாக மட்டுமே யதார்த்தமாக்க முடியும் இதே சமயம் பின்தங்கிய நாடுகளின் பின் தங்கிய நாடுகளின் தலாளித்துவ கும்பல்கள் ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டத்தை

சீர்குலைக்கவும் பிராந்தியத்தினை ஐக்கியமற்ற குழப்ப நிலையில் வைத்திருக்கவும் தமது சக்திக்குட்பட்ட அனைத்தையும் செய்கின்றனர். இதை அடைவதில் அவர்களின் முக்கிய கருவியாக தேசிய வெறி உள்ளது இது ஒடுக்கப்படும் மக்களின் நெறி முறையான ஏகாதிபத்திய எதிர்ப்பு தேசியவாதத்தின் விரக்தியின் ஒரு நச்சுத்தன்மையான உபபொருளாக பெறப்பட்டுள்ளது. ஈரானுக்கும் ஈராக்குக்கும் இடையேயான இரத்தம் தோய்ந்த மோதுதல் போன்ற இரண்டு ஒடுக்கப்படும் நாடுகளுக்கு இடையேயான உடன்பிறப்பைக் கொல்லும் யுத்தங்கள் அரசியல் பொருளாதார ஐக்கியத்துக்கான வரலாற்று பாகுபடுதலின் உருக்குலைக்கப்பட்ட வெளிப்பாடுகள் ஆகும். மேலும் கடந்த காலத்தில் இந்தியா பாகிஸ்தானிடையே பிடிக்கப்பட்டது போன்ற இந்த யுத்தம் வெகுஜனங்களை அரச இயந்திரத்துடன் கட்டிப்போடும் முதலாளி வர்க்கத்தின் நலன்களுக்கு சேவகம் செய்கின்றது: அத்தகைய யுத்தங்களில் தமது சொந்த முதலாளி வர்க்கத்தின் கொள்கைகளுக்கு பூரண எதிர்ப்பினை தெரிவிப்பது தொழிலாள வர்க்கத்தின் கடமையாகும்.

155. சீரழிந்த ஒன்றாக விளங்கிய போதிலும் சோவியத் யூனியனை நாம் ஒரு தொழிலாளர் அரசாக கணிப்பதால் அமெரிக்காவாலோ அல்லது வேறு ஏதும் ஏகாதிபத்திய சக்திகளால் அதற்கு எதிராக தாக்குதல் இடம் பெறும் சமயத்தில் சோவியத் ருஷ்யாவை காக்குமாறு அனைத்துலக குழு தொழிலாள வர்க்கத்தை வேண்டுகின்றது. வெடிப்புக்கு இட்டுச்செல்லும் உடனடிச் சூழ்நிலைகளைக் கருதாது அத்தகைய ஒரு யுத்தத்தில் பிரச்சனைக்குரிய விடயம் 1917 அக்டோபர் புரட்சி மூலம் உருவாக்கப்பட்ட தொழிலாளர் அரசின் உயிர் நீடிப்பும் அதன் நீடித்துநிற்கும் சமூக தேட்டங்களான தேசியமயமாக்கப்பட்ட சொத்து உறவுகளுமேயாகும். சீனு, வியட்னும், கிழக்கு ஐரோப்பிய நாடுகள் தொடர்பாகவும் நாம் இதே நிலைப்பாட்டினையே கொண்டுள்ளோம். இவற்றினை ட்ரொட்ஸ்கிச இயக்கம் உருக்குலைந்த தொழிலாளர் அரசுகளாக இனங்காண்கின்றது. எவ்வாறெனினும் ஏகாதிபத்திய தாக்குதலுக்கு எதிராக ருஷ்யாவையும் சீனுவையும் பாதுகாப்பதானது அதன் ஸ்டாலினிச தலைமைகளுக்கு எந்தவொரு அரசியல் ஆதரவினை வழங்குவதையோ அல்லது இந்த உருக்குலைந்த அல்லது சீர்குலைந்த தொழிலாளர் அரசுகள் எடுக்கும் எந்தவொரு இராணுவ நடவடிக்கைக்கும் அனைத்துலக குழு ஆதரவளிக்கும் என்பதையோ குறிக்காது. உதாரணமாக அனைத்துலக குழு சோவியத் யூனியனின் ஆப்கானிஸ்தான் மீதான ஆக்கிரமிப்பை எதிர்த்தது. இது ஒரு சிறிய தேசத்தின் மீதான கர்வம் நிறைந்த பிற்போக்கு தாக்குதலாகும்.

156. வரலாற்று ரீதியில் ஒடுக்கப்படும் ஒரு நாட்டின் மீது உதாரணமாக மத்திய அமெரிக்கா, தென் அமெரிக்கா, கரிபியன் நாடுகள் ஏனைய சகல அரைக் காலனித்துவ நாடுகள் ஆகியவற்றின் மீதான அமெரிக்கவி

னதோ அல்லது வேறு ஏகாதிபத்திய நாட்டினதோ தாக்குதல் அனைத்துலகக் குழுவினதும் வேர்க்கர்ஸ் லீக்கினதும் அதே இணக்கமற்ற எதிர்ப்பினை உடன் வேண்டி நிற்கும். அத்தகைய ஒரு யுத்தத்தில் நாம் அனைத்துலக பாட்டாளி வர்க்கத்தின் நலன்களின் பேரில் ஒடுக்கப்படும் நாட்டின் வெற்றியையே வேண்டுவோம். ஒடுக்கப்படும் தேசங்களின் போராட்டங்களை பொறுத்தமட்டில் யுத்தம் தொடர்பாக மார்க்சிஸ்டுகளின் அணுகுமுறை அஹிம்சாவாதத்தினை இணக்கமற்று எதிர்ப்பதனை குறிக்கின்றதை சுட்டிக் காட்டியாக வேண்டும் அது மத்தியதர வர்க்க சமூக கண்ணோட்டத்தை வெளிப்படுத்துகின்றது. இது ஒடுக்கும் முதலாளித்துவ ஒடுக்குதலையும் தொழிலாள வர்க்கத்தினதும் தேசிய விடுதலை இயக்கங்களதும் உக்கிரமான எதிர்த்தாக்குதலையும் ஒரே விதத்தில் கண்டனம் செய்கின்றது. அனைத்துலக குழு சகல யுத்தங்களையும் எதிர்க்கவில்லை இது ஏகாதிபத்திய முதலாளி வர்க்கத்தால் தொடுக்கப்படும் யுத்தங்களை – ஏகாதிபத்திய யுத்தங்களை எதிர்க்கின்றது. ஆனால் நாம் ஏகாதிபத்தியத்தினால் ஒடுக்கப்படும் தேசிய இனங்கள் தேசிய விடுதலை யுத்தங்களை தொடுப்பதற்குள்ள உரிமையை ஆதரிக்கின்றோம். அத்தோடு நாம் சோவியத் யூனியனையும் உருக்குலைந்த தொழிலாளர் அரசுகளையும் ஏகாதிபத்திய தாக்குதலுக்கு எதிராக நிபந்தனையின்றி பாதுகாக்கின்றோம்.

157. அணுவாயுத ஒழிப்பு 'சமாதான சகவாழ்வுக்கு' சாதகமாக தொழிலாள வர்க்கத்தை அஹிம்சா மோசடி மூலம் ஏமாற்றும் படுபிற்போக்கு வடிவமே ஸ்டாலினிச பிரச்சாரமாகும். ஏகாதிபத்தியத்துக்கும் சோவியத் அதிகாரத்துவத்துக்கும் இடையேயான அணுவாயுத ஒப்பந்தங்கள் மூலம் சமாதானத்தை ஏற்படுத்திவிட முடியாது. ஆனால் முழு உலகிலும் யுத்தத்துக்கு காரணமாக உள்ள முதலாளித்துவத்தை புரட்சிகரமான முறையில் தூக்கி வீசுவதன் மூலம் மட்டுமே சமாதானத்தை ஏற்படுத்த முடியும். லெனின் சுட்டிக் காட்டியது போன்று தொழிலாள வர்க்கம் ஆதரவளிக்கக் கூடிய ஆயுத ஒழிப்பின் ஒரே வடிவம், ஆயுதம் தாங்கிய பாட்டாளி வர்க்கம் முதலாளி வர்க்கத்தை நிராயுதபாணியாக்குவதே.

158. நா.அ.அ.கு. பல வர்க்க 'யுத்த எதிர்ப்பு' மக்கள் முன்னணிகளை மூர்க்கமாக எதிர்க்கின்றது. அவை முதலாளித்துவ' குட்டி முதலாளித்துவ "சமாதானம் விரும்பும்" அணிகள் எனப்படுபவைகளுக்கு தொழிலாள வர்க்கத்தை அரசியல் ரீதியில் கீழ்ப்படுத்த முயற்சிக்கின்றன. யுத்தத்துக்கு எதிரான எம் போராட்டம் எப்போதும் வர்க்கப் போராட்டத்தின் வரலாற்று, அரசியல் தாக்கத்தினை அடிப்படையாகக் கொண்டது அதன் முதல் விதி பாட்டாளி வர்க்கத்தின் நிபந்தனையற்ற சுயாதீனமாகும். தொடர்ச்சியான ஏகாதிபத்திய எதிர்ப்பு கொள்கைக்கு அது அத்தியாவசியமான ஒரு முன் நிபந்தனையாகும்.

159. ஏகாதிபத்திய யுத்தத்துக்கு எதிரான போராட்டம் பாட்டாளி வர்க்க மக்களின் அணிதிரளலை வேண்டி நிற்கின்றது. தனிமைப்படுத்தப்பட்ட தனியாட்களின் நடவடிக்கைகள் — நாசகார நடவடிக்கைளை அமுல் செய்ய தனிப்பட்ட ரீதியில் மறுத்தல் — தொழிலாள வர்க்கத்தின் நனவினை வளர்க்க உதவாது. ஆதலால் அவற்றை எதிர்க்க வேண்டும். தொழிலாள வர்கத்தின் உள்ளே - சிறப்பாக பாட்டாளி வர்க்க இளைஞர்களிடையே ஒழுங்கு முறையான பிரச்சாரத்தை முன்னெடுப்பது அவசியம். அப்போது தான் அவர்கள் ஏகாதிபத்தியத்தின் தன்மையை விளங்கிக் கொள்ள கல்வியூட்டப்படுவார்கள். சகல இரகசிய இராஜதந்திரங்களுக்கும் அத்தோடு சகல பகிரங்கமானதும் இரகசியமானதுமான இராணுவ உடன்படிக்கைகளுக்கும் எதிராக ஒரு ஒழுங்கு முறையான ரச்சாரம் ஒழுங்கு செய்யப்பட்டாக வேண்டும்.

160 அனைத்துலக குழுவின் பகுதிகள் முதலாளி வர்க்கத்தின் தேசியவாதத்திற்கு எதிராக பாட்டாளி வர்க்க அனைத்துலகவாத கொள்கைகளை நிலைநிறுத்த வேண்டும். அனைத்துலகக் குழு அமெரிக்கா, ஐரோப்பா, உலக ஐக்கிய சோசலிச அரசுகள் என்ற சுலோகத்தினை பிரசித்தி பெறச் செய்ய வேண்டும். உலக ஏகாதிபத்தியத்திற்கு எதிரான பொதுப் போராட்டத்தில் தொழிலாள வர்க்கத்தின் சகல பகுதியினரையும் ஐக்கியப்படுத்த அது சகல குடிவரவு எதிர்ப்பு தப்பெண்ணங்களுக்கும் இனவாத சக்திகளுக்கும் எதிராக பிரச்சாரம் செய்ய வேண்டும்.

161. இங்கு ட்ரொட்ஸ்கியின் வார்த்தைகளை உச்சாடனம் செய்வது மட்டும் அவசியமாக உள்ளது: 'எமது சகாப்தத்தில் அனைத்துலக கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டு பாட்டாளி வர்க்கத்தின் உலக கட்சியின் அணியில் சேரும் இயக்கம் மட்டுமே தசிய மண்ணில் வேரோட முடியும் எ பதில் எவ்விதமான சர்ச்சைக்கும் இடமில்லை. யுத்தத்துக்கு எதிரான போராட்டம் என்பது இன்று நான்காம் அகிலத்துக்கான போராட்டத்தையே கருதுகின்றது''
(யுத்தமும் நான்காம் அகிலமும்)

## அனைத்துலக குழுவும் மார்க்சிசத்துக்கான போராட்டமும்

162. அனைத்துலக குழுவின் மையப் பணி ஒரு ட்ரொட்ஸ்கிச முன்னணிப் படையை தொழிலாள வர்கத்தினுள் கட்டி எழுப்புவதே. அது தொழிலாள வர்க்கத்தின் பரந்த தன்னியல்பான போராட்டங்களில் தலையிடவும் ஆளும் வர்க்கத்தின் ஏஜன்சிகளான தொழிற்சங்க அதிகாரத்துவம்,

ஸ்டாலினிஸ்டுகள், மரபுவாதிகள், மத்தியவாதிகளுடன் போரிட்டு அவர்களை அரசியல் ரீதியில் தோற்கடிக்கவும் பரந்தளவிலான தொழிலாளர்களுக்கு ஒரு தெளிவான புரட்சிகர வேலைத்திட்டத்தையும் முன்நோக்கினையும் வழங்கவும் கூடியதாய் இருக்கும். எப்போதும் அனைத்துலகக் குழுவின் ட்ரொட்ஸ்கிஸ்டுகள் பாட்டாளி வர்க்கத்தின் சுயாதீன வழியை நிலைநாட்ட போராட வேண்டும். இது அனைத்து வடிவிலான சந்தர்ப்பவாதங்களுக்கும் எதிராக ஈவிரக்கமற்ற போராட்டத்தினை வேண்டிநிற்கின்றது. தொழிலாள வர்க்கம் அடைந்த ஐக்கியமின்மைக்கும் பின்னடைவுக்குமான முக்கிய காரணம் இவர்களின் சிதைவுமிக்க செல்வாக்கே.

163. புரட்சிகர அனைத்துலகவாதம் சந்தர்ப்பவாதத்தின் அரசியல் எதிரிடையாகும். ஒரு குறிக்கப்பட்ட தேசிய சூழலின் உள்ளே உருப்பெறும் சந்தர்ப்பவாதம் ஏதோ ஒரு வடிவில் அரசியல் வாழ்வின் "யதார்த்தங்கள்" எனப்படுவதற்கு ஒரு திட்டவட்டமான விதத்தில் இயைந்து போவதன் மூலம் வெளிப்பாடாகின்றது. சந்தர்ப்பவாதம் எப்போதுமே குறுக்கு வழிகளை தேடுகின்றது. ஏதோ ஒரு தேசிய உபாயத்தினை உலக சோசலிசப் புரட்சியின் அடிப்படை வேலைத்திட்டத்துக்கு மேலாக உயர்த்துகின்றது. "உலக சோசலிசப் புரட்சி" வேலைத்திட்டத்தினை பெரிதும் பொதுவானது எனக் கணித்துவிட்டு சந்தர்ப்பவாத விரும்பிகள் பெரிதும் ஸ்தூலமான உபாய ஆரம்பிப்புகள் எனப்படுபவற்றின் பின் சென்றனர். சந்தர்ப்பவாதி தொழிலாள வர்க்கத்தின் அனைத்துலகப் பண்பினை 'மறந்து போக விரும்புவதோடு மட்டுமன்றி அவர் ஒவ்வொரு நாட்டிலும் உள்ள நெருக்கடியின் தன்மையையும் ' புறக்கணிக்கின்றனர் '. இவை முரண்பாட்டில் கொண்டுள்ள அத்தியாவசியமான மூலங்கள் புறநிலை ரீதியில் ஒரு உலகளாவிய பண்பினை கொண்டன.

ஒரு அனைத்துலக வேலைத்திட்டத்தின் அடிப்படையில் மட்டுமே அவற்றை தீர்த்து வைக்க முடியும். கட்சியின் அரசியல் ஆயுதசாலையில் அதன் வாத்திசம் எவ்வளவுதான் முக்கியமானதாக இருப்பினும் எந்தவொரு தேசிய உபாயமும் ( உதாரணம் : தொழிற்கட்சியை அமைக்கும்படி கோரும் வேர்க்கஸ் லீக்கின் அழைப்பு அல்லது தொழிற்கட்சி ' இடதுசாரிகள் ' மேல் கோரிக்கைகளை வைக்கும் அவுஸ்திரலிய சோசலிச லேபர் லீக் ) அனைத்துலகக் குழுவின் உலக மூலோபாயத்தில் இருந்து பிரிக்கப்பட்ட நிலையில் அதனை ஒன்றில் அதற்கு மேலாக உயர்த்தினாலும் சரி அல்லது அதற்கு சமமாக விளக்கினாலும் சரி அதன் புரட்சிகர உள்ளடக்கத்தை பேணிக் காக்க முடியாது. எனவே தான் தொழிற்படும் நாடுகளில் உள்ள தொழிலாளர் இயக்கங்களுக்கு அனைத்துலகக் குழுவின் பகுதிகள் அளிக்கும் மைய வரலாற்று பங்களிப்பு உலக சோசலிசப் புரட்சி முன்நோக்குக்கான கூட்டானதும், ஒன்றுபட்டதுமான போராட்டமேயாகும்.

ஒரு அனைத்துலக வேலைத்திட்டத்தின் அடிப்படையில் மட்டுமே அவற்றை தீர்த்து வைக்க முடியும். கட்சியின் அரசியல் ஆயுதசாலையில் அதன் பாத்திரம் எவ்வளவுதான் முக்கியமானதாக இருப்பினும் எந்தவொரு தேசிய உபாயமும் ( உதாரணம் : தொழிற்கட்சியை அமைக்கும்படி கோரும் வேர்க்கஸ் லீக்கின் அழைப்பு அல்லது தொழிற்கட்சி ' இடதுசாரிகள் ' மேல் கோரிக்கைகளை வைக்கும் அவுஸ்திரேலிய சோசலிச லேபர் லீக் ) அனைத்துலகக் குழுவின் உலக மூலோபாயத்தில் இருந்து பிரிக்கப்பட்ட நிலையில் அதனை ஒன்றில் அதற்கு மேலாக உயர்த்தினாலும் சரி அல்லது அதற்கு சமமாக விளங்கினாலும் சரி அதன் புரட்சிகர உள்ளடக்கத்தை பேணிக் காக்க முடியாது. எனவே தான் தொழிற்படும் நாடுகளில் உள்ள தொழிலாளர் இயக்கங்களுக்கு அனைத்துலகக் குழுவின் பகுதிகள் அளிக்கும் மைய வரலாற்று பங்களிப்பு உலக சோசலிசப் புரட்சி முன்நோக்குக்கான கூட்டானதும், ஒன்றுபட்டதுமான போராட்டமேயாகும்.

164. இந்த நிலைப்பாட்டில் இருந்தே கட்சி நிதானமாக தொழிலாள வர்க்கத்துக்கு கல்வியறிவூட்டி சோசலிச வர்க்க நனவினை அபிவிருத்தி செய்கின்றது. ஒரே விஞ்ஞான புரட்சிகரக் கோட்பாடான மார்க்சிசத்தின் அடிப்படையில் மட்டுமே அரச அதிகாரத்தைக் கைப்பற்றுதற்கான தொழிலாள வர்க்க அமைப்பினை அடைய முடியும். மார்க்சிசம், தொழிலாள வர்க்கத்தின் புறநிலை புரட்சிகர பாத்திரத்தின் நனவுபூர்வமான வெளிப்பாடாகும். இது மட்டுமே ஏகாதிபத்தியத்தின் தன்மையை அம்பலப்படுத்தி தொழிலாளரின் உழைப்புச் சக்தியை கொள்வனவு செய்கையில் இடம்பெறும் முதலாளித்துவ சுரண்டல் பொறிமுறையையும், உபரி பெறுமானத்தின் திருட்டையும் விளக்கி, இலாப முறையின் அடிப்படை முரண்பாடுகளை அம்பலப்படுத்துகின்றது. இதன் மூலம் வர்க்கப் போராட்டத்தின் ஒவ்வொரு வெளிப்பாட்டினதும் அத்தியாவசியமான அரசியல் உள்ளடக்கத்தையும் அம்பலப்படுத்துவதோடு இந்த விஞ்ஞான அடிப்படையில் சோசலிசப் புரட்சியின் மூலோபாயத்தையும் உபாயத்தையும் தெளிவாக்குகின்றது.

165 மார்க்சிசம் என்பது தொழிலாள வர்க்கத்தின் தன்னியல்பாக படைக்கப்பட்ட சித்தாந்தம் அன்று. தொழிலாள வர்க்கம், புரட்சிக் கட்சியிலிருந்து சுயாதீனமாக தொழிற்சங்க நினைவுக்கு அப்பால் எதையும் அபிவிருத்தி செய்ய முடியாது என்பதை அனைத்துலக தொழிலாளர் இயக்கத்தின் முழு வரலாறும் மெய்ப்பித்து காட்டியுள்ளது. தொழிற்சங்கவாதம் — கூலிகள், தொழில் நிலைமைகளை முன்னேற்றும் பொருட்டு பரந்த தொழிலாளர் அமைப்புகளை அமைத்து, பேணுவதன் மூலம் வேலைகொள்வோருக்கு எதிராக ஐக்கியப்படவேண்டியதன் அவசியத்தை அங்கீகரிக்கின்றது. முதலாளிகளுக்கு எதிரான போராட்டத்தின் கசப்பான வரலாற்று அனுபவங்களின் மூலம் இது தொழிலாள வர்க்க இயக்கத்தின் உள்ளே தன்னியல்பாக எழுகின்றது. ஆனால் தொழிற்சங்க நனவு, அது எவ்வளவுதான் போர்க்குணம் மிக்கதாக இருப்பி

னும் முதலாளித்துவ நனவாகவே தொடர்ந்திருந்து வருகின்றது. கூலி முறையின்கீழ் தொழிலாளரின் நிலைமைகளை உயர்த்துவதை இது இயக்கமாகக் கொண்டுள்ளதேயன்றி கூலி அடிமை முறையையே ஒழித்துக்கட்டி விடுவது அன்று. நெருக்கடியினால் தொழிலாள வர்க்கம் முன்நோக்கி தள்ளப்படுகையில் முதலாளித்துவம் சிருஷ்டித்த சகதியில் இருந்து வெளியேற அது தீர்க்கமாக முயல்கின்றது. கட்சியின் தலையீடு இல்லாமல் தொழிற்சங்க போராட்டத்தை ஒரு இன்றியமையாத பாகமாக கொண்ட உலகளாவிய ரீதியிலான வர்க்கப் போராட்டத்தின் முழு அரசியல், புரட்சிகர உள்ளடக்கத்தை அதனால் புரிந்துகொள்ள முடியாது.

166. கட்சியும் அதன் அங்கத்தினர்களும் தொழிலாள வர்க்கத்தின் உள்ளே கட்சியின் அரசியல் வேலைத்திட்டத்திற்கும் கொள்கைகளுக்கும் எப்போதும் போராட வேண்டும். இது தொழிலாளர்களின் உடனடியான மனோநிலையுடனும் நனவுடனும் முரண்பட்டு குறுங்காலத்தில் கட்சியை வெகுஜனங்களில் இருந்து தனிமைப்படுத்தும் விளைவினைக் கொணரினும் தொழிலாள வர்க்கத்துக்கு உண்மையைக் கூறப் பின்வாங்கக் கூடாது. அனைத்துலக குழு குறிப்பிட்டுள்ளது போன்று ''தனது நீண்டகால வரலாற்றுப் பணியை விஞ்ஞான ரீதியில் புரிந்து கொள்ள பாட்டாளி வர்க்கத்திற்கு கல்வியறிவூட்டுவது ஒரு கொள்கை சார்ந்த நிலைப்பாட்டை வேண்டி நிற்பதை மார்க்சிஸ்ட் புரிந்து கொண்டுள்ளான். ஆதலால் அவன் தொழிலாள வர்க்கத்தினை அரசியல் ரீதியில் தெளிவுபடுத்துவதன் இழப்பின் மூலம் கொள்வனவு செய்யப்படும் குறுங்கால இலாபங்களுக்குப் பதில் தற்காலிக தனிமைப்படுத்தலையே விரும்புகின்றான்''. *(போர்த் இன்டர்நஷனல், மார்ச் 1987)*

167. தொழிலாள வர்க்கத்தின் நனவினை அதன் புறநிலை வரலாற்றுப் பணிகள் வேண்டி நிற்கும் கட்டத்துக்கு உயர்த்தும் போராட்டமும் 'தன்னியல்புக்கு தலை வணங்காமையும்' சகல உருவிலான சந்தர்ப்பவாதத்துக்கும் எதிரான மார்க்சிசத்துக்கான போராட்டத்தின் இதயமாக விளங்குகின்றது. அத்தோடு கம்யூனிசத்தின் வரலாற்று அடிப்படைகளுக்கும் இட்டுச் செல்கின்றது. கம்யூனிஸ்ட் கட்சியின் அறிக்கையில் மார்க்சும் எங்கேல்சும் எழுதியது போல் ''கம்யூனிஸ்டுகள் தொழிலாள வர்க்கத்தின் உடனடி நோக்கங்கள் சித்தி பெறுவதற்காக, உடனடி நலன்கள் நிறைவேற்றம் பெறுவதற்காகப் போராடுகிறார்கள், ஆனால் தற்காலத்திய இயக்கத்தில் இந்த இயக்கத்தின் எதிர்காலத்தையும் அவர்கள் பிரதிநிதித்துவம் செய்து பேணிப் பாதுகாக்கின்றனர்.''

168. அனைத்துலகக் குழுவின் தொழிற்பாடு நான்காம் அகிலத்தின் ஸ்தாபக பத்திரத்தில் ட்ரொட்ஸ்கியினால் அபிவிருத்தி செய்யப்பட்ட இடைமருவு வேலைத்திட்டத்தினை அடிப்படையாகக் கொண்டுள்ளது. 50 ஆண்டுகளின் பயணத்தின் பின்னரும் மூக்கியமான கோட்பாட்டு,மூலோபாய வேலைத்திட்ட

கருத்துருக்கள் அவற்றின் எந்தவொரு வரலாற்று சம்பந்தத்தினையும் இழந்து விடவில்லை. ட்ரொட்ஸ்கி பிரேரித்த குறிப்பாக 'இடைமருவு கோரிக்கைகள் – நகரும் அளவுத்திட்ட கூலியும் மணித்தியாலங்களும், டச்டரி கமிட்டிகள், தொழில் இரகசியங்களை ஒழித்தலும் கைத்தொழிலின் தொழிலாளர் கட்டுப்பாடும், தனியார் வங்கிகளை சுவீகரித்தலும் வங்கித் தொழிலை தேசிய மயமாக்கலும்' தொழிலாளர் பாதுகாப்பு படைகளை அமைத்தல், தொழிலாளர் — விவசாயிகள் அரசாங்கத்தை நிறுவுதல் – தொழிலாள வர்க்கத்தை புரட்சிகரமான முறையில் அணிதிரட்டுவதற்கான ஒரு நடைமுறை நெம்புகோல் முக்கியத்துவத்தினைக் கொண்டுள்ளது.

169. இந்த இடை மருவு கோரிக்கைகளை முன்வைக்கையில் அனைத்துலகக் குழுவின் பகுதிகள் உலக நெருக்கடியின் முதிர்ச்சிக்கும் பாட்டாளி வர்க்க மக்களின் நனவின் முதிர்ச்சியின்மைக்கும் இடையேயான இடைவெளியை தாண்டப் பாடுபடுகின்றது. இதே காரணத்துக்காக இடைமருவு கோரிக்கைகளை எழுப்புகையில் இவை அடிப்படையாகக் கொண்ட புரட்சிகர சோசலிச முன்நோக்கில் இருந்து தனிமைப்பட்ட விதத்திலோ அல்லது அதற்கு எதிரிடையாகவோ ஒருபோதும் பயன்படுத்தப்படலாகாது. இடைமருவு வேலைத்திட்டத்தினை சந்தர்ப்பவாத அடிபணிவுகளுக்கும் மத்தியவாத தட்டிக்கழிப்புகளுக்குமான ஒரு மருந்துச்சீட்டாக மாற்றும் அவர்களின் இடைவிடாத முயற்சிகள் பப்லோவாதிகளின் காட்டிக் கொடுப்புக்களுள் முக்கிய இடம் பிடித்திருந்தது. அதாவது தனிமையான கோரிக்கைகளை அவற்றின் நிச புரட்சிகர அடிப்படையில் இருந்து அப்புறப்படுத்தி அவை தொழிலாள வர்க்கத்துக்கு ஒரு நிச புரட்சிகர வேலைத்திட்டத்துக்கான ஒரு பதிலீடாக வைக்கப்படவேண்டும் என சிபார்சு செய்வதாகும். திரிபுவாத விதமுறையினை முன்மொழிபவரின்படி இடைமருவு கோரிக்கைகள் வெகுஜனங்களின் பின்தங்கிய நனவினை எதிர்த்துப் போராடுவதற்கு மாறாக அவர்களுக்கு அடிபணிந்து போவதற்கான கருவிகளாகும் சாராம்சத்தில் இந்நிலைப்பாட்டினை முன்மொழிபவர்கள் தொழிலாள வர்க்கத்தின் உள்ளே சோசலிச நனவுக்கான எந்தவொரு அப்பட்டமான போராட்டத்தின் அவசியத்தினையும் நிராகரிக்கின்றனர். தொழிலாளர் இயக்கத்துக்கு மார்க்சிச கலாச்சாரத்தின் செழிப்பான பலாபலன்களை பொறுமையாக ஊட்டுவது அவசியம் இல்லை என இவர்கள் தெரிவிக்கின்றனர்கள். மாறாக அவர்களின் இறுதி இலக்கு பற்றிய நனவே இல்லாமல் வெகுஜனங்களைக் கவரக் கூடிய ஒரு சில சாதாரண கோரிக்கைகளைப் பொறுக்கி எடுத்து அவர்களை சோசலிசப் புரட்சிக்கு கிட்டுச் சென்றால் போதும் என நினைக்கின்றனர்கள்.

170. பப்லோவாத சந்தர்ப்பவாதத்தின் தாற்பரியத்தில் இடைமருவு வேலைத்திட்டத்துக்கு மறு அர்த்தம் கற்பிக்கும் முழு முயற்சி சோசலிசத் தொழிலாளர் கட்சியினால் மேற்கொள்ளப்பட்டது. 1963ம் ஆண்டின் மறுஐக்கியத்தின் பல்லாண்டுகளின் பின்னர் வேலைத்திட்டத்தை

"ஒரு பலநோக்கு ஆயுத பொதிக்கு" ஒப்பிட்டது. ", ஆதலால் ஒரு கைத்திறனுன அதைக்கொண்டு செய்யக் கூடியதை நாம் செய்கின்றோம். ஒரு குறிக்கப்பட்ட வேலையை செய்ய வேண்டியிருப்பின் அந்த வேலைக்கு நன்கு பொருத்தமான குறிக்கப்பட்ட கருவியை அந்தப் பொதியி தேடு கின்றோம். வெகுஜன இயக்கத்தின் வளர்ச்சிக்கட்டத்துக்கு பொருத்தமான தும் காலோசிதமானதும் வெகுஜனங்களின் நனவு, வேலைத்திட்டத்தின் இந்த அல்லது அந்த மூலகத்தின் மீது தொழிற்படும் அவர்களின் தயார் நிலைக்கும் ஏற்றவாறு அந்த இடைமருவு வேலைத்திட்டத்தில் இருந்து வெளி யே எடுக்கின்றோம். அந்தத் தருணத்துக்கு ஏற்றதை அது கொண்டிருக்கா விட்டால் ஒன்று அல்லது இரண்டினை தயாரிக்க வேண்டியிருக்கும்." (புரட்சிகர வழியில் இடைமருவு வேலைத்திட்டத்தின் பாத்திரம் – ஜோர்ஜ் நொவாக்)

171. ட்ரொட்ஸ்கி, இடைமருவு வேலைத்திட்டத்தின் நோக்கத்தையும் முக்கியத்துவத்தையும் விளக்குகையில் இதற்கு நேர் எதிரானதை சொல்லி வைத்துள்ளார். இடைமருவு வேலைத்திட்டம் அமெரிக்க தொழிலாளர்களுக்கு அதிகம் உயர்ந்தது (முன்னேற்றமானது) என எச்சரிக்கை செய்தவர்களுக்கு பதிலளிக்கையில் ட்ரொட்ஸ்கி கூறியதாவது: "இங்கு நாம் எம்மையே கேட்க வேண்டும், வேலைத்திட்டம் தொழிலாளர்களின் மனேநிலையுடன் ஒத்துப்போக வேண்டுமா அல்லது நாட்டின் இன்றைய புறநிலை பொருளா தார சமூக நிலைமைகளுடன் ஒத்துப் போகவேண்டுமா இது மிகவும் முக் யமானதோர் கேள்வியாகும். வேலைத்திட்டம் தொழிலாளர்களின் பின்த் தங்கிய நிலையைக் காட்டிலும் தொழிலாள வர்க்கத்தின் புறநிலையான பணிகளைக் கட்டாயம் பிரதிபலிக்க வேண்டும். இது சமுதாயத்தை அப் படியே பிரதிபலிக்க வேண்டுமேயன்றி தொழிலாள வர்க்கத்தின் பின்தங்கிய நிலைமையை அன்று. இது பின்தங்கிய நிலைமையை தாண்டி அதனை வெற்றி கொள்வதற்கான ஒரு கருவியாகும். எனவேதான் நாம் எமது வேலை திட்டத்தில் முதலாளித்துவ சமுதாயத்தின் – முதல் வரிசையில் அமெரிக்கா உட்பட – சமூக நெருக்கடியின் முழு தீவிரத்தையும் கட்டாயம் வெளிப்ப டுத்த வேண்டும். எம்மில் சார்ந்திராத புறநிலை நிலைமைகளை நாம் ஒத்திப் போடவோ அல்லது திருத்தவோ முடியாது. இந் நெருக்கடியை வெகுஜன ங்கள் தீர்த்துக் கொள்வர் என நாம் உத்தரவாதம் அளிக்க முடியாது ஆனல் நாம் நிலைமையை அப்படியே பிரதிபலிக்க செய்ய வேண்டும். அது தான் வேலைத்திட்டத்தின் பணி. இந்த நிலைமையில் ஒரு புரட்சிக் கட்சி என்ன செய்ய முடியும்? இந்நிலைமையில் இருந்து பெருக்கெடுக்கும் வரலா ற்றுப் பணிகளைப் பற்றி – தொழிலாளர்கள் இதற்கு பக்குவம் அடைந்து ள்ளார்களோ இல்லையோ முதலிடத்தில் புறநிலை நிலைமைப்பற்றி ஒரு தெளி வானதும் நேர்மையானதுமான சித்திரத்தை வழங்க வேண்டும். எமது பணிகள் தொழிலாளர்களின் மனேநிலையில் தங்கி இருக்கவில்லை. முன்னே ற்றமான தொழிலாளர்களுக்கு வேலைத்திட்டம் நிதர்சனமாக்கி வழங்க

வேண்டியது அதுவே சிலர் கூறலாம்: நல்லது, வேலைத்திட்டம் ஒரு விஞ்ஞானபூர்வமான வேலைத்திட்டம், இது புறநிலை நிலைமையுடன் தொடர்புபட்டுள்ளது - ஆனால் தொழிலாளர்கள் இந்த வேலைத்திட்டத்தை ஏற்காது போனால் இது மலடாகிவிடும் சாத்தியமே. சோசலிசப் புரட்சியை தவிர்ந்த வேறு வழியில் நெருக்கடி தீர்க்கப்படமுடியாது இருப்பதால் இது தொழிலாளர் நசுக்கப்படுவதை மட்டுமே குறிக்கின்றது. அமெரிக்க தொழிலாளி உரிய காலத்தில் இந்த வேலைத்திட்டத்தை ஏற்காது போனால் அவன் பாசிச வேலைத்திட்டத்தை ஏற்கும்படி நெருக்கப்படுவான். அத்தோடு நாம் எமது வேலைத்திட்டத்துடன் தொழிலாள வர்க்கத்தின் முன் தோன்றும் பொழுது அவர்கள் எமது வேலைத்திட்டத்தை ஏற்றுக்கொள்வார்கள் என்பதற்கு எந்தவிதமான உத்தரவாதங்களையும் வழங்க முடியாது. இதற்கு நாம் பொறுப்பேற்க முடியாது. நமக்கு மட்டுமே நாம் பொறுப்பேற்க முடியும். (இடைமருவு வேலைத் திட்டம் பற்றி லியோன் ட்ரொட்ஸ்கி – 1938 மே 19)

172. தொழிலாள வர்க்கத்தின் ஒவ்வொரு தன்னியல்பபான போராட்டத்திலும் சம்பந்தப்பட்டுள்ள தொழிலாளர்களின் உடனடி காரணமும், உடனடி இலக்குகளும் என்னவாக இருந்தபோதும் – அனைத்துலகக் குழுவின் பகுதிகள் கம்யூனிசப் பொருளாதாரப் போராட்டத்துக்கும் முதலாளித்துவத்திற்கு எதிரான முழு தொழிலாள வர்க்கத்தின் அரசியல் போராட்டத்துக்கும் இடையேயான நிலையான தொடர்பினை பொறுமையுடனும் சளைக்காமலும் விளக்க வேண்டும். போராட்டத்தில் தொழிலாள வர்க்கத்தின் உள்ளே தேசிய சோசலிசத்தின் வெளிப்பாடுகளின் சகல வடிவங்களுக்கும் எதிராக விசேட கவனம் செலுத்த வேண்டும். இவை முதலாளி வர்க்கத்தினாலும் தொழிலாள வர்க்கத்தில் உள்ள அதன் அடிவருடிகளாலும் கொடூரத்துடன் திணிக்கப்படுகின்றது. நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழு அனைத்து பின்னேற்றமான தப்பெண்ணங்களுக்கும் – பாதுகாப்புவாதம், தேசிய ஏகபோகம், குடிவதிவு எதிர்ப்பு உணர்வு, இனவாதம் – எதிராக இணக்கமின்றி போராட வேண்டும். இவை அனைத்துலக பாட்டாளி வர்க்கத்தின் ஒரு பகுதியை மறு பகுதிக்கு எதிராக குழிதோண்டச் செய்கின்றது.

173. ஒரு புறநிலையான பரஸ்பரம் சார்ந்த முழுமை என்ற விதத்தில் உலகப் பொருளாதாரத்தின் அபிவிருத்திக்கும் காலாவதியான தேசிய-அரசுகள் முறைக்கும் இடையேயான சீர்செய்ய முடியாத முரண்பாட்டினால் ஆளுமைப்படுத்தப்படும் முதலாளித்துவ உலக நெருக்கடியின் புதிய கட்டமானது உலகளாவிய ரீதியில் தொழிலாள வர்க்கத்தின் ஒரு புரட்சிகர எழுச்சிக்கான உந்து சக்தியாக உள்ளது. அனைத்துலக பாட்டாளி வர்க்கத்தின் பல்லின தேசிய கண்டங்களையும் தனியொரு படையாக ஐக்கியப்படுத்தும் அந்த மாபெரும் வரலாற்று இலக்கினை இன்று அடைய முடியும்;

உலகத் தொழிலாளர்களே ஒன்றுபடுங்கள்! என்ற புரட்சிகர மார்க்சிசத்தின் போர்க்குரல் ஒவ்வொரு நாட்டிலும் வர்க்கப் போராட்டத்தின் அடிப்படையாகும். நீண்ட காலத்துக்கு முன்பே செத்துப்போய்விட்ட இரண்டாம், மூன்றும் அகிலங்களின் நாற்றம் எடுத்த மிச்ச சொச்சங்களான பளம் ஸ்டாலினிச, சமூக ஜனநாயக கட்சிகள் தேசிய அரசு முறையையும் அதன் முதலாளித்துவ எஜமானர்களையும் என்றுமில்லாத பெரும் கையாலாகாத் தனத்துடன் பற்றிக் கொண்டுள்ளனர்.

இவ்வாறு நான்காம் அகிலத்தின் சகாப்தம் வந்துள்ளது. நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் கடமையானது, சர்வதேச போராளிகளை ஒழுங்கமைத்து, இவ்வேலைத்திட்டத்தின்பால் தீர்க்கமாக செயல்படவைத்து, நான்காம் அகிலத்தின் பதாகையில் தொழிலாள வர்க்கத்தை அணிதிரட்டி, வரவிருக்கும் உலக சோசலிசப் புரட்சிக்கான வெற்றியைத் தயார் செய்வதாகும்.

57. (அ). தமது வேலைத்திட்ட திரிப்புக்களையும், ஸ்டாலினிச குற்றங்கள் இரண்டினையும் மூடி மறைப்பதன் மூலம் பப்லோவாதிகள், நான்காம் அகிலத்தை ஸ்டாலினிசத்துக்கு எதிரான புரட்சிகரப் போராட்டங்களில் இருந்து திசை திருப்பவும், அதிகாரத்துவம் பற்றிய நப்பாசைகளை வளர்க்கவும், ட்ரொட்ஸ்கியின் ஆய்வுகளின் உள்ளடக்கத்தை திரிக்கவும், அதன் புரட்சிகர முனைப்பை மழுங்கடிக்கவும், நான்காம் அகிலத்தின் சுயாதீனமான வேலைத்திட்டத்தினை கரைப்பதை நியாயப்படுத்தவும் முயன்றனர். வரலாற்றினால் தவறானதென நிரூபிக்கப்பட்டுள்ள பப்லோவாதிகளின் ட்ரொட்ஸ்கிசம் பற்றிய இந்தப் உருட்டுப் புரட்டுக்களை நாம் மீண்டும் நினைவு கூர்வது என்பது ஒரு புலமைவாத பயிற்சி அன்று. ஸ்டாலினிசத்தின் நெருக்கடியில் முன்வைக்கப்பட்டுள்ள இந்தப் புதிய அரசியல் சவால்களுக்கு முகம்கொடுக்க திரிபுவாதத்துக்கு எதிரான போராட்டத்தின் படிப்பினைகள் முழுமையை உள்ளீர்த்துக் கொண்டாக வேண்டும்.

# சோவியத் யூனியன் இன்று

57. (ஆ). அதிகாரத்துவ சுயசீர்திருத்தத்தின் நீண்ட நிகழ்வுப் போக்கில் புதிய மற்றும் உச்சக்கட்டத்திற்கு அப்பால், பெரஸ்துரொய்கா மற்றும் கிளாஸ் நோஸ்த்—அந்த வகையான முட்டாளின் கையிலுள்ள பித்தளைத் தங்கம் ஆர்வத்துடன் உலகெங்கிலும் உள்ள சந்தர்ப்பவாதிகளால் தழுவிக்கொள்ளப்படுகிறது. சர்வதேச தொழிலாள வர்க்கத்தையும் மற்றும் சோவியத் யூனியனுக்குள்ளேயே அக்டோபர் புரட்சி வெற்றிகளைத் தாக்கும் வண்ணம், ஏகாதிபத்தியத்துடனான அதிகாரத்துவத்தின் கூட்டை பண்பியல் ரீதியாக ஆழப்படுத்துவதை இது பிரதிநிதித்துவம் செய்கிறது அதிகாரத்துவ ஜாதி, தனது ஆட்சிக்கான உறுதியான சமூக அடித்தளங்களை நிர்மானிப்பதற்கான — அதாவது அதனையே ஒரு உண்மையான ஆளும் வர்க்கமாக உருமாற்றிக் கொள்ளும் முயற்சிகள்—கோர்பச்சேவினால் கடைப்பிடிக்கப்படும் கொள்கைகளிலும், அவை மிகவும் விடாப்பிடியானதாகவும் மற்றும் நனவாகவும் வெளிப்படுகிறது.

57. (இ). ஸ்டாலினிசம் நீண்ட காலத்துக்கு முன்பே உலகப் புரட்சி வேலைத்திட்டத்தை நிராகரித்து விட்டது. ஆனால் தொழிலாள வர்க்கத்தை ஏமாற்றும் பொருட்டு, ஏகாதிபத்தியத்திற்கு எதிரான போராட்டத்துடன் சோவியத்யூனியன் பெயரளவில் இனங்காட்டிக் கொள்வதைப்பேணுவது அவசியம் எனக் கண்டது. சர்வதேச முதலாளித்துவ வர்க்கத்துடன் நெருக்கமான உறவுகளைப் பெறவேண்டி, கோர்பச்சேவ் அக்டோபர் மரபுகளுடனான இந்த பெயரளவிலான தொடர்பினையும் கூட நிராகரித்து விட்டார். சோவியத் கம்யூனிஸ்ட்டுக் கட்சியின் (சி. பி. எஸ். யூ.) 27வது காங்கிரஸ், சமாதான சகவாழ்வு ஒரு ''திட்டவட்டமான வர்க்கப் போராட்டம்'' என்ற நீண்ட காலக் கோரிக்கையையும் உத்தியோகப் பூர்வமாக நிராகரித்ததோடு, யுத்தத்தின் வெடிப்பிலிருந்து எழும் ஏகாதிபத்தியத்திற்கெதிரான புரட்சிகர எழுச்சிகள் தொடர்பான குறிப்புக்களையும் அதனுடைய வேலைத்திட்டத்திலிருந்து நீக்கியுள்ளது. ஜூலை 1988—ல் வெளிவிவகாரக் கொள்கை நிபுணர்களிடம் மாநாட்டில், ''பகைமையுடைய இரு அமைப்புகளுக்கிடையிலான போராட்டம் இந்த தசாப்தத்தின் ஒரு தீர்மானிக்கும் போக்கை இனி கொண்டிருக்

காது'' என்று சோவியத் வெளிவிவகார அமைச்சர் எட்வாட் செவர்நட்சே கூறினர். மற்றும் சுற்றுப்புறசூழல் கேடுகள் வறுமை போரின் பிரச்சினைகள் ஆகியவை முதலாளித்துவத்திற்கெதிரான போராட்டத்துடன் சம்பந்தமில்லாதுடன், அதற்கும் மேலான முக்கியத்துவம் உடையதாகி விட்டன என்றும் அவர் வலியுறுத்தினர்.

57. (ஈ)ம், கோர்பச்சேவ் தனது ''பெரஸ்துரொய்கா'' என்ற நூலில் ''வர்க்க நலன்களுக்கு மேலாக அனைத்து மனித இனத்தினதும் பொது நலன்களுக்கு முன்னுரிமை'' என்பதில் தனது நம்பிக்கையை உலகுக்குப் பிரகடனம் செய்கிறர் இந்த சொற்றொடர், கோர்பச்சேவின் கொள்கைகளை வழி நடத்தும் முழுமையான முதலாளித்துவ வர்க்கக் கண்ணோட்டத்தினை அம்பலமாக்குகின்றது. தம்மேல் தொழிலாள வர்க்கத்தினல் திணிக்கப்பட்ட வரையறைகளில் இருந்து முழுமையாய் விடுபடுவதற்கான அதிகாரத்துவத்தின் தவிப்பினை இது காட்டுகின்றது. ''வர்க்க நலன்களை'' வெறுமனே பிரதிநிதித்துவம் செய்யும் அரச சொத்துக்களைப் பேணுவதற்கு எதிராக கோர்பச்சேவ் ''அனைத்து மனித இனத்தினதும்'' நலனின் பேரில் தனிச்சொத்துடமைக்கும் தனிப்பட்ட சொத்துத்திரட்சிக்கும் எதரான சட்டங்களை நீக்கிவிட வாதிட்டு வருகின்றர்.

90. (அ), பப்லோவாதிகள் சுயாதீனமான பாட்டாளி வர்க்கப் புரட்சித் தலைமையின் அபிவிருத்தியை இடைவிடாது எதிர்த்து வந்த வேளையில், தேசிய முதலாளித்துவம் தமது சொந்த நலன்களை பலப்படுத்திக்கொள்ள, ஏகாதிபத்திய எதிரப்புப் போராட்டங்களில் பரந்த மக்களின் தியாகங்களை சுரண்டிக் கொண்டது. இது வட அல்ஜீரியா, பங்களாதேஷ் சிம்பாப்வே, மொசாம்பிக் போராட்டங்களில் வெளிப்பட்டது எனபதை எடுத்துக் கூறுவதற்கான சில உதாரணங்கள் மட்டுமே ஆகும். ஈரானில் முதலாளித்துவ வர்க்கம் ஈராக்குடன் சகோதரர்களைக் கொல்லும் மரணயுத்தத்திற்கு புரட்சியினை இட்டுச்சென்றமை, பாரசீக வளைகுடாவில் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் கரத்தை வலுப்படுத்தியது.

90. (ஆ). மிக அண்மைக்காலத்தில் ஏகாதிபத்தியத்தை எதிர்த்து ஒரு உறுதியான போராட்டத்தினை நடத்தும் தேசிய முதலாளித்துவத்தின் இயல்பான இயலாமையானது, பி. எல். ஓ. தமிழ் புலிகள் மற்றும் நிகராகுவாவன் சாண்டினிஸ்டாகளால் தெளிவாகப் படம் பிடித்துக் காட்டப்பட்டது.பாலஸ்தீனிய சுயநிர்ணயத்திற்கு எதிரான மிகக் கசப்பான எதிரியான, பிற்போக்கு அரசு முதலாளித்துவ வர்க்கத்தின் முந்தானையில் முடிச்சுப்போட்டுக் கொண்டுள்ள பி. எல். ஓ. ஆனது, காசா மற்றும் மேற்குக்கரையில் உள்ள இளைஞர்கள், தொழிலாளர்களது இயக்கத்தை பாலஸ்தீன முதலாளித்துவம் ஏற்றுக்கொள்ளும் வரம்புகளுக்குள் கட்டுப்படுத்தி வைததிருக்க முயன்றது அரபாத்தின் கொள்கைகள் தேசிய இயக்கத்தினை மத்திய கிழக்கின் பாட்டாளி வர்க்கத்திடமிருந்து திட்டமிட்டு தனிமைப்படுத்தி வைக்கிறது.

குறிப்பு: இம்முன்னேக்கின் 57 (அ), 57 (ஆ), 57 (இ), 57 (ஈ)ம் 90 (அ) 90 (ஆ)ம், பகுதிகள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன. இவற்றினை உரிய இடத்தில் சேர்த்து வாசிக்கவும்.

— பதிப்பாளர்.

7.50
5.50
2.00
5.50
15.00
50

தொழிலாளர் பாதை வெளியீடு.

விலை. ரூபா 7.50

---

பியதாச அச்சகம் இல. 51, நாகஹவத்தை வீதி, மஹரகம.